ஒக்டோபர் 1, 2000 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE 'SUDAR OLI' සුඩර් ඔලි

வார மலர்



## புலிகள் பற்றி பொலிஸ் தகவல்: யாழ் வேட்பாளர்கள் கிலி!

## போரும் தேர்தலும்: யார் செய்யும் தவறு?

# மீண்டும் தேர்தல் வாக்குறுதிகள்: மறுபடியும் ஏமாற்றம் தானா?

**இம்முறை தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கக்கூடிய பலம் வாய்ந்த கட்சிகள் இரண்டு. அவற்றில் ஒன்று ஆளும் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி , மற்றது எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி.**

**மூன்றாவது சக்தியாகத் தலை தூக்கியிருப்பது ஜே.வி.பி. அதாவது மக்கள் விடுதலை முன்னணி.**

**இந்த மூன்று முக்கிய கட்சிகளும் தமது தேர்தல் வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றன. எல்லாம் தேர்தலுக்குத் தேர்தல் கேட்டுப் புளித்துப்போனவை. முன்னர் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. மறுபடி யும் வாக்காளர்களுக்கு ஏமாற்றம்தானா?**

**எதற்கும் மூன்று கட்சிகளின் வாக்குறுதிகளும் இங்கே சுருக்கமாகத் தரப்படுகின்றன. படித்துப் பாருங்கள்.**

## பொதுஜன ஐக்கிய முன்னணி

**21**ம் நூற்றாண்டுக்கான எமது நோக்கு என்ற தலைப்பில் பொது ஜன ஐக்கிய முன்னணி சமர்ப்பித்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருந்து:



சந்திரிக்கா குமாரணத்துங்க

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து அதிகாரத்தைப் பரவலாக்கும் புதிய அரசியல் யாப்பை நிறைவேற்றி அமுலாக்குவதை பிரதான பொறுப்பாகக் கொள்ளல்.

பிரபாகரனால் தோற்றுவிக்கப்பட்ட பயங்கரவாத இயக்கத்தைச் சகல இன, மதமக்களின் உதவி ஒத்தாசையுடன் தோற்கடிப்பது.

தனிநபர் வருமானம் , 2005ம் ஆண்டளவில் 93 ஆயிரம் ரூபாவரை அதிகரிக்கப்படும்.

பொருளாதார அபிவிருத்தி வேகத்தை 7–8 வீதம் வரை அதிகரிப்போம்.

வறிய மக்களுக்கு 2005 ம் ஆண்டளவில் நாட்டின் மொத்த வருமானத்தில் 10 வீதம் வரை கிடைக்கச் செய்வோம்.

பணவீக்கத்தை 2005ம் வருடத்தில் 5 வீதம் வரை குறைத்தல். 5 வருட காலத்தினுள் 3 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். 25 லட்சத்துக்கு அதிகமான புதிய தொலை பேசி இணைப்புகளை 5 வருடங்களுக்குள் வழங்கல்.

காஸ் பாவனையாளர் எண்ணிக்கையை 30 லட்சம் வரை அதிகரிக்கக் கூடிய திட்டங்களை அமுல்படுத்தல்.

வரவு செலவு திட்டத்தில் துண்டு விழும் தொகையை குறைத்து வங்கி வட்டி வீதத்தை 7 வீதம் வரை குறைத்தல்.

வவுனியா, திருகோணமலை, வெலிமடை,ஹம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் (தம்புள்ள மாதிரியில்) பொருளாதார நிலையங்களை உருவாக்கல்.

கடற்றொழில் துறைக்குத் தேவையான நவீன படகுகள் , உபகரணங்களில் 65 சதவீதமானவற்றை வழங்குதல்.

சமயக் கல்வி கட்டாயமாக்கப்படும்

2003ம் ஆண்டளவில் சகல துறைகளுக்குமான ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்தல்.

பல்கலைக் கழக பிரவேசத்துக்குத் தகுதி பெறும் சகலருக்கும் பல்கலைக்கழக வசதி பெற்றுக் கொடுத்தல்.

சகல பிரஜைகளுக்கும் சுகாதார காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தல்.

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வறியகுடும்பங்களுக்கு 3000 ரூபா பராமரிப்பு உதவி வழங்கப்படும். வறிய குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் போஷாக்கின்மை ஒழிக்கப்படுவதோடு சகல பிள்ளைகளும் கட்டாயமாக பாடசாலைக்கு அனுப்பப்படுவார்கள்.

2005ம் ஆண்டளவில் சேரி, குடிசைகளில் வாழ்வோருக்கு நிரந்தர வீடுகளை வழங்க தேசிய செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படும்.

கொழும்பு சுற்றுவட்டம், கொழும்பு – கண்டி, கொழும்பு – மாத்தறை, கொழும்பு–கட்டுநாயக்கா அதிவேக கடுகதிப் பாதைகளை அடுத்த வருடத்தில் ஆரம்பித்தல்.

## ஐக்கிய தேசியக் கட்சி

"உங்கள் எதிர்காலம் என்ற தலைப்பில் ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருந்து:-

எல்.ரீ.ரீ.ஈயுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல் மூலம் இனப் பிரச்சினைக்கு விரைவான தீர்வைக் காண்போம்.

தகுந்த திட்டமொன்றின் துணையுடன் யுத்த நடவடிக்கைகளைக் குறைக்கும் நுட்பங்களை மேற்கொள்வோம்.

சகலரும் இணங்கக்கூடிய அதிகாரப் பரவலாக்கல் தீர்வைக் காணும் வரை அரசியல் அமைப்பைத் திருத்த மாட்டோம்.

சிறிது காலத்துக்கு வடகிழக்கு மாகாணத்துக்கு இடைக்கால நிர்வாக சபையொன்று அமைக்கப்படும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க சுயேச்சைக் குழுவொன்று நியமிக்கப்படும்.

முப்படைகளை, சகல இனத்தவர்களும் அடங்கிய படையணியாக அமைப்போம்.

படையினருக்கான ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய சுயேச்சை கொள்வனவு அதிகார சபையொன்றை நியமிப்போம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு, நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புடைய பிரதம மந்திரிப் பதவி உருவாக்கப்படும்.

நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை 5வருடங்களாகக் குறைத்தல்.

சுயாதீன பொலிஸ், பகிரங்க சேவை, தேர்தல் லஞ்ச ஊழல் ஆணைக்குழுக்களை உருவாக்குதல். அரச துறை முக்கிய பதவிகளை நிரப்ப சுயேச்சையான அரசியலமைப்புச் சபையை உருவாக்குதல்.

அரசாங்கக், கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு உடனடியாக 2 ஆயிரம் ரூபா மாதாந்தப் படி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆட்சிக்கு வந்த உடனேயே ஓய்வூதியம் பெறும் அனைவருக்கும் ஓய்வூதியத்தை 750 ரூபாவால் அதிகரிப்போம்.

சமுர்த்தி நன்கொடையை 1000 ரூபா வரை அதிகரிப்போம். ஜனசவிய உதவி பெற்ற குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா நன்கொடை வருவாயை மீண்டும் பெற்றுக் கொடுப்போம்.

பண்டங்கள், சேவைகள் வரியை (GST) திருத்துவதற்கும், மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் பல்வேறு வரிகளை அகற்றவும் நடவடிக்கை எடுப்போம்.

வேலையற்ற பட்டதாரிகளுக்குப், பட்டதாரித் தொழில் வசதித் திட்டமொன்று ஆரம்பிக்கப்படும்.

திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல், அம்பாந்தோட்டை துறைமுகத்தை ஆரம்பித்தல், தென், வடக்கு கிழக்கு மாகாணங்களில் இரண்டு சர்வதேச விமான நிலையங்களை திறந்து வைத்தல்.

தேசிய இளைஞர் அணி ஒன்றைத் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுப்போம். 18மாதங்கள் வரை அணியின் இளைஞர் யுவதிகளுக்கு மாதாந்தம் 2 ஆயிரம் ரூபாக் கொடுப்பனவு வழங்கப்படும்.

21ம் நூற்றாண்டின் சவால்களை எதிர்நோக்குவதற்கு, தொழில் நுட்பவியல் அபிவிருத்திக்கான கல்வித் திட்டத்தை அறிமுகம் செய்வோம்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் முகம் கொடுக்க விருக்கும் பொதுப் பரீட்சை ரத்து செய்யப்படும். க.பொ.த பெறுபேறுகளின் அடிப்படையில் மட்டுமே மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவர்.



ரணில் விக்கிரமசிங்க

விவசாய உபகரணங்கள், விதை, பசளை என்பன குறைந்த விலைக்கு வழங்கப்படும்.

மீன்பிடி வள்ளங்களில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள 15குதிரைச் சக்தி மட்டுப்பாடு தளர்த்தப்படும்.

மலையக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகளும், பொது வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

20 வருட சேவையின் பின்னர் முழு ஓய்வூதியத்துடன் ஓய்வு பெற அரசாங்க ஊழியர்களுக்கு உரிமை அளிக்கும்

## மக்கள் விடுதலை முன்னணி

*"நாட்டை முன்னேற்றும் ஐந்தாண்டுத் திட்டம்" எனும் தலைப்பில் மக்கள் விடுதலை முன்னணி சமர்ப்பித்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருந்து:-*

*இன, மத, அரசியல் காரணங்களுக்காக பிரஜை ஒருவருக்கு பாகுபாடு காட்டுவது தடை செய்யப்படும்.*

*யுத்தத்தால் அழிந்துள்ள வடக்கு, கிழக்கு மற்றும் பிரதேசங்களின் பொருளாதாரம், மக்கள் சமூக வாழ்க்கைக்கான விசேட அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்.*

*நாட்டைப் பிளவுபடுத்தும், இனங்களின் உரிமைகளை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளும், இனவாதமும் தடை செய்யப்படும்.*

*இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.*

*நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை முற்றாக ஒழிக்கப்பட்டு, நாடாளுமன்ற ஆட்சிமுறை உருவாக்கப்படும்.*

*உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படுவதையும், அது பின் போடப்படாதிருப்பதையும் உறுதிப் படுத்தும் முகமாக 5 வருடத்துக்கு ஒருமுறை தேர்தல் நடத்தப்படும் நிச்சயமான திகதி, அரசியலமைப்பில் உள்ளடக்கப்படும்.*

*நாடாளுமன்ற எம்.பி.மார்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் உடனடியாக நிறுத்தப்படும்.*

*தேர்தல் ஊழல், மோசடிகளை ஒழிக்க முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதற்காக விசேட அதிகாரங்களைக் கொண்ட நீதிமன்றமொன்று அமைக்கப்படும்.*

*பயங்கரவாதத் தடைச் சட்டம் உட்பட சகல, அடக்குமுறையான சட்டங்களும் ரத்துச் செய்யப்படும்.*

*நீதிமன்ற செயற்பாடுகளில் அரசியல் தலையீடு இடம் பெறுவது முற்றாக ரத்து செய்யப்படும்.*

*விவசாய உற்பத்திகளை வழிநடத்தும் பொறுப்பு முற்றாக அரசாங்கத்துக் குரியதாக்கப்படும்.*

*5 வருட காலத்துக்குள் தேயிலை, றப்பர், தெங்குத் தோட்டங்கள் அரச தோட்டங்களாக மாற்றியமைக்கப்படும்.*

*நாடு முழுவதும் 50 கைத்தொழில் வலயங்கள் உருவாக்கப்படும்.*


*காங்கேசன் துறை சீமேந்துத் தொழிற்சாலை விரைவில் திறக்கப்படும்.*

*அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

*போஷாக்கு அற்ற பிள்ளைகளுக்கு உயர் போஷாக்கு மிக்க உணவு வகைகள் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும்.*

*பாலர் பாடசாலைப் பிள்ளைகளுக்கும், ஏனைய பாடசாலைப் பிள்ளைகளுக்கும் இலவசப் பகலுணவும், பாலும் வழங்கப்படும்.*

*பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாதிருப்பது குற்றமாக்கப்படும். இலவசமாக சீருடைகள், வழங்கப்படும்.*



விமல் வீரவன்ச

*பல்கலைக் கழகங்களுக்கு 25 ஆயிரம் மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.*

*5 வருட காலத்துக்குள் உயர் தொழில் நுட்பக் கல்லூரிகளில் 15 ஆயிரம் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.*

*ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள் பல்கலைக்கழகப் பீடங்கள் மட்டத்துக்கு தரம் உயர்த்தப்படும்.*

*வருடாந்தம் 10 ஆயிரம் ஆசிரியர்கள் உருவாக்கப்படுவதோடு இவர்களில் 50 சத வீதமானவர்கள் பட்டதாரிகளாக உருவாக்கப்படுவார்கள்.*

*60 ஆயிரம் பேருக்கு ஒரு மாவட்ட ஆஸ்பத்திரியும், 15 ஆயிரம் பேருக்கு ஒரு பிரதேச சுகாதார நிறுவனமும், 3 ஆயிரம் பேருக்கு ஒரு கிராமிய சுகாதார நிலையமும் என்ற வகையில் நாடு முழுவதும் இவற்றை நிறுவுவோம்.*

*5 வருட காலத்துக்குள் 1600 மருத்துவ நிபுணர்களும், 8,500 வைத்தியர்களும், 53 ஆயிரம் தாதிமார்களும், 8,146 மருந்தாளர்களும் உருவாக்கப்படுவார்கள்.*

*ஐந்து வருட காலத்துக்குள் 7 லட்சம் வீடுகள் நிர்மாணிக்கப்படும்.*

*தொழில் செய்யும் உரிமை அரசியல் அமைப்பில் உத்தரவாதப் படுத்தப்படுவதோடு, தொழில் கிடைக்கும் வரை தொழில் செய்யக்கூடிய வயதிலுள்ள சகலருக்கும் வாழ்வதற்கான விசேட கொடுப்பனவு வழங்கப்படும்.*

*ஐந்து வருடகால எல்லைக்குள் 26 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்.*

# சபாஷ் சுசந்திகா! ஒலிம்பிக் பதக்கம் வென்றார்



**சி**ட்னி ஒலிம்பிக் போட்டிகளில் வெண்கலப் பதக்கமொன்றை வென்று இலங்கைக்குப் புகழ் சேர்த்துள்ளார் இலங்கையின் தடகளராணி சுசந்திகா ஜயசிங்க.

பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் அந்தத் தூரத்தை 22.28 செக்கன்களில் ஓடி மூன்றாவதாக வந்து இப்பதக்கத்தை அவர் வென்றார்.

இலங்கைக்குக் கிடைத்த முதலாவது ஒலிம்பிக் பதக்கம் 1948ல் 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் டங்கன் வைற் பெற்ற வெள்ளிப் பதக்கம் ஆகும். அதன் பின்னர் இலங்கைக்குக் கிடைத்த மற்றொரு ஒலிம்பிக் பதக்கம் இதுவே.

சுசந்திகா இரண்டாவதாக வந்து வெள்ளிப் பதக்கத்தைப் பெறும் வாய்ப்பு கண்ணிமைக்கும் நேரத்திற்குள் நழுவியது.

வியாழன்று நடைபெற்ற 200 மீற்றர் இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் மேரியன் ஜோன்ஸ் 21.84 செக்கன்களில் ஓடி முதலாவதாக வந்து தங்கப் பதக்கத்தைப் பெற்றார். பஹாமஸ் நாட்டின் பௌலின் டேவிஸ் 22.27 செக்கன்களில் இரண்டாவதாக வந்து வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.

1975 டிசம்பர் 17ம் திகதி ஒரு வறிய குடும்பத்தில் பிறந்தவர் சுசந்திகா. 90களின் ஆரம்பத்தில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் அறிமுகமானதன் மூலம் புகழ் பெறத் தொடங்கினார். 1997ல் சர்வதேச மெய்வல்லுனர் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் பெற்றதன் பின் அவர் உலகின் கவனத்தைத் தன்பால் ஈர்த்தார். அதன் பின் அவருக்கு ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக இலங்கையிலிருந்து வெளியேறி அமெரிக்காவிலேயே பயிற்சிகளை மேற்கொண்டு வந்தார். அமெரிக்கரான டொனி கெம்பெல் தற்போது சுசந்திகாவின் பயிற்றுநராக பணியாற்றுகிறார். முன்னர் கெப்டன் திஸாநாயக்கவே சுசந்திகாவின் பயிற்றுநராக விளங்கினார்.

52 ஆண்டுகளின் பின் இலங்கைக்கு ஒலிம்பிக் பதக்கம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்த சுசந்திகா ஜயசிங்கவுக்கு ஜனாதிபதி, விளையாட்டுத்துறை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் விசேட வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.


# பித்தன் பதில்கள்

**க.தனபாலன், கொழும்பு.**
**கேள்வி :** குமார் பொன்னம்பலம், அமைச்சர் அஷ்ரப் ஆகியோரின் மரணங்களின் மர்மம் எதை உணர்த்துகிறது?.
**பதில் :** இந்த நாட்டில் இனி சிறுபான்மை இனத்தலைவர்கள் ஆளுமையாளர்களாய் இருக்க முடியாது என்பதைத்தான்.



**த.சுமதி, மட்டக்களப்பு,**
கே : விரைவில் போரை முடித்து நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்தப் போவதாய் ஜனாதிபதி பேசுகிறாரே. அது உண்மையா?.
ப : கடல் வற்றி கருவாடு தின்னலாமென்று குடல்வத்திச் செத்ததாம் கொக்கு.

**எஸ்.செந்தில், வவுனியா**
கே : உங்கள் முகத்தைக் கண்ணாடியில் பார்க்கும் போது என்ன தோன்றும்?
ப : தம்மில் எந்தக் குறையுமில்லாத காதும், மூக்கும், பெருந்தன்மையுடன் கண்ணின் குறையை நீக்குவதற்காக கண்ணாடியைத் தாங்கிநிற்கும் தியாகம் என்னை ஆச்சரியப் படுத்தும். இதுபோல் நம் தமிழினமும் ஒற்றுமையாய் இருந்திருந்தால் என்ற எண்ணமும் கூடவே தோன்றும்.



குமார்

**என்.அப்துல் ஜபார், புத்தளம்.**
கே : நடிகைளை ரசிக்கும் பலபேர் அவர்களைத் திருமணம் செய்ய முன்வருவதில்லையே ஏன்?.
ப : கடலை இரசிப்பது வேறு. கடலில் குதிப்பது வேறு.

**பி.எஸ்.சந்திரன், அட்டன்.**
கே : தாயின் கண், காதலியின் கண் ஒப்பிடுக?.
ப : ஒன்று அன்பைத் தூண்டும். மற்றது ஆசையைத் தூண்டும்.
ஒன்று தெளிவிக்கும், மற்றது மயக்கும்.
ஒன்று காக்கும். மற்றது காவலை மீறிச் செய்யும்.
ஒன்று வணங்கவைக்கும். மற்றது இணங்க வைக்கும்.
எல்லாத்தகுதிகளும் அதிகமாக இருந்தும், தாயின் கண் காதலியின் கண்ணிடம் பெரும் பாலும் தோற்றுவிடுவது கொடுமை.

**கே.கதிரவேல், வத்தளை.**
கே : இன்றைய இளைஞர்களின் போக்குச் சரியில்லை என்கிறேன். நீர் என்ன சொல்கிறீர்?.
ப : உமக்கு வயது போய்விட்டது என்று சொல்கிறேன்.

**எம்.சரோஜா, கொழும்பு.**
கே : யாழ்ப்பாணநிலையைப் பார்த்தீரா. நம் தாய் மண் மிஞ்சுமா?.
ப : நிச்சயம் " மண்" மிஞ்சும்.

**ஆர்.ராமமூர்த்தி, நுவரெலியா.**
கே : இன்றைய இளைஞர்கள் ஜோதிகா, ஜோதிகா என்று பைத்தியமாய்த் திரிகிறார்களே. அவர் அழகில் அப்படி என்னதான் மர்மம் இருக்கிறது?.
ப : இன்ன நடிகையின் இன்ன அங்கம்போல் என தனித்தனி உறுப்புக்களாய்ப் பார்த்தால் அவரில் ஒன்றும் அழகில்லை. ஆனால் மொத்தமாய்ப் பார்த்தால் ஏதோ அழகிருக்கத்தான் செய்கிறது. அதுதான் அவர் அழகின் மர்மம் போலும்.

**என்.எஸ்.சுகுமார், சிலாபம்.**
கே : உண்மையான சமயவாதியைக் கண்டு பிடிக்க ஓர் அடையாளம் கூறும் பார்க்கலாம்?.
ப : பேதமின்றி அனைவரிலும் அன்பாய் இருப்பான்.

**வி.ஜோதி, காலி.**
கே : கடவுளை மனிதனாய்க் காண்பது நல்லதா?. மனிதனைக் கடவுளாய்க் காண்பது நல்லதா?
ப : இவற்றைவிட மனிதனை மனிதனாய்க் காண்பதே மிக மிக நல்லது.

***பி.பாத்திமா, அக்கரைப்பற்று.***
கே : யாரை ஓடவிட்டால் எமக்கு ஒலிம்பிக் பதக்கம் கிடைக்கும்?.
ப : நாடாளுமன்றப் பதவிக்காகப் பறக்கும் அரசியல்வாதிகளைப் பார்த்தால் அவர் களைவிட அதற்குத் தகுதியானவர்கள் வேறு யாரும் இருப்பார்களா என எண்ணத் தோன்றுகிறது. ஒரேயொரு பிரச்சனை அவர்கள் வென்றால் ஒலிம்பிக்கும் நாசமாகிவிடும். அவ்வளவே.

***எஸ். ரமணன். குருநாகல்.***
கே : தமிழர்கள் இம்முறை வாக்களிப்பார்களா?
ப : ஆடுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா!
போடுவித்தால் யாரொருவர் போடாதாரே கண்ணா!

***எஸ். டி.சாமுவேல், திருகோணமலை.***
கே : ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி விட்டதாய்க் கூறும் பலர் ஆயுதங்களுடன் திரிகின்றனரே?.
ப : அவர்களுக்கு உயிர்ப் பொருள்களை விடச் சடப்பொருள்களில் நம்பிக்கை அதிகம்.

***நா. வேலப்பன், பதுளை.***
கே : ஆறுமுகம் தொண்டமானின் வேலை நிறுத்தக் கூத்து தொழிலாளர் வயிற்றிலடித் திருக்கிறதே?.
ப : ஏறு மலையேறி விளையாடுமுகம் ஒன்றே. என்பதனைத் தோட்டத் தொழிலாளர்கள் நன்கு உணர்ந்து விட்டனர். இனி ஒரு போதும் அவர்கள், ஆறுமுகம் ஆன பொருள் (சம்பள உயர்வு) நீயருள வேண்டும் எனக் கேட்க மாட்டார்கள்.




ஆறுமுகம்

***எஸ். பக்குர்தீன், கல்முனை.***
கே : அஷ்ரப் மறைந்த அடுத்த நாளே தலைமைப்பதவிக்கு நடந்த சண்டை பற்றி?
ப : அன்றுதான் அஷ்ரப் உண்மையில் இறந்தார்.

***ஆர். தயாபரன், செங்கலடி.***
கே : இவ்வளவு நடந்த பின்னும் நாளை நாடாளுமன்றம் போய் என்ன பண்ணலாம் என்று தமிழ்த் தலைவர்கள்(?) இந்தப் பாடுபடுகின்றனர்?.
ப : பணம் பண்ணலாம் என்றுதான்.

***கே.பொன்னம்பலம், கொழும்பு.***
கே : மனதில் கைவைத்துச் சொல்லும். இனி தமிழன் தலைநிமிர்வானா?
ப: அவன் எப்போ தலை குனிந்தான்?



ஜோதிகா

***சி.வி.ஜெயக்குமார், களுத்துறை.***
கே : ரணிலின் தலைமைத்துவம் பற்றி ஒருவரி...
ப : அங்குசம் இல்லாத யானைப்பாகன்

***என். நிர்மலா, உடப்பு.***
கே : நீர் இந்துவா? கிறிஸ்தவரா? இஸ்லாமியரா? உண்மையைச் சொல்லும். உம்மதம் எம்மதம்.
ப : "சம்மதம்"

---

*வாசகர்களின் கேள்விகளுக்குப் பித்தன் இந்த வாரத்திலிருந்து பதில் அளிக்கிறார்.*

*சிரித்து மகிழவும் அத்தோடு சிந்திக்கவும் தூண்டும் பதில்களை வரவழைக்கக்கூடிய சிறந்த கேள்விக் கணைகளைத் தொடுக்க வேண்டியது உங்கள் பொறுப்பு.*

*கேள்விகளைப் போஸ்ட் காட்டில் மட்டும் எழுதிக் கீழே உள்ள முகவரியை வெட்டி ஒட்டி அனுப்புங்கள்.*

*முகவரி வெட்டி ஒட்டப்படாத போஸ்ட் காட்டுகள் கவனிக்கப்பட மாட்டா.*

**பித்தன் பதில்கள்**
**'சுடர் ஒளி'**
36/2, பிரெட்றிக்கா வீதி
கொழும்பு—06.

# சுடர் ஒளி

1 ஒக்டோபர், 2000

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834


## மோசமடையும் போர்

வடக்கில் போர் நிலைமை படுமோசம் அடைந்து வருகிறது.

தேர்தல் வாக்களிப்பு நெருங்கும் இவ்வேளையில், கைமாறியுள்ள பிரதேசங்களை மீட்கவும் கைப்பற்றிய பகுதிகளில் தமது நிலையைப் பலப்படுத்தவும் என்று படையினர் புலிகளைச் சீண்டுகிறார்கள்.

புலிகள் சும்மா இருப்பார்களா? சீறிப் பாய்கிறார்கள். சண்டை உக்கிரம் அடைகிறது. அனர்த்தங்கள் ஏற்படுகின்றன.

பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடிச் சதா ஓட்டமும் நடையுமாக இருக்கிறார்கள். மன நிம்மதியின்றித் தவிக்கிறார்கள்.

இப்படியான நிலையில் வடபகுதி மக்களால் மனம் வைத்துத் தேர்தலில் வாக்களிக்க முடியுமா?

அதனால் என்ன, எப்படியும் மீண்டும் பதவிக்கு வந்து விட வேண்டும் என்ற ஆசையில் தவித்த முயல் அடிக்கச் சிலர் காத்திருக்கிறார்களே!

எது எப்படி இருந்த போதிலும் தேர்தலைச் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்துவது என்று உறுதிபூண்டு நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார் தேர்தல் ஆணையாளர். அதில் அவருக்கு எவ்வளவு குறுக்கீடுகள்! எத்தனை முட்டுக்கட்டைகள்!

தேர்தல் நடைபெறுவதைக் கண்காணிப்பதற்கு முக்கியமாக வெளிநாடுகளிலிருந்து குழுக்கள் வரவழைக்கப்படுகின்றன.

கடந்த 1994ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போதும் சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் வந்திருந்தார்கள்.

தேர்தலில் ஊழல்கள் நடந்ததை அவர்கள் அம்பலப்படுத்தினார்கள். மற்றப்படி ஊழல்களை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

அவர்கள் யாழ் தேர்தல் பற்றித் தமது அறிக்கையில் கூறியது இதுதான்:

''யாழ் தேர்தல் சுதந்திரமாகவோ நீதியாகவோ நடக்கவில்லை. பெரும்பாலும் ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டிலேயே வாக்களிப்பு நடந்தது.

ஆயுதங்கள் கொண்டு அவர்கள் வாக்காளர்களையும் தேர்தல் அதிகாரிகளையும் அச்சுறுத்தினார்கள்.

தீவுப் பகுதிகளையும் மற்றும் சில பகுதிகளையும் தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டிருந்த அவர்கள் ஏனைய கட்சிகள் எதுவும் பிரசாரம் செய்வதைத் தடுத்து நிறுத்தினார்கள்.

யாழ் மாவட்டத் தேர்தல் யாழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேர்தலாக அமையவில்லை. 2 சதவீத வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்தார்கள்.''

இப்படிச் சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் குழு தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

இந்த விதமாக நடந்த தேர்தலில் தான் யாழ் மாவட்டத்தில் 10 ஆசனங்களில் 9ஐ வெறும் ஐம்பது நூறு வாக்குகள் பெற்று ஈ.பி.டி.பியினர் கைப்பற்றினார்கள்.

அதனால் என்ன? ஒரே ஒரு அதிகப்படி வாக்கை மட்டும் மூலதனமாகக் கொண்டு உருவான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு அவர்கள் உறுதுணை போனார்கள். கைமாறாக அரசும் அவர்களுக்கு உதவிகளைச் செய்தது. செய்தும் வருகிறது.

டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பியைப் போல அரசுக்கு முழு ஆதரவு அளித்து முட்டுக் கொடுத்து வந்த மற்றிரு சிறுபான்மைக் கட்சிகள் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் அஷ்ரப்பின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஆகும்.

தொண்டமான், அஷ்ரப் ஆகியோரின் மறைவோடு அரசின் இரண்டு 'தூண்கள்' உடைந்து விழுந்து விட்டன. இன்றும் விசுவாசத்தோடு அரசைத் தாங்கி நிற்கும் ஒரே ஒரு தூண் டக்ளஸின் ஈ.பி.டி.பிதான்.

அந்தத் தூணையும் இழக்க அரசு விரும்புமா? அதுவும் தென்னிலங்கையில் நிலைமை நிச்சயமற்று இருக்கும் போது நாடாளுமன்றத்தில் பத்துக் கைகள் ஆதரவாகத் தூக்கப்படும் என்றால் சும்மாவா?

அதனால் இந்தத் தேர்தலிலே அரசை ஈ.பி.டி.பியும், ஈ.பி.டி.பியை அரசும் எவ்வழியிலாவது பரஸ்பரம் காப்பாற்றியே ஆக வேண்டும். அதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்படும்.

வெற்றி, தோல்வி பற்றிக் கவலைப்படாமல் போரைத் தீவிரப்படுத்துவது அந்த முயற்சிகளில் ஒன்றா?

இப்படித்தான் பலருக்கும் சந்தேகம்!

# போரும் தேர்தலும்: யார் செய்த தவறு?



சந்திரிக்கா



பிரபாகரன்

நன்றியுள்ள மிருகம் நாய் இருக்கிறதே, அதற்குத் தலையில் அடித்தாலும் கூட அது தன் காலைத்தான் தூக்கிக் கொண்டு அலறும். நாயின் சுபாவம் அது.

அதுபோல ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் ஒரு வழக்கமும் பழக்கமும் உண்டு. எதற்கும் அவர்கள் வடக்குக் கிழக்கு யுத்தத்தின் மீது பழியைப் போடுவார்கள்.

வாழ்க்கைச் செலவு உயர்வா, விலைகள் அதிகரிப்பா, கூடுதல் வரிகளா, உற்பத்திக் குறைவா, அபிவிருத்தித் திட்டங்கள் இல்லாமையா, வேலையில்லாத் திண்டாட்டமா, பொருளாதாரச் சீர்குலைவா, எல்லாவற்றுக்கும் யுத்தம் தான் காரணம் என்பார்கள்.

### காண்டீபம்

யுத்தத்துக்குக் கோடி கோடியாகப் பணம் செலவாவதை எடுத்துக் காட்டுவார்கள்.

இப்போது பொதுத் தேர்தலையும் யுத்தத்தோடு இணைத்துப் பிணைத்துப் பேசுகிறார்கள்.

யுத்தத்தால் தேர்தல் பாதிக்கப்படுவதாக அச்சமும் கவலையும் தெரிவிக்கிறார்கள். அதேவேளை, யுத்தம் நடந்துகொண்டிருக்கும் வடக்கிலும் தேர்தலை நடத்துகிறார்கள்.

தமிழ் மக்களின் உரிமைக்காக வேறு வழியின்றித் தாம் ஆயுதமேந்திப் போராடுவதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் கூறுகிறார்கள்.

அரச தரப்பில் என்ன சொல்லப் படுகிறது?

தமிழ் மக்களுக்கு உரிமைப் பிரச்சினை இருப்பதை அரச தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர்.

அதேவேளை அந்த உரிமைகளைப் பெறுவதற்கு ஆயுதப் போராட்டம்தான் வழியா?



கிட்டு

கூடிப் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியது தானே என்று உபதேசமும் செய்கின்றனர்.

அகிம்சை வழி இருக்க ஆயுத வழி எதற்கு என்று கேள்வி எழுப்புகின்றனர்.

இதைக் கேட்கும் போது பழைய நினைவுகள் நெஞ்சில் அலைமோதுகின்றன. அந்த நாள் ஞாபகம் வருகிறது.

இப்போதுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அப்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியாக இருந்த வேளை அகிம்சை வழியில் நடத்திய சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம் போன்ற உரிமைப் போராட்டங்கள் ஒன்றா இரண்டா? எத்தனையோ!

கொழும்பு கோல்பேஸ் சத்தியக்கிரகம் என்ன, யாழ். கச்சேரி மறியல் என்ன, ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் என்ன, தபால் முத்திரை வெளியீடு என்ன? ஒன்றுமே பலன் அளிக்கவில்லை.

தலைவர்களும் தொண்டர்களும் கல்லடி பட்டதும் பொலீஸ் குறுந்தடி அடிவாங்கியதும், இரத்தம் சிந்தியதும், தடுப்புக் காவலில் இருந்ததும், சிறையில் அடைக்கப்பட்டதும் தான் கண்ட மிச்சம்.

குட்ட குட்டக் குனிந்து கொண்டு அரசாங்கத் தலைவர்களுடன் பேசி அவ்வப்போது சில இணக்கங்களுக்கு வந்தார்கள். ஒப்பந்தங்களும் செய்து கொண்டார்கள்.



புலேந்திரன்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்காவுடன் ''பண்டா – செல்வா'' ஒப்பந்தம்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் முன்னாள் பிரதமர் டட்லி சேனாநாயக்காவுடன் ''டட்லி – செல்வா'' ஒப்பந்தம்.

இரண்டுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை, கிழித்து எறியப்பட்டன.

அரசினரால் அவ்வப்போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

1958 தொடக்கம் அடிக்கடி இனக்கலவரங்கள். தமிழ் மக்களுக்கு உயிர் இழப்பு, துன்புறுத்தல், பொருள் அழிவு, இடம்பெயர்வு – இத்தியாதி.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல 1983 ஜூலையில் தலைநகர் கொழும்பிலும் பிற இடங்களிலும் இனப்படுகொலை. அதுபற்றிய விபரம் எல்லோருக்கும் நன்றாகவே தெரியும்.

கத்தியின்றி, இரத்தமின்றிப் பல ஆண்டு காலம் நடத்திய சத்திய யுத்தம் தோற்றது.

அந்த நிலையில், இனி வாயால் உரிமை கேட்டுப் பயனில்லை என்று உணர்ந்துதான் தமிழ் இளைஞர்கள் துப்பாக்கியை எடுத்து அதைப் பேச வைக்கத் தொடங்கினார்கள்.

தமிழ் இளைஞர்கள் எத்தனையோ அணிகளாக நின்று ஆயுதப் போருக்கு தம்மைத் தயார் செய்து கொண்டார்கள்.

அந்த ஆயுதக் குழுக்களில் பலவும் தாம் இப்போது ஆயுதங்களை விட்டெறிந்துவிட்டு ஜனநாயக வழிக்கு வந்துவிட்டதாகக் கூறிப் பெருமை கொள்கின்றன.



திலீபன்

ஆனால் அவை யாவும் தற்பாதுகாப்புக்கென்று இப்பொழுதும் ஆயுதங்களுடனேயே திரிகின்றன. தற்காப்புக்கு மட்டுந்தான் அவை பயன்படுத்தப் படுகின்றனவா?


சில குழுக்கள் அரசாங்கத்தின் ''துணைப் படை'' யாகவும் செயற்பட்டு அதற்காகப் பணமும் பெற்றுக் கொள்கின்றன. அது வேறு கதை.

வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒன்றுதான் ''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'' என்ற இலட்சிய வேட்கையுடன் அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்தி வருகிறது.

அகிம்சை வழியில் உரிமைகள் கேட்கப்பட்ட போது மறுக்காமல் அவற்றை வழங்கியிருந்தால் ஆயுதப் போராட்டம் முளைத்து இருக்குமா?

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆட்சி அதிகாரத் தில் இருந்த போது ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தது.

அவர் முளையிலேயே அதைக் கிள்ளி எறிய முனைந்தார். அவரால் முடியவில்லை.



குமரப்பா

புலிகள், தாம் ஆயுதப் போரில் அல்ல அகிம்சைப் போரிலும் நாட்டமுள்ளவர்கள், அதில் வல்லவர்களும் கூட என்பதைப் பிரத்தியட்சம் காட்டினார்கள்.

அதற்குத் திலீபன் முன்வந்தார்.

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து சாகும் வரை உண்ணா விரதத்தை 1987 செப்டெம்பர் 15ம் திகதி நல்லூர் ஆலய வீதியில் ஆரம்பித்தார்.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை.
11ஆவது நாளில் அதாவது 26ஆம் திகதி திலீபனின் உயிர் பிரிந்தது.

திலீபன் தியாகிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டார். உதாரண புருஷராகக் கொள்ளப்பட்டார்.

முந்திய ஆண்டுகளைப் போல் இந்த ஆண்டும் கடந்த 26ம் திகதி அவரின் நினைவு தினம் தமிழ்ப் பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்டது.

திலீபனைத் தொடர்ந்து மட்டக்களப்பில் அன்னை பூபதியும் இலட்சிய வேட்கையுடன் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார்.

இவர்களுக்கு எல்லாம் முந்திய அகிம்சைப் போராட்ட வீரர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தான்.

அவர் 1986 நவம்பரில் தமிழ் நாட்டில் தண்ணீர் கூட அருந்தாமல் சாகும் வரை உண்ணா விரதத்தை ஆரம்பித்தார்.

தமிழ் நாடு அரசு தம்மிடம் இருந்து பறித்த ஆயுதங்களைத்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)



உம்மோட இதுதான் பெரிய கரைச்சல், சொல்லுறதை உடன் சொல்ல மாட்டீர்'' என்றார்.

''சொல்லுறன், சொல்லுறன்' என்று விநாசியர் ஆரம்பித்தார்.

இங்கே புனரமைப்புச் செய்யிற வெள்ளைக்காரரிட்டை கொம்பியூட்டர் சென்ரர் தொடங்க உதவிகேட்டு பொடியள் கொஞ்சப்பேர் போனவையாம். அவரும் சரி, உதவி செய்யிறன் என்று சொன்னாராம்.

ஆனா அவருக்கு அடுத்த பதவியிலை இருக்கும் எங்கடை ஆள்தான் இடையில் புகுந்து மறிச்சுப் போட்டாராம்.

''ஏன் அவருக்கு ஏதும் சம்திங் தரச் சொன்னவராமோ'' என்று இடைமறித்தார் மாஸ்ரர்.

வேகமாகத் தலையாட்டி அதற்கு மறுப்புத் தெரிவித்த விநாசியர், பெண்களால் பெண்களுக்காக நடத்தப்படுகின்ற நடத்த நிர்வாகம் ஏற்பாடு செய்ததாம்.

நாடு இருக்கும் நிலையில் 3 வருடப் படிப்பை ஒழுங்காக முடிப்பதே சந்தேகம். இந்த நிலையில் தேவையில்லாமல் 6 மாசம் லேற்றாக்கினால் என்ன செய்வது? அதனால்தான் அங்கு ஸ்டிரைக் யோசனை நடக்குதாம்,'' என்று முடித்தான் டானியல்.

''தமிழருக்கு இருக்கிற அழியாத சொத்து கல்விதான். இப்ப அதிலயும் எத்தினை விதமான பிரச்சினை பாருங்கோ'' என்று விசனமுற்றார் வாத்தியார்.

அவரின் கவலையைக் குறைப்பவன் போல் லோகன் பேசத் தொடங்கினான்.

''வாத்தியார் இதுக்குப் போய் கவலைப்படாதைங்கோ. அதைவிடத் தமிழ் வாசிக்கத் தெரியாத ஆட்களாலை தியேட்டர்காரருக்கு வந்த கவலை தெரியுமோ'' என்று கேள்வி எழுப்பிய லோகன் மணலில் நன்கு சாய்ந்தபடி சொல்ல

# தேரடி அரட்டை

## டாங் டாங்... டாங் டாங்...

யுத்தச் சூழலில் வாழப் பழகிவிட்ட குடாநாட்டு மக்களைப் போல், மல்ரி பரல்களின் சத்தங்களுக்கிடையே கோயில்மணி கம்பீரமாக ஒலித்தது

தேரடியில் அமர்ந்திருந்த விநாசியர் எழுந்து நின்று மானசீகமாக முருகனைக் கும்பிட்டுவிட்டு மீண்டும் அமரவும் பரமலிங்கம் வாத்தியார் வரவும் சரியாக இருந்தது.

பெரிசுகள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்தவுடன் புதினம் அறிய மற்றவர்களும் அக்கம் பக்கத்தில் அமரத் தொடங்கினார்கள்.

''என்ன மாஸ்ரர், அஷ்ரப் இப்படி அற்ப ஆயுளில போவார் என்று யார் நினைத்தது. நல்ல மனுஷன்'' என்று விநாசியர் தொடங்கினார்.

''ஓம். விதியென்று வந்தால், பூமி என்ன வானம் என்ன, எங்கிருந்தாலும் போய்ச்சேர வேண்டியதுதான். ஆமோதித்த வாத்தியார்'' உங்களுக்கு ஒரு கதை தெரியுமோ, எலக்சனிலை போட்டியிட 6 பேரின் பெயர்களை அஷ்ரப் மேலிடத்துக்குக் கொடுத்தவராம். ஆனால் அவர்களில் ஒருவரைக்கூட பொதுஜன ஐக்கிய முன்னணி தேசிய வேட்பாளராக மேலிடம் அறிவிக்கவில்லையாம். அதனால் அஷ்ரப்புக்கு கடும் கோபமாம் என்று முடித்தார்.

அவர் பேசி முடிக்கக் காத்திருந்த கொம்யுனிகேஷன் லோகன் ''அரசியல் வாதிகளின் ஏமாற்றத்தைச் சொல்றியளே. எங்கள் ஆட்கள் இங்கு ஏமாத்திறத விடவோ'' என்று கேட்டான்.

''ஏன் தம்பி என்ன நடந்தது. விளக்கமாகச் சொன்னால்தானே விளங்கும்'' என்று ஆவலாகக் கேட்டாள் கடலைக்காரச் சின்னாச்சிக்கிழவி.

''என்னுடைய நண்பன் தன் கொம்யுனிகேஷனில் ஒரு பெட்டையை வேலைக்கு வைத்திருந்தார். அந்தப் பிள்ளைக்குச் சுட்டுப் போட்டாலும் இங்கிலீஷ் வராது.

ஒரு நாள் போன் பண்ண வந்த ஒருவர், தனக்கு, நோர்வேயில் இருந்து போன் வரும் என்றும், அப்பிடி வந்தால், அங்கிருந்து ஏதாவது கேட்டால் 'யெஸ்' என்று கூறிவிட்டுத தன்னிடம் போனைத் தரும்படியும் சொன்னாராம்.

அதுமாதிரி போன் வர இந்தப் பிள்ளை போனை எடுத்திருக்கு. அந்தப் பக்கத்திலை கதைச்சவை ஏதோ கேட்க இதுவும் 'யெஸ்... யெஸ்' என்று சொல்லிப் போட்டு போனைவந்தவரிட்டை குடுத்திருக்கு. அவரும் 15-20 நிமிஷம் கதைச்சிட்டு இன்கமிங் காசைக் குடுத்திட்டுப் போயிருக்கிறார்.

இப்பிடிக் கனதரம் நடந்திருக்கு.

கடைசியா போன் பில் வந்த பிறகு கூட்டிக் கழிச்சுப் பார்த்தால் 65 ஆயிரம் ரூபாவுக்கு ஆள் கலெக்ற் கோல் எடுத்துப் போட்டு 200, 300 என்று இன்கமிங் காசை மட்டும் குடுத்திருக்கிறார்.

இப்ப நண்பர் அந்த ஆளைத் தேடித் திரியிறார். ஆனால் அந்த ஆள் மாட்டுப்படேல்லை''

'பனையால் விழுந்தவனை மாடேறி மிதிச்ச மாதிரி எங்கட சனம் படுகிற பாட்டில இப்பிடிப்பட்டவையும் திறமை காட்டியினம்' என்றாள் சின்னாச்சிக் கிழவி.

''இது என்ன பெரிய விசயம். வெள்ளைக்காரன் உதவ சம்மதிச்சாலும் எங்கள் ஆள் ஒருவர் குறுக்க விழுந்து தடுக்கிற கதை தெரியுமோ'' என்று விநாசியர் பீடிகை போட்டார்.

சஸ்பென்ஸ் தாங்க முடியாத மாஸ்ரர், கொம்பியூட்டர் சென்ரரிலைதான் அவருக்குப் பரிவும் பாசமுமாம்.

ஆராவது கேட்டால் பெண்களுக்கு உதவி செய்யத்தான் நிதி இருக்கு. பொடியளுக்கு இல்லை என்று பதில் வருகிறதாம். இத்தனைக்கும் அவருக்கு வயசு 50க்கு மேலாம்'' என்று முத்தாய்ப்பு வைத்தார் விநாசியர்.

அதுவரை பொறுமையாகக் கேட்ட சின்னாச்சி, ''லைற்போஸ்ட்டுக்குப் புடவையைச் சுத்திவிட்டாலும் அதைப் பார்த்து பல்லிளிக்கின்ற இப்பிடிப்பட்டவையை...''

தாழப்பறந்த மிக்கின் சத்தம் சின்னாச்சியின் வார்த்தைகளை விழுங்கியது.

மிக் சென்றதும் சின்னாச்சி ''கொஞ்ச நாளாக காணாம இருந்துட்டு, பிறகும் வந்திட்டினம்'' என்றாள்.

''கொழும்பிலை இருந்தும் வெளிநாட்டில இருந்தும் பத்திரிகைக்காரர்கள் இங்கு வந்தபடியா இங்கு அமைதி பூத்துக் குலுங்குது என்று காட்டத்தான் கொஞ்சநாள் மேலேயும், கீழேயும் சத்தமில்லாமல் இருந்ததாம்'' என்று சூட்சுமத்தைத் தெளிவாக்கினார் வாத்தியார்.

அதுவரை பேச்சில் கலந்து கொள்ளாது அமைதியாக இருந்த செக்கியூரிட்டி டானியல், ''கம்பஸிலை ஸ்டிரைக் ஒன்று நடந்தாலும் நடக்கும் போல இருக்கு'' என்றான்.

''ஓம், சமுதாயப் பிரச்சினை இல்லை. கம்பஸிலை படிக்கிறவர்களின் வாழ்க்கைப் பிரச்சினைக்காம்'' என்ற டானியலுக்கு எல்லோரும் பார்வையால் வினா எழுப்பினார்கள்.

பார்வைகளைப் புரிந்து கொண்ட டானியல் பேச்சைத் தொடங்கினான்.

''விஞ்ஞானப் பிரிவில் புதிதாக வந்துள்ளவர்களை 6 மாதம் லீவில் அனுப்பிவிட்டு, அதன் பிறகு வரும் புதிய மாணவர்களுடன் சேர்த்து விரிவுரைகளை ஆரம்பித்தான்.

''தேர்தல் போஸ்டர்களை எல்லாம் அழித்தபோது கட்சிகளின் போஸ்டர்களுக்குக் கழிவு ஒயில் பூசினவையெல்லே. அந்த ஒயில் சினிமாப்பட போஸ்டர்களையும் விடவில்லை யாம். ஒட்டின பேப்பர் எல்லாம் எலக்சன் போஸ்டர் என்ற நினைப்பில் ரியூசன் போஸ்டர்களிலை இருந்து 'பூவேலி' பட போஸ்டர் வரை எல்லாத்திலையும் கழிவொயிலிலை பிரஷ்ஷை தோய்ச்சு ஒரு இழுப்பாம் என்றபடி தலைக்கு முட்டுக் கொடுத்த கையை மாற்றினான் லோகன்.

லோகனின் கதையைக் கேட்ட மாஸ்ரர் ''சரி தம்பி, அப்பிடி முழு வீச்சா போஸ்டர் அழிப்பு நடந்தும் இசைக்கருவி மட்டும் அங்கங்கே கண்ணைச் சிமிட்டுதே. அது எப்பிடி என்று சந்தேகம் எழுப்பினார்.

அதுவரை பேசாமலிருந்த விநாசியர், ''என்ன மாஸ்ரர் செய்யிறது. அழிச்ச ஆள்கிட்டை பிரஷ்தானே இருக்கு. மற்ற ஆக்களிட்டை வகை வகையா என்னவெல்லாமோ இருக்கே. ஆனபடியால் ஒரு பயம்தான் என்று மாஸ்ரரின் சந்தேகத்தைத் தீர்த்தார்.

தன் பங்குக்கு, 'நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கம் என்ன' என்று கூறியபடி சின்னாச்சி தனது கடலைக் கடையைக் கட்டத் தொடங்கினாள்.

இதைக் கண்ட விநாசியர் ''கிழவி கதையென்றாலும் காரியத்திலயும் கண்தான். இப்பவே ஆறே முக்கால். ஏழு மணியானால் சந்திக்குச் சந்தி நின்று பதில் சொல்லிக்கட்டாது'' என்றபடி கிளம்பினார்.

மற்றவர்களும் ஊரடங்குச் சட்டத்துக்கு கட்டுப்பட்டு கலைந்தனர்.

தேரடி வெறிச்சோடியது.

–ஏகலைவன்

# பச்சைப் பாலகன் கம்ப்யூட்டர் மேதை!



நாம் படிக்காத மேதைகளைப் பார்த்திருக்கிறோம். அவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் பாடம் படிக்காமல் மேதையானவர்கள். அனுபவத்தைக் கொண்டு அவர்கள் மேதையாகி இருப்பார்கள். ஆனால் பாலர் பாடசாலைக்குச் செல்லும் வயதை அடையும் முன்பே மேதையாகி விட்டான் 2½ வயது பாலகனொருவன்.

இந்தப் பாலகனின் பெயர் அவரோப் மொஹமட். இந்தியாவின் பெங்களூர் மண்ணில் பிறந்தவன்.

மண்ணில் ஓடியாடி விளையாட வேண்டியவன் இன்டர்நெட்டில் இஷ்டம்போல் புகுந்து விளையாடுகிறான்.

கணனியின் மௌசும் கீ போட்டு பட்டன்களும் அந்த பிஞ்சு விரல்களின் செயல்களுக்கு கட்டுப்படுகின்றன. கணனியை தானாகவே இயக்கிப் பல சொப்ட் வெயார்களை திறமையாகக் கையாளுகிறான். அடோபி போட்டோ ஷொப்பை பயன்படுத்தி போட்டோக்களை தன் விருப்பத்திற்கு வடிவமைக்கிறான்.

இன்டர்நெட் மூலம் தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு ஈமெயில் அனுப்புகிறான். தனக்கு வரும் ஈமெயில்களையும் திறந்து பார்க்கிறான்.

இவன் தனக்கு swarooputta a hotmail/ .com, swaroopm a satyam.net.in என்ற இரு ஈமெயில் முகவரிகளையும் வைத்துள்ளான்.

அவரோப் 14 மாதக் குழந்தையாக இருந்த போதே ஆங்கில எழுத்துக்களை ஒரே நாளில் முழுமையாகப் படித்து முடித்து விட்டான்.

இந்தப் பாலகனுக்கு இப்போது ஆங்கிலத்தில் 1000 வார்த்தைகளுக்கு மேல் தெரியும். 50 நாடுகளின் கொடிகள் தெரியும்.

2½ வயதில் கம்பியூட்டர் மேதாவியான இவன், கம்பியூட்டர் படிப்பை மேற்கொள்ள செலவிட்டதோ 6 மாதம்தான்.

மிகப் பெரிய கம்பியூட்டர் மேதையாக வருவதே என் இலட்சியம் என்று அந்தப் பாலகன் முழு நம்பிக்கையோடு கூறுகிறான்.

# முதல் பெண்மணி வாக்கு வேட்டை



அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் தமது இரண்டாவது பதவிக்காலமும் முடிந்து பதவியிலிருந்து ஒதுங்கும் கட்டத்தை நெருங்கிவிட்டார்.

இந்நிலையில் அவருடைய மனைவி ஹில்லாரி அமெரிக்க செனட் சபைக்கு நியூயோர்க் மாநில ஆளுநராக வருவதற்குப் போட்டியிடுகிறார். அவருடைய வெற்றி உறுதியாகிவிட்டது.

நட்ட நடு வீதியில் மழை தூறும் வேளையில் குடையைப் பிடித்துக் கொண்டு அமெரிக்காவின் முதல் பெண்மணி இவ்வாறு ஆடுவது எதற்காக? எல்லாம் வாக்கு வேட்டைக்குத்தான்! வேறெதற்கு?

# கால் அழகு பிரமாதம்

அருகில் வந்தால் எட்டி உதைப்பேன் என்று எச்சரிக்கிறாரா இந்த அழகி? அழகிய கால்களைக் கொண்ட அழகியாக இவர் இருப்பதால் இவரது கால் அழகே விளம்பர த்துக்குப் பயன்படுகிறது. லண்டனில் இன்டர் நெட் தொலைக்காட்சி சேவை ஒன்றை ஆரம்பித்து வைத்த நெல் இமக் ஆன்ட்ரூ என்னும் இந்த எழில் நங்கை தனது தோடை அழகைக்கொண்டே டிஜிட்டல் ரீவிக்கு விளம்பரம் செய்தார். தொடையைக் காட்டித் தொடங்கினால்தான் வியாபாரம் நடக்கிறது மேல்நாட்டில்!




# திருப்பதி லட்டுக்கு கம்ப்யூட்டர் டோக்கன்

திருப்பதி எழுமலையான் கோவிலில் சாமி தரிசனம் செய்யும் பக்தர்களுக்கு 'டோக்கன்' மூலம் லட்டு வழங்கப்பட்டு வந்தது.

சிலர் போலி 'டோக்கன்' களை அச்சடித்து பக்தர்களுக்கு வழங்குவதாக வந்த புகார்களைத் தொடர்ந்து திருமலை – திருப்பதி தேவஸ்தானம் தற்போது கம்பியூட்டர் 'டோக்கன்'களை அறிமுகப்படுத்தி உள்ளது.

கம்பியூட்டர் மூலம் அச்சிடப்படும் இந்த 'டோக்கன்'களில் அது வழங்கப்பட்ட நேரம், அடையாளக் கோடு ஆகியவை இடம் பெற்று இருக்கும்.

# தண்ணீருக்குள் மூழ்கி நடனம்



கடற் படுகையிலுள்ள திரவியங்கள் அளவு கணக்கற்றவை. அதனால்தான் ஆழ் கடலின் கீழ் ஓர் உலகம் இருக்கிறது என்று மேல்நாட்டார் நம்புகிறார்கள். அதனால் தானோ என்னவோ நீருக்கடியில் ஆடல் பாடல்களை நடத்திக் களிக்க வைக்கிறார்கள் ரஷ்ய நீச்சல் காரர்கள்.

கும்பலாகச் சேர்ந்து நீந்திக் களிப்பதுடன் நீருக்குள் மூழ்கி நடனமாடுவதிலும் ரஷ்ய நீச்சல் வீரர்கள், வீராங்கனைகள் படு சமத்தர்களாக இருக்கிறார்கள்.

# மக்காச் சோளம் நல்ல ருசி

சோளத்தை உணவாகக் கொண்டு உயிர் வாழ்கிறார்கள் ஏழைகள். ஆனால் மேல் நாடுகளிலோ மக்காச் சோளம் ஒரு நாகரீக உணவாகிவிட்டது. லண்டனில் நடைபெற்ற உணவுக் கண்காட்சி ஒன்றில் அவித்த மக்காச் சோளத்தை உண்டு களிக்கிறார் இந்த அழகி. அவர் தலையை அலங்கரிக்கும் தொப்பியும் மக்காச் சோளம் போலவே தென்படுகிறது.



# குப்பையிலிருந்து ஓடுகள்

குப்பையிலிருந்து மின்சாரம் உருவாக்குவதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் சீனர்கள் குப்பையிலிருந்து ஓடுகளை உருவாக்கும் புதிய தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

வடக்கு சீனாவின் டியான்ஜின் நகரில் இதற்கான இயந்திரத்தை உருவாக்கியுள்ளனர். இந்த இயந்திரத்தில் கொட்டப்படும் குப்பைகள் ஏழே நிமிஷங்களில் ஓடுகளாக உருமாறுகின்றன. இந்தச் சதுரமான ஓடுகளை, வேண்டிய வண்ணங்களில் தயாரிக்க முடியும். இதை நடைபாதைகளில் பதிக்கவும், செங் கற்களுக்குப் பதிலாக உபயோகப்படுத்தவும் முடியும்.

இந்தச் சதுர ஓடுகளைக் கொண்டு வேலிகள், வெள்ளப் பெருக்கைத் தடுக்கும் செய்கரைகள் ஆகியவற்றை எழுப்ப முடியும்.

ஒரு தொன் குப்பையிலிருந்து 26 சதுர மீற்றர் ஓடுகள் தயாரிக்கலாம். துறைமுக நகரமான டியான்ஜினில் தினமும் 300 தொன் குப்பையை உபயோகித்து ஆண்டுக்கு 20 லட்சம் சதுர மீற்றர் வண்ண ஓடுகளைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

# ஒளிந்திருக்கும் முகம் எது?

சென்ற இதழில் ஒளிந்திருந்த முகத்துக்குச் சொந்தக்காரர் மனீஷா கொய்ராலா. பெரும் எண்ணிக்கையான வாசகர்கள் சரியான விடையை எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அவர்களில் மூன்று அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படுவார்கள். அவர்களின் விவரம் அடுத்தவார இதழில் வெளியிடப்படும்.

இன்றைய இதழில் ஒளிந்திருப்பவர் யார் தெரியுமா? மஹாலக்ஷ்மி என்ற தன் சொந்தப் பெயரை மாற்றி தேவலோக அழகியின் பெயரைத்தன் பெயராக வைத்துக் கொண்டவர்.



தெலுங்கு தேசத்திலிருந்து வந்து ரசிகர்களின் 'உள்ளத்தை அள்ளிக் கொண்ட மாறுகண் நடிகை.

இன்னுஞ் சொல்வதானால் இப்போது அம்மணி நட்சத்திர தம்பதியினரின் வாரிசுடன் ஜோடி சேர்ந்து 'அன்புடன்' நடித்து வருகின்றார்.


என்ன இவர் யாரென்று கண்டு பிடித்து விட்டீர்களா?

விடையை அஞ்சலட்டையில் எழுதி கீழுள்ள முகவரிக் கூப்பனை ஒட்டி தபாலிட வேண்டிய முகவரி:–

ஒளிந்திருப்பவர் இவர்தான்
சுடர் ஒளி -இதழ்-4
36/2, பிறெட்ரிகா வீதி, கொழும்பு-6.

# சைக்கிளோட்டும் கிளி





# முதலை முட்டை படு டேஸ்ட்! அதற்கென்றே ஒரு பண்ணை

'முதலை கொண்டது விடாது' என்பார்கள், அப்படியானால் முதலையின் முட்டையைத் தின்பவர்கள் விடாக்கண்டன்களாகத்தான் இருப்பார்களோ! அது எப்படியோ, முதலை முட்டை படு டேஸ்ட் என்கிறார்கள் அதைச் சுவைப்பவர்கள். தமிழகத்தின் மாமல்லபுரம் பகுதி சரித்திரப் பிரசித்தி பெற்ற இடம். புராதன கோயில் அங்கே இருக்கிறது.



அமெரிக்காவில் பிறந்த ரொமுலுஸ் வைட்டேகர் என்னும் இயற்கை இயல்வாதி தமது 54ஆவது வயதில் மாமல்லபுரத்தில் குடியேறியிருக்கிறார். அவருக்கு பிடித்தமான சாப்பாடு முதலை முட்டை. அவித்தோ, பொரித்தோ, கூழ்காய்ச்சியோ தினமும் ஒரு முதலை முட்டையை விழுங்கி விடுகிறார்.

சிலருக்கு கோழி முட்டையே கிடைக்காத இந்தக் காலத்தில் இவருக்கு முதலை முட்டை எப்படிக் கிடைக்கிறது? தனது சொந்தப் பண்ணையிலிருந்தே முதலை முட்டைகளை வரவழைத்துக் கொள்கிறார். ஆம்! அவருடைய பண்ணையில் 3000 முதலைகள் வளருகின்றனவாம். இந்தியாவிலேயே ஒரு பெரிய முதலைப் பண்ணை இவருடையது.



உலகிலேயே அருகிவரும் உயிரினங்களில் முதலை இனமும் ஒன்று. எனவே முதலை வளர்ப்புக்கு மிகவும் உச்சக்கட்ட ஆதரவு தரப்படுகிறது. இயற்கைவளம் பேணும் இயக்கத்தினரின் பொருள் உதவியும் கிடைக்கிறது.

உள் நாட்டவருக்கு இந்தியாவில் முதலை வளர்ப்பில் ஈடுபடும் ஆர்வம் இல்லை. ஆனால் அமெரிக்கரான வைட்டேகர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டார். அவர் கிராமப் புறங்களில் சுற்றி வளைக்கப்படும் முதலைக்கு தமது பண்ணையில் அடைக்கலம் தந்தார் ஆரம்பத்தில்.

## மாப்பிள்ளை முதலை

சென்னை மிருகக் காட்சிசாலையில் 30 வயதுடைய திடகாத்திரமான முதலையைத் தன்னந்தனியாக வளர்த்து வந்தனர். அவர்களுக்கு ஒரு ஜோடி முதலைகளைக் கொடுத்துவிட்டு அந்தத் தனி முதலையைத் தனது பண்ணைக்கு எடுத்துச் சென்றார் வைட்டேகர். எட்டு பெண் முதலைகளுடன் அந்த ''மாப்பிள்ளை'' குடும்பம் நடத்த அனுமதிக்கப்பட்டார். மிகக் குறுகிய காலத்தில் ஒரே மூச்சில் 500 குட்டி முதலைகளை உற்பத்தி செய்து விட்டார் அந்த மாப்பிள்ளை.

இவ்விதமாகவே ஆயிரக்கணக்கில் முதலைகளைத் தமது பண்ணையில் உற்பத்தி செய்து விட்டார் வைட்டேகர். முதலைத் தோலில் காலணிகள், ஆடைகள், பெட்டி படுக்கைகள் செய்வது மேல் நாட்டவரின் நாகரிகம். எனவே நல்ல வருமானத்திற்கு முதலைகளை விற்பனை செய்யும் எண்ணம் வைட்டேகருக்கு ஏற்பட்டது.

ஆயினும் இந்தியாவில் அருகிவரும் இனமாக முதலை இனம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே முதலைகளைக் கொல்வது, தோல்களை ஏற்றுமதி செய்வது ஆகியன மிகவும் சிரமமாக இருக்கின்றன. தமது பண்ணையில் வளரும் முதலையை வைட்டேகர் கொன்றால் அல்லது தோலுரித்தால் மூன்று வருடகாலச் சிறைத் தண்டனையைப் பெறவேண்டியிருக்கும். இந்தியச் சட்டம் இப்படிக் கூறுகிறது.

எனவே முதலை முட்டையைத் தாமே உண்ணும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுவிட்டார். இதன் மூலம் முதலை முட்டை உண்ணும் வழக்கம் ஏற்பட்டு முட்டை வியாபாரத்தில் இறங்கலாமே என்று நினைக்கிறார் போலும்.

வைட்டேகரின் வாய்க்குச் சிக்காமல் தப்பிய முட்டைகள் மூலம் உருவான முதலைக் குட்டிகள் அவர் தலையிலும் தோளிலும் ஏறி விளையாடும் காட்சியை இங்கு காணலாம். இந்த முதலைப் பண்ணையைக் காண தினமும் பெருமளவில் மக்கள் வருகிறார்கள். அவர்கள் மூலம் கிடைக்கும் வருமானம் வைட்டேகருக்கு பக்க பலமாக இருக்கின்றது.

## அகதி முதலைகள்

இதே வேளையில் மத்திய கிழக்கில் ஜோர்தான் எல்லையில் கோல்டன் கேட். பகுதியிலுள்ள ஒரு முதலைப் பண்ணையின் கதை பரிதாபம் நிறைந்தது.

இந்தப் பண்ணை இருக்கும் பகுதி சிரியா நாட்டுக்கா? அல்லது இஸ்ரேலுக்கா? என்பது பிரச்சினை. பிரிட்டிஷ் பெண்ணான சாலி பென்சூஷான் தனது பண்ணையில் சுமார் 150 முதலைகளை வளர்த்து வருகிறார். மத்திய கிழக்கு யுத்தம் நடைபெறும் காலங்களில் இப்பகுதி மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குப் போய் விடுவார்கள். ஆனால் இந்த முதலைகளுக்கோ அல்லது அவற்றை வளர்ப்பவருக்கோ போகும் இடம் இல்லை.

இஸ்ரேலியர்கள் இந்தப் பகுதியைப் பிடித்தால் ஆபத்து ஏதும் இல்லை. ஆனால் சிரியா இராணுவம் வந்தால் பாதுகாப்பு இல்லை. எனவே அத்தகைய ஒரு சூழ்நிலை வந்தால் ''எனது பண்ணையிலுள்ள முதலைகளைத் தப்பிச் செல்ல விட்டு விடுவேன். நானும் தப்பி ஓடி விடுவேன்'' என்று கூறிவிட்டார் சூஷான்.

தமது முதலைப் படையுடன் சூஷான் ஆலோசனை நடத்தும் காட்சியை இங்கு காணலாம். யுத்தம் காரணமாக இடம் பெயரும் மக்களைப் பெருமளவில் கொண்டுள்ள நாடு இலங்கை. நம்மவர்களுக்குத்தான் இந்த முதலை அகதிகளின் அவலம் புரியும்.

—சிகுநா




பி. பி. தேவராஜ்

*எம் இனிய தமிழ் மக்களே!*

*1994ஆம் ஆண்டு ஐ.தே.க., இ.தொ.கா.வுக்குமிடையே தேர்தல் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதே போன்ற பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் எதிர் வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சியின் யானை சின்னத்தில் நமது அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்.*

*ஐ.தே. கட்சியில் இணைந்து போட்டியிடும் எமது வேட்பாளர் களுக்கு உங்கள் பொன்னான வாக்குகளை அளித்து பாராளு மன்றத்திற்கு தெரிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள் கின்றேன்.*

**பி. பி. தேவராஜ்**

*(முன்னாள் இராஜாங்க அமைச்சரும், முன்னாள் எம்.பி.யும், ஐ.தே.கட்சி தேசியப் பட்டியல் அங்கத்தவரும்.)*

| | | | |
|---|---|---|---|
| 1. நுவரேலியா — இல. 10 | | X | திரு.எஸ்.சதாசிவம், உபதலைவர், இ.தொ.கா. |
| 2. பதுளை — இல. 10 | | X | திரு.வி.சென்னன், உப தலைவர், இ.தொ.கா. |
| 3. கண்டி — இல. 6 | | X | திரு.எஸ்.ராஜரட்ணம், உப தலைவர், இ.தொ.கா. |
| 4. கொழும்பு — இல. 16 | | X | திரு.மனோ கணேசன், மா.ச.அ பொதுச் செயலாளர், இ.தொ.கா. |
| 5. மாத்தளை — இல. 8 | | X | திரு.சந்தையா முன்னாள் மாகாண சபை அங்கத்தவர். |
| 6. தேசியப்பட்டியல் | — | | திரு.பி.பி.தேவராஜ் உப தலைவர், இ.தொ.கா. |
| 7. தேசியப் பட்டியல் | — | | திரு.ஏ.எம்.டி.ராஜன் உப தலைவர், இ.தொ.கா. |

- இனப் பிரச்சனை தீர்வுக்கு சமாதான பேச்சுவார்த்தை.
- வேலைவாய்ப்புகளுக்கு முக்கியத்துவம்.
- புதிய சம்பள ஒப்பந்தம்.
- கௌரவமான நிர்வாக தொழிலாளர் உறவுகள்.
- கல்வித்துறை முன்னேற்றத்தை துரிதப் படுத்தல், பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்தல்.
- பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து இந்தியவம்சாவளி பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய அதிகாரமுள்ள விசேட குழு.
- ஜனநாயக பண்பு, மனிதநேயம், லட்சிய உணர்வு.

**ஐக்கிய தேசியக் கட்சி**




# தமிழனின் தனிக்குணம் இதுதானா?

சனிக்கிழமை மிஸ்டர் க்றோவுக்கு செல்வாக்கான நாள். அன்று காலையிலிருந்து நல்ல நெய் கலந்த உணவு கிடைத்தது. வயிறார உண்டு ஏப்பம் விட்டார்.

வயிற்றுப் பசி அடங்கியதும் அறிவுப்பசியெடுத்தது. பகல் 12.00 மணியாகிவிட்டது. பொது நூலகத்திற்குப் பறந்தார்.

முதலில் இன்றைய நாளிதழ்களை ஒரு நோட்டம் விட அந்தப் பகுதிக்குள் நுழைந்தார் மிஸ்டர் க்றோ.

தமிழ்ப் பத்திரிகைகளைத் தேடினார். பத்திரிகைகளின் பெயர்கள் ஒட்டப்பட்ட மேசைதான் கண்ணில் பட்டது. அதில் பத்திரிகைகளைக் காணவில்லை. திரும்பிப் பார்த்தார் பலரும் ஆளுக்கொரு பத்திரிகையை எடுத்துக்கொண்டு போய் தனித்தனியாக வாசித்துக் கொண்டிருந்தனர்.

உரிய இடத்தில் பத்திரிகைகள் இருந்தால் அவற்றை ஒரே தடவையில் பலர் வாசிக்கலாம். அதுதான் வழக்கமும் கூட.

ஆனால் அந்த நடைமுறை இங்கே உடைத்து எறியப்பட்டு விட்டது.

''தமிழன் என்று ஓர் இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு'' என்று பெருமையாக ஒருவர் சொல்லிவைத்திருக்கிறார்.

அந்தப் பெருமைக்குரிய குணத்தில் மற்றவர்களுக்கு தமிழ்ப்பத்திரிகைகளைப் படிக்க வாய்ப்பு இல்லாமல் செய்யும் சின்னத்தனமும் சுயநலமும் எப்படி இடம் பெற்றனவோ! மிஸ்டர் க்றோவுக்குப் புரியவில்லை.

ஆங்கில நாளிதழ்கள் பகுதிக்கு மிஸ்டர் க்றோ சென்றார். என்ன ஆச்சரியம்! அங்கே பத்திரிகைகள் எல்லாம் உரிய இடங்களிலேயே இருந்தன. ஒரு பத்திரிகையைப் பலர் நின்ற நிலையில் சேர்ந்து வாசித்துக் கொண்டிருந்தனர். மிஸ்டர் க்றோவுக்கு பெருமகிழ்ச்சி. சேர்ந்து எதையும் செய்வது மிஸ்டர் க்றோவின் இனத்துக்கே சொந்தமான அருங்குணமாச்சே!

தமிழ்ப் பத்திரிகையைத்தான் வாசிக்கக் கிடைக்கவில்லை. சஞ்சிகைகளையாவது படிப்போம் என்று அவற்றுக்கு உரிய பகுதிக்குள் பறந்தார் மிஸ்டர் க்றோ. அந்தப் பகுதி மேல் மாடியில் இருந்தது.

அங்கும் பெருத்த ஏமாற்றம். புத்தக ராக்கைகளில் சஞ்சிகைகள் இருக்கத்தான் செய்தன. ஆனால் அவை எல்லோராலும் விரும்பிப் படிக்கப்படும் ஜனரஞ்சகமான சஞ்சிகைகள் அல்ல. ஜனரஞ்சகமான சஞ்சிகைகள் ஒரு சில இருந்தன. என்றாலும் அவை வெகு காலத்துக்கு முன்னர் வெளிவந்த பழைய சஞ்சிகைகளே!

மிஸ்டர் க்றோ ஓரக்கண்ணால் நோட்டமிட்டார். ஒருவர் பிரபல சஞ்சிகை ஒன்றின் மிகச் சமீபத்திய இதழைப் படித்துக்கொண்டு இருந்தார். அவரிடம் போய் எங்கிருந்து இதை எடுத்தீர்?'' என்று நைசாகக் கேட்டார் மிஸ்டர் க்றோ. சஞ்சிகையைப் படிப்பதில் லயித்திருந்த அவர் வாய்திறக்கவில்லை. சைகை மூலம் அந்தப் பகுதிக்குப் பொறுப்பான அதிகாரியைக் காட்டினார்.

மிஸ்டர் க்றோ அந்த அதிகாரியிடம் சென்றார். பிரபல சஞ்சிகை ஒன்றின் பெயரைச் சொல்லி அது வேண்டும் என்று கேட்டார்.

பதிலுக்கு மிஸ்டர் க்றோவிடம் நூலக அங்கத்தவர் கார்ட் கேட்டார் அந்த அதிகாரி. மிஸ்டர் க்றோ அங்கத்துவக் கார்ட்டை நீட்டினார். அதைப் பெற்றுக்கொண்டு மேசை லாச்சியை இழுத்தார் அந்த அதிகாரி. அதிலிருந்து கேட்ட சஞ்சிகையை எடுத்துத் தந்தார்.

அவர் ஒரு பெண். அதனால் தப்பிப் பிழைத்தார். பெண் [illegible] றால் பேயும் இரங்கும் என்பார்களே. அப்படியானால் க்றோ எம் மாத்திரம்? என்றாலும் மிஸ்டர் க்றோ விடவில்லை. தமிழ் சஞ்சிகைகளைப் படிப்பதற்கு இப்படி ஒரு கஷ்டமா? இந்த இடக்கு முடக்கான நடைமுறை தேவைதானா என்று அந்தப் பெண் அதிகாரியிடம் வினவினார் மிஸ்டர் க்றோ.

''என்ன செய்வது? இப்படி இல்லையென்றால் சஞ்சிகைகளை எடுத்துச்சென்று விடுகின்றனரே! என்று அந்தப் பெண்மணி ஒரு குண்டைத் தூக்கி மிஸ்டர் க்றோவின் தலையில் போட்டார்.

தப்பினோம் பிழைத்தோம் என்று அங்கிருந்து சிறகடித்தார் மிஸ்டர் க்றோ.

# ஆசிரமத்தில் ஆடையின்றி வழிபாடு – சாப்பாடு !

எங்கள் பக்கத்து நாடான இந்தியாவின் கேரள மாநிலத்தில் ஓர் ஆசிரமம் இருக்கிறது. அதில் உள்ள விசேஷம் என்னவென்றால் அங்கே உள்ள ஆண்களும் பெண்களும் ஆடை எதுவுமின்றி நிர்வாணமாக இருந்தே ஜபம் செய்கிறார்கள். உணவு அருந்துவதும் நிர்வாணமாக இருந்துதான்.

ஆசிரமத்தின் பெயர் சித்த சமாஜ ஆசிரமம்.

இந்த ஆசிரமம் பற்றிய விபரங்களை மதுரையில் உள்ள சித்த சமாஜத்தின் சுவாமி சிவானந்த பரமஹம்சருடைய தமிழ்மாநில சித்த வித்தியார்த்திகள் இயக்கம் தெரிவித்திருக்கிறது.

அந்த இயக்கம் தெரிவித்திருப்பதாவது:—

சித்த நெறியையும், மனித வாழ்வின் முக்தி நெறியையும், சாதி —மத— இன —மொழி என்னும் சமுதாய சிக்கலில் சீரழித்துக் கொண்டிருக்கிறது மனிதஇனம். அதனை மாட்சிமைப்படுத்தும் மகத்தான ஆசிரமம் தான் மேற்படி சித்தாசிரமம்.

1921இல் ஆரம்பிக்கப்பட்டு 79 வருடங்கள் ஓர் ஆசிரமம் எந்தவித பிரச்சினையும் இல்லாமல் இயங்கி வருகிறது. மக்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் இயங்க முடியாது. அரசு முழுமையாக ஆசிரமத்தைக் கண்காணிக்கிறது. ஆசிரமத்தில் ஒவ்வொரு நடவடிக்கைகளும் எழுதப்படுகின்றன.

ஆசிரமத்தில் சேரவிரும்புவோர் முதலில் சித்த வித்தியார்த்தி எனும் 30 விதிகளுக்கு உட்பட வேண்டும். பிறகுதான் வடகரை சித்தாசிரமத்தில் சேர முடியும். அதுவும் சாதாரணமாக முடியாது. ஒரு வித்தியார்த்தி, அவர் ஆணோ, பெண்ணோ முதலில் தாய் தந்தையிடம் அனுமதிக்கடிதம் வாங்க வேண்டும்.

பிறகு கிராம நிர்வாக அலுவலரிடம் ஒரு கடிதம். சரகத்தில் உள்ள காவல் நிலையத்தில் ஒரு நன்னடத்தைக் கடிதம். இவ்வளவும் பெற்று ஆசிரமத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அவர்கள் ஆசிரமவாசியாக மாறுவதற்கு ஒரு வருடம் ஆகலாம்; 20 வருடமும் ஆகலாம். சதா பிராண யாமம் தான் சித்தாசிரமத்தின் தாரக மந்திரம்.

### கச்சிதமான கலை

மூச்சை ஏற்றி இறக்கும் கலையை கச்சிதமாகச் செய்வதுதான் சித்தாசிரமம். இதைத் தோற்றுவித்தவர் சிவானந்த பரமஹம்சர்.

இந்து சமயம், இஸ்லாமிய சமயம், கிறிஸ்தவ சமயம், சமண சமயம், புத்த சமயம் இப்படி எத்தனையோ சமயங்கள் இருந்தாலும் மனிதப் பிறவிக்கு வாய்த்திருக்கும் இந்த அருமையான வித்தை மகத்தானது. அந்த வித்தையை வெட்டிய செம்மல்தான் சிவானந்த பரமஹம்சர்.

### மூட நம்பிக்கை எது?

பதினெட்டு சித்தர்களின் யோக முறைகளையும் வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கத்தையும் உள்ளடக்கி, மிகவும் இலகுவாக ஜீவனை — மூச்சை மேல்கதிக்கு எப்படி ஏற்றுவது?

இதனை எடுத்தியம்புவதுதான் இந்த உன்னத சித்தவித்தை. இந்த சித்தாசிரமத்தைத் தோற்றுவித்த சுவாமி சிவானந்த பரமஹம்சர் மூட நம்பிக்கையைச் சாடியவர். பெண்ணடிமையைச் சாடியவர். சகோதரத்துவ நெறியைப் போதித்தவர்.

கேரளாவில், தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் எடுக்கக்கூடாது என்று தடுக்கப்பட்டிருந்த நிலையை மாற்றப் போராடியவர். வடகரையில் உள்ள லோகநாத காவ் என்ற குளத்தில் அவர்களைத் தண்ணீர் எடுக்க வைத்தவர்.

### நிர்வாணம் எப்போது?

சித்தாசிரமத்தில் ஜெபத்தில் ஈடுபடும் பொழுதும், உணவு அருந்தும் பொழுதும் மட்டும் தான் நிர்வாணமாக இருக்கிறார்கள்.

ஆசிரம அறையினுள் மக்கள் பார்வை படாமல் அவ்விதம் இருக்கிறார்கள். மற்ற நேரங்களில் எல்லாம் வெள்ளை உடை உடுத்துகிறார்கள்.

சமய சின்னங்கள் எதுவும் அணிவதில்லை. திருவள்ளுவரைப் போல் வாழ்க்கை நடத்துகிறார்கள்.

**சுவாமி சிவானந்த பரமஹம்சர் "ஒன்றே குலம், ஒருவனே தெய்வம்" என்ற சித்தாந்தத்தை சிரமப்பட்டு நிலை நிறுத்த, செம்மையான பணியை ஆற்றுவதற்காகவே சித்தாசிரமத்தை நிறுவினார்.**

தமிழ் மக்கள் மட்டும் அல்லர். இந்தத் தரணியில் உள்ள மக்கள் அனைவரும் ஆசிரம நடவடிக்கைகளை நேரில் கண்டு பிறகுதான் முடிவு செய்ய வேண்டும். அதில் சித்தாசிரமத்துக்கு எந்தத் தடையும் கிடையாது.

மனித நேயத்தை, மக்கட் பண்பை, மன்னுயிரைக் கொன்று வதைத்துண்டு வாழாமல் தன்னுயிரைப்போல் எண்ணித் தவம் முடிக்கும் வாழ்க்கையை, சகோதரத்துவத்தை, ஈஸ்வர மதத்தை எடுத்து இயம்பும் ஆசிரமம்தான் சித்தாசிரமம்.

இவ்வாறு சித்த வித்தியார்த்திகள் இயக்கம் தெரிவித்திருக்கிறது.

### கணவன் — மனைவி யாரும் இல்லை

ஆசிரமத்தைப் பாராட்டி "விடுதலை" இதழில் செய்தி வெளிவந்திருக்கிறது. விவரம் வருமாறு:

ஒருவரைச் சகோதரர் என்றோ, சகோதரி என்றோ அல்லது மாமா என்றோ எது பொருத்தமோ அப்படியே அழைப்பதன் மூலம் வயதுக்குரிய மரியாதை ஆசிரமத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

அம்மா என்ற சொல்லும் அங்கே பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அப்பா என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. தாய்மை மட்டுமே சமாஜத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்பதே இதற்குக் காரணம்.

இதே அடிப்படையில் மனைவி அல்லது கணவன் என்ற சொற்களும் பயன்படுத்தப்படுவது இல்லை.

பாலுறவு பற்றி சமாஜம் மிகவும் பரந்த கண்ணோட்டம் கொண்டிருக்கிறது: ஆசிரமவாதிகள் பயிற்சி செய்யும் ஜெபம் என்பது பாலுணர்வைக் குறைப்பதற்கே. ஆயினும் ஆசிரமப் பெண்கள் குழந்தை பெறுகிறார்கள்.

# புலிகள் பற்றி பொலிஸ் தகவல்: யாழ் வேட்பாளர்கள் கிலி!

பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் பல வேட்பாளர்களுக்குப் பொலிஸார் நேரில் சென்று புலிகள் குறித்துத் தெரிவித்த தகவல் ஒன்று, அவர்களின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கின்றது.

வேட்பாளர்களிடம் பொலிஸார் தெரிவித்த தகவல் இதுதான்:—

கடந்த வாரம் கொக்குவிலுக்கும் கோண்டாவிலுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் வைத்து காந்தன் என்று அழைக்கப்படும் விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர் ஒருவரைப் படையினர் வழிமறித்தனர். ஆனால் படையினருக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு அவர் தப்பி ஓடி விட்டார். என்றாலும் அவர் வசம் இருந்த பொதி ஒன்று படையினரிடம் சிக்கிக் கொண்டது.

அந்தப் பொதியில் யாழ். மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் பல அரசியல் பிரமுகர்களின் படங்கள் காணப்பட்டன.

—இது தான் பொலிஸார் தெரிவித்த தகவல்.

சம்பந்தப்பட்ட அரசியல் பிரமுகர்களை 'இலக்கு' வைக்கும் நோக்கத்துடன், அவர்களை அடையாளம் காண்பதற்காகத்தான் இந்தப் படங்களைப் புலிகள் இயக்க உறுப்பினர் தம்முடன் கொண்டு அலைந்து இருக்கலாம் என்பது பொலிஸாரின் ஊகம்.

அண்மையில், பொதுசன ஐக்கிய முன்னணியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட முன் வந்த மட்டக்களப்பு மாநகர முன்னாள் மேயர் செழியன் பேரின்பநாயகம் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் சுடப்பட்ட இடத்திலும் அவரது போட்டோ ஒன்று காணப்பட்டது.

அவரைக் கொல்ல வந்த கொலையாளி, அவரைச் சுலபமாக அடையாளம் காண்பதற்காக அவரின் படத்தையும் கொண்டு வந்திருக்கலாம் என்றும், சுட்ட பின்னர் அவசரத்தில் அந்தப் படத்தைக் கைவிட்டுச் சென்றிருக்கலாம் என்றும் கருதப்பட்டது.

அந்தப் பின்னணியில்—

யாழ்ப்பாணத்திலும் போட்டியிடும் பல வேட்பாளர்களினதும் படங்கள் விடுதலைப்புலி என சந்தேகிக்கப்படும் ஒருவர் வசம் இருந்தன என்ற தகவல் சம்பந்தப்பட்ட வேட்பாளர்களின் வயிற்றில் புளியைக் கரைத்திருப்பது நிஜம்.



யாழ்ப்பாணத்து மக்களுக்கு முகம் தெரியாத— பத்திரிகைகளில் பெயர் மட்டும் அடிபட்ட— பல அரசியல் பிரமுகர்கள் இப்போது யாழ் தேர்தல்களத்தில் குதித்திருக்கின்றார்கள். தேர்தல் காற்று அவர்களைக் கொழும்பிலிருந்தும் பிற இடங்களில் இருந்தும் அள்ளிக்கொண்டு வந்து யாழ்ப்பாணத்தில் தள்ளி இருக்கின்றது.

வன்னிக்காட்டிலும், யாழ்நகரிலும் மறைவு வாழ்க்கை நடத்தும் புலிகள் மட்டுமல்ல— யாழ்ப்பாணத்தின் சாதாரண பொதுமக்களும் கூட— முகம் தெரியாத இந்த அரசியல்வாதிகள் பலரை நேரில் பார்த்து இன்னார்தான் என்று அடையாளம் கூற முடியாது என்பதுதான் உண்மை.

சரி, இந்தப் போட்டோக்கள் புலிகளின் கைகளுக்கு எப்படிக் கிடைத்தன?

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் பத்திரிகை நிருபர் ஒருவர் மூலமே இந்தப் படங்கள் புலிகளின் கைகளுக்கு எட்டி இருக்கலாம் என்பது புலன் விசாரணையாளர்களின் சந்தேகம் போல் தெரிகிறது.

புலிச்சந்தேக நபரின் கைகளில் இருந்து படையினர் வசம் சிக்கிய படங்கள் பெரும்பாலும் யாழ். மாவட்டத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் அல்லது அதனை ஒட்டி, சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் மாநாடுகளின் போது எடுக்கப்பட்டவை என்று கூறப்படுகின்றது.

பல்வேறு கட்சிகள் சம்பந்தப்பட்ட இந்தப் படங்களைப் பத்திரிகை நிருபரோ அல்லது பத்திரிகை படப்பிடிப்பாளரோதான் எடுத்திருக்க வேண்டும் என்று புலன் விசாரணையாளர்கள் கருதுகின்றார்கள்.

இதன் தொடர்ச்சியாக படத்தைக் கழுவி, பிரிண்ட் செய்து கொடுத்ததாகக் கருதப்படும் நிறுவன ஊழியர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று அறிய வருகின்றது.

அவர்களிடம் இருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பத்திரிகை நிருபர் ஒருவர் விசாரணைக்கு அழைக்கப்படலாம் எனக் கருதப்படுகின்றது.

யாழ்ப்பாணம் வந்து சென்ற பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் மூலம் கொழும்பில் உள்ள பத்திரிகை ஒன்றுக்கு முகவரியிட்டு, 'என்வலப்' ஒன்றில் தான் அனுப்பி வைத்த படங்கள் சம்பந்தப்பட்ட பத்திரிகை நிறுவனத்தை இன்னும் சென்றடையவில்லை என்றும்—

சில சமயங்களில் அந்தப் படங்கள்தான் எங்கேயோ 'மிஸ்' ஆகிப் படையினர் வசம் சிக்கியிருக்கலாம் என்றும்—

சம்பந்தப்பட்ட பத்திரிகை நிருபர் தரப்பில் கூறப்படுவதாகத் தகவல்.

எது எப்படியோ, பயந்து, நடுங்கி, அச்சத்துடன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் பல அரசியல் பிரமுகர்களுக்கு இந்தப் புகைப்பட விவகாரம் 'குலப்பன் காய்ச்சல்' அடிக்க வைத்திருக்கின்றது என்பது மட்டும் உண்மை.

**— விண்ணன்**

## வாசகர் இதயம் பேசுகிறது

மில்லேனியத்தின் புதியவரவு "சுடர் ஒளி" எம்மை மெய் மறக்கச் செய்து விட்டது. அனைத்துப் பக்கங்களுமே அருமை.

**-தங்கவேள் கருணாகரன், கண்டி.**

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை எதுவுமே இதுவரை மேற்கொள்ளாத, அளவுக்கு மிகவும் சிறப்பான முறையில் லே அவுட் - வர்ணத் தொகுப்பு ஆகியவற்றில் சிறந்து விளங்குகிறது. "சுடர் ஒளி" கையில் எடுத்ததுமே மெய் மறந்து விட்டோம்.

**-கே.வரதராஜன், வத்தளை.**

ஆரம்பமே அமர்க்களம். முகப்புப் படம் பலே ஜோர்; ஜாதி, மத பேதம் பார்க்காது அனைத்து மதங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் "சுடர் ஒளி"யே நீ வாழி.

**-ஆர்.கிட்ணன் புஷ்பராஜ், இறக்குவானை.**

"உள்ளாடையின்றி மைதானத்தில்" என்ற கட்டுரையில் "ராக்கிங் சம்பவங்கள் எல்லாவற்றிலும் தொடர்புடையவர்கள் யாழ்ப்பாண மாணவர்களே" என்று குறிப்பிடப் பட்டுள்ளது. ஏனைய பல்கலைக்கழகங்களில் இந்தக் கொடுமை நடக்கவில்லையா?

**-செ.கீர்த்தன்.**

முதல் வருகையிலேயே அசத்தி விட்டாய். உனது உடல் அமைப்பு பலே ஜோர். ஆக்கங்களும் மெருகூட்டுவனவாக இருக்கின்றன. எம் போன்ற வாசகர்களுக்குக் களம் அமைத்துத் தருவாயா?

**-எம்.மைக்கல் பெர்னாண்டோ, விண்டுல.**

ஆசிரியர் தலையங்கம் "தேர்தல் சந்தேகம்" வாக்காளர் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

**-ஜோசப் சின்னத்தம்பி, கொழும்பு-13.**

"சுடர் ஒளி"யில் விதம் விதமான அம்சங்கள் இருக்கின்றன. பாராட்டுகிறோம். மாணவர்களுக்கும் ஒரு பகுதியை ஒதுக்கினால் என்ன?

**-வீ.தமயந்தி, கொழும்பு-6.**

பெரியோர் முதல் சிறியோர் வரை அனைவரும் படித்து ரசிக்க எல்லா வித அம்சங்களும் இருக்கின்றன.

**-எம்.சதீஷ்குமார், இரட்டைப்பாதை.**

சுடர் ஒளியின் 'லே அவுட்' பிரமாதம். வண்ணக் கலவைகள் விளையாடுகின்றன. பார்க்கப் பரவசம். படித்துச் சுவைக்க நவரசம் ததும்புகிறது. மொத்தத்தில் இலங்கைத் தமிழ் பத்திரிகைகளின் ஒளிவிளக்காகவே சுடர் ஒளி பிரகாசிக்கிறது.

**தி. நாதன், கொழும்பு-15.**

"மசாலா மிக்ஸ்" படு ஜோர். அண்டை நாட்டு அரசியல் தேவைதான். ஆயினும் நம்நாட்டு நடப்புகளையும், மூடி மறைக்கப்படும் உண்மைகளையும் தேடிப் பிடித்துத் தாருங்கள்.

**-அ.அரசரெத்தினம், மூதூர்.**

மகளிருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள். இளைஞர்களுக்கும் ஒரு பகுதி தாருங்கள்.

**-கே.செந்தில்குமார், தெஹிவளை.**

அடுத்த இதழ் எப்போது வரும் என்ற துடிப்புடன் காத்திருக்கிறோம்.

**-மொஹமட் இர்ஹாம், காத்தான்குடி -05.**

ஆத்மீகம் என்ற பெயரில் அரசியல்வாதிகளை நையாண்டி செய்ய இந்து சமயத்தைப் பயன்படுத்தக் கூடாது.

**-ஆண்டிமுனை அசோக், உடப்பு.**

பத்திரிகைகளில் எழுதுபவர்கள் சிபார்சின் பேரிலோ நட்பு ரீதியிலோ களம் அமைக்கிறார்கள் என்ற குறை "சுடர் ஒளி"க்கு வந்து விடக் கூடாது.

**-அம்தரவல்ல நிலாவாசன்.**

"சுடர் ஒளி"யின் வரவு தமிழ் வாசகர்களுக்கு நல்வரவு.

**-ம.ஸ்ரீகாந்தன், இங்கிரிய.**

# வன்னி விஜயத்தால் ஜன்னி சிங்கள வேட்பாளர்களுக்கு!

பதினோராவது நாடாளுமன்றத் தேர்தல் இன்னும் எட்டு நாட்களில், அதாவது எதிர்வரும் 10 ஆம் திகதி நடக்கப்போகிறது.

வன்னித் தேர்தல் கள நிலைமை மிகவும் சுவாரஸ்யமானது.

ஆறு எம்.பி பதவிகளுக்கு முன் எப்பொழுதும் இல்லாத மாதிரி இம்முறை 17 அரசியல் கட்சிகளையும் 7 சுயேச்சைக் குழுக்களையும் சேர்ந்த 207 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

இவர்களில் 88 பேர் தமிழர்கள். 60பேர் சிங்களவர்கள். 54 பேர் முஸ்லிம்கள். இந்த 207 வேட்பாளர்களில் 8 பேர் பெண்கள்.

## வன்னி தேர்தல் களம்

எல்லோரும் பொதுக்கூட்டம் நடத்திப் பிரசாரம் செய்யத் தயங்குகிறார்கள், போஸ்டர்களையே நம்பியிருக்கிறார்கள். அதனால் வவுனி யாவின் 6 அங்குலம் கனதியான மதில்கள் எல்லாம் அரை அங்குலம் பருத்து விட்டன.

வேட்பாளர்களில் பலர் இதற்கு முன்னர் வன்னி மண்ணில் காலடி வைக்காதவர்கள். அவர்களுக்கு வன்னி மக்களைத் தெரியாது. பலரும் தென்னிலங்கையிலிருந்து வந்திறங்கியவர்கள், சிங்களவர்கள்.

வவுனியா நகரை முதல் தடவையாகப் பார்த்து ரசித்துவிட்டு மிகுந்த உற்சாகத்துடன் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்கள்.

அப்போது இருந்த உற்சாகம் இப்போது அவர்களுக்கு இல்லை. காரணம்?. அவர்கள் நினைத்தது ஒன்று, நடப்பது இன்னொன்று. நடக்கப் போவது பிறிதொன்று. இந்த விஷயம் அவர்களுக்கு விளங்கிவிட்டது. அதனால் ஜன்னி கண்டவர்கள் போல் நடுங்கத் தொடங்கி விட்டார்கள்.

பூமி புத்திர, சிஹல உறுமய போன்ற சிங்களக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் வன்னியில் போட்டியிடுகிறார்கள். அவர்களுக்கு வன்னியில் போட்டியிட வேண்டும் என்ற எண்ணம் வந்தது எப்படி?

இந்தப் பகுதிகளில் தேர்தல் ஒழுங்காக நடக்காது. நடக்கப் புலிகள் விடமாட்டார்கள். தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள்.

இப்படியான நிலையில் கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி ஐம்பது நூறு, வாக்குகள் மட்டும் பெற்று நாடாளுமன்றம் செல்லக் கூடியதாக இருந்தது. அதே போல் இம்முறையும் ஐம்பது, நூறு வாக்குகள் பெற்றாலேபோதும். நாடாளுமன்றம் போய் விடலாம் என்று உசுப்பேற்றப்பட்ட நிலையிலேயே இங்கு இவ்வளவு சிங்கள வேட்பா ளர்கள் போட்டியிட முன்வந்தார்கள். அதை அவர்களே தமக்கு வேண்டியவர்களிடம் கூறியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, அடாவடித்தனங்கள், விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்கள் ஆகியவற்றால் தமிழ் மக்கள் கூடச் சிங்களக் கட்சிகளுக்கு வாக்களிப்பர் என்றும் அவர்களுக்கு கூறப்பட்டிருக்கிறதாம்.

இவைகளை நம்பி, தேர்தலில் தமக்கு எம்.பி பதவி என்ற சுவிப் அடிக்கலாம் என்ற நப்பாசையிலேயே இவர்கள் களத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

இப்போதுதான் அவர்களுக்கு உண்மை நிலை வெளிச்சமாயிருக்கிறது. அதனால் ஏமாந்தோமே என்று நொந்து கொள்கிறார்கள். ஜன்னி கண்டவர்கள் போல் சிலர் நடுங்கவும் செய்கிறார்கள்.

### உண்மை நிலை என்ன?

வன்னித் தேர்தல் மாவட்டமென்பது வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய 3 மாவட்டங்களை உள்ளடக்கியது.

இதில் சர்ச்சைக்குரிய இரு பிரதேசங்கள் இருக்கின்றன.

ஒன்று அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி.

மற்றது புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் மட்டுமே தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தேர்தல் நடாத்துவது பற்றி அரசாங்கம் ஆலோசிக்கவுமில்லை, புலிகள் ஆட்சேபனை தெரிவிக்கவுமில்லை.

வவுனியா மன்னார் மாவட்டங்களில் அரைவாசிப் பகுதியும், முல்லைத்தீவில் 90 சதவீதத்திற்கு மேற்பட்ட பகுதியும் புலிகளின் கைகளில் இருக்கின்றன.

எஞ்சிய பகுதிகள்தான் படையினரின் கட்டுப் பாட்டில் உள்ளன. அங்கே மட்டுமே தேர்தல் நடத்தப்படவுள்ளது.

வன்னித்தேர்தல் மாவட்டத்தில் 2இலட்சத்து 13 ஆயிரத்து 111பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருக்கின்றனர். இந்த எண்ணிக்கை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள வாக்காளர்களையும் உள்ளடக்கியது.

வவுனியாவில் 91 ஆயிரத்து 589 பேரும்-

> "கடந்த முறை வன்னி மாவட்டத்திலிருந்து 4 தமிழ் எம்.பி.க்களும் ஒரு முஸ்லிம் எம்.பி.யும், ஒரு சிங்கள எம்.பி.யும் நாடாளுமன்றம் சென்றனர். இம்முறை...?"

மன்னாரில் 58 ஆயிரத்து 468 பேரும்-

முல்லைத்தீவில் 58 ஆயிரத்து 54 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவைப் பொறுத்தவரை இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள முல்லைத்தீவுக்குக் குறுக்காக இருக்கும் மணலாறுப் பகுதியில் வாழும் சிறு எண்ணிக்கையான சிங்களவர்களே வாக்களிக்கவுள்ளனர்.

ஏனைய வவுனியா, மன்னார் பகுதிகளிலும் அதேபோல் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் உள்ளவர்கள் பாதிப்பேரளவிலேயே வாக்களிக்க முன்வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் தேர்தல் களத்தில் நிற்கும் கட்சிகள் சில மேற்கொண்ட ஆய்வின் படி 2இலட்சத்து 13 ஆயிரம் வாக்காளர்களில் 1இலட்சத்து 65 ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் வன்னி மாவட்டத்தில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்றும்-

அவர்களில் சுமார் 65 ஆயிரம் வாக்காளர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாக்களிக்க முடியாத நிலையில் உள்ளனர் என்றும்

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள எஞ்சிய பகுதிகளைச் சேர்ந்த 1 இலட்சம் பேரில் சுமார் 80 ஆயிரம் பேர் வரை வாக்களிக்க முன்வருவர் என்றும்-

ஏனைய 20 ஆயிரம் பேர் பல்வேறு காரணங்களினால் வாக்களிப்பைப் புறக்கணிக்கலாம் என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது.

முஸ்லிம் வேட்பாளர்களுக்கும் வன்னி மாவட்டத்தில் கஷ்டம்தான். 34 ஆயிரத்து 200 வரையான முஸ்லிம் வாக்காளர்கள் வன்னி மாவட்டத்தில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அவர்களில் சுமார் 4 ஆயிரத்து 200 பேர் வாக்களிப்பைப் புறக்கணிக்க 30 ஆயிரம் பேர் வாக்களிக்க முன்வரலாம் என்றும்-

சிங்களவர்களில் 12 ஆயிரத்து 100பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள போதிலும் 2 ஆயிரத்து 100 பேர் பல்வேறு காரணங்களால் வாக்களிக்க முடியாமல் போகச் சுமார் 10 ஆயிரம் பேர் வாக்களிக்க முன்வரலாம் என்றும் அண்ணளவாகக் கணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 88 தமிழ் வேட்பாளர்களும் 60 சிங்கள வேட்பாளர்களும், 59 முஸ்லிம் வேட்பாளர்களும் களத்தில் இறங்கியுள்ளனர்.

நடைமுறையிலுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தலின் அடிப்படையில் ஒவ்வொரு இன மக்களும் தாம் விரும்பும் கட்சிகளிலும் சுயேச்சைக் குழுக்களிலும் இருந்து போட்டியிடும் தத்தமது இனத்தைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கே தமது விருப்பு வாக்குகளை வழங்க முன்வந்தால் என்ன நடக்கும்?

அண்ணளவான கணிப்பீட்டின்படி வாக்களிக்க உள்ளவர்கள் என்று கருதப்படும் 10 ஆயிரம் சிங்கள வாக்காளர்களின் வாக்குகள் போட்டியிடும் 60 சிங்கள வேட்பாளர்களுக்குப் பிரிந்து செல்ல வாய்ப்பு ஏற்படுகிறது.

அப்படி நடந்தால் ஒரு சிங்கள வேட்பாளர் சராசரியாக 160 வரையான வாக்குகளை மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

3 விருப்பு வாக்குகளின் படி பார்த்தால் ஒரு வேட்பாளர் அதிகபட்சம் சராசரியாக 480 வாக்குகளை மட்டுமே பெற முடியும்.

முஸ்லிம்களில் வாக்களிப்பார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ள 80 ஆயிரம் வாக்காளர்களின் வாக்குகளும் போட்டியிடும் 59 முஸ்லிம் வேட்பாளர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் நிலையில் ஒரு முஸ்லிம் வேட்பாளர் சராசரியாக 500 வாக்குகளை மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

> "கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி ஐம்பது நூறு, வாக்குகள் மட்டும் பெற்று நாடாளுமன்றம் செல்லக் கூடியதாக இருந்தது. அதே போல் இம்முறையும் ஐம்பது, நூறு வாக்குகள் பெற்றாலேபோதும். நாடாளுமன்றம் போய் விடலாம் என்று உசுப்பேற்றப்பட்ட நிலையி லேயே இங்கு இவ்வளவு சிங்கள வேட்பா ளர்கள் போட்டியிட முன்வந்தார்கள்"

மூன்று விருப்பு வாக்குகளின் படி பார்த்தால் ஆயிரத்து ஐநூறு வாக்கை மட்டுமே ஒரு வேட்பாளர் - முஸ்லிம் வேட்பாளர் பெற்றுக் கொள்வார்.

தமிழர்களில் 80 ஆயிரம் பேர் வாக்களிப்பர் என்பது அண்ணளவான கணிப்பீடு. அதன்படி, களத்தில் குதித்துள்ள 88 தமிழ் வேட்பாளர்கள் இந்த வாக்குகளைப் பிரித்தெடுக்கப் போகிறார்கள்.

ஒரு தமிழ் வேட்பாளருக்குச் சராசரியாக 900 வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொள்ளும் வாய்ப்பிருக்கிறது.

மூன்று விருப்பு வாக்குகளின் படி பார்த்தால் ஒருதமிழ் வேட்பாளர் ஆயிரத்து 700 வாக்குகளைப் பெறுவார்.

ஒரு சிலருக்கு விருப்பு வாக்குகள் கூடலாம் - குறையலாம். எப்படி இருப்பினும் இம்முறை வன்னியில் சில ஆயிரம் வாக்குகளுடனேயே வேட்பாளர்கள் தெரிவாகக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

இவ்வாறான நிலமையும் வவுனியாவில் பல சிங்கள, முஸ்லிம் கட்சிகளைப் போட்டியில் இறங்க உந்தித் தள்ளியிருக்கின்றன.

ஆயிரமோ, இரண்டாயிரமோ சிறு தொகை வாக்குகளுடன் எம்.பி ஆகி 6 ஆண்டுகள் ராஜபோகம் அனுபவிக்கலாம் என்று கனவு கண்ட வேட்பாளர்கள் தற்போது கண் விழித்து யோசிக்கிறார்கள்.

கடந்த முறை வன்னி மாவட்டத்திலிருந்து 4 தமிழ் எம்.பி.க்களும் ஒரு முஸ்லிம் எம்.பி.யும், ஒரு சிங்கள எம்.பி.யும் நாடாளுமன்றம் சென்றனர். இம்முறை...?

**- வன்னி மைந்தன்**

## மூளைக்கு வேலை



பீற்றர், ஜோன் இருவரும் இணைபிரியாத நண்பர்கள். ஒரு நாள் திடீரென பீற்றருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. தான் இறக்கப் போவதை உணர்ந்தான் பீற்றர். நண்பன் ஜோனை அழைத்தான்

நான் இறப்பது பற்றிக் கவலை இல்லை. எனது மகனை நினைக்கவே கவலையாக " இருக்கிறது" என்று கூறினான்.

"ஏன் நான் இல்லையா? நான் பார்த்துக் கொள்கிறேனே என்றான்" ஜோன். பீற்றரும் மகிழ்ச்சியுடன் தான். சேர்த்து வைத்திருந்த பத்து லட்சம் ரூபாவையும் அவனிடம் கொடுத்தான். இதில் உனக்கு விருப்பமானதை எனது மகன் வளர்ந்ததன் பின் கொடு" என்று கூறி விட்டு இறந்தான்.

காலமும் கடந்தது சிறுவனும் இளைஞனானான். தனது தந்தை கொடுத்த பணத்தை வாங்குவதற்காக ஜோனிடம் சென்றான்.

வந்திருப்பவன் தனது நண்பனின் மகன் என்பதை அறிந்தும் அவனை ஏமாற்ற நினைத்தான் ஜோன்.

பத்தாயிரம் ரூபாவை இளைஞனிடம் கொடுத்தான்.

இளைஞன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தான். நீதிவானும் விளக்கமாக விசாரித்தார். ஜோனின் குற்ற எண்ணங்கள் புரிந்தன.

"உனது நண்பன் மகனை இவ்வாறு ஏமாற்றுவது நியாயமா? என்று கேட்டார். "எனக்கு விருப்பமான தொகையை தனது மகனுக்குக் கொடுக்கும் படி பீற்றர் கூறினான். அதன் படியே நானும் நடக்கிறேன்" என்றான் ஜோன்.

ஜோனின் குற்ற எண்ணத்தையும் இளைஞனின் நிலையையும் புரிந்து கொண்ட நீதிவான் ஜோனை மடக்க எண்ணினார்.

"இளைஞனுக்கு எவ்வளவு கொடுக்க விரும்புகிறாய்" என்று கேட்டார்.

"பத்தாயிரம் ரூபா" என்று பதில் வந்தது.

"உனக்கு விருப்பமான தொகை எவ்வளவு" என்று கேட்டார் நீதிபதி.

"ஒன்பது லட்சத்து தொண்ணூறாயிரம் ரூபா" என்றான் ஜோன்.

அப்படியானால் நீதிவான் சட்டப்படி இளைஞனுக்கு எவ்வளவு பணம் வழங்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கி இருப்பார்?

(விடை 16ம் பக்கம்)

ஒப்பந்தத்தை மீறி சம்பள
உயர்வு கோரி வேலை
நிறுத்தம் செய்ததால்
வந்த வினை!

# கூட்டு ஒப்பந்தக்காரர்கள் கோர்ட்டில்!

தாம் செய்யாத தவறுக்காக
தொழிலாளர்கள் பல
வழிகளில் நட்டப்பட்டு
விட்டார்கள்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்குக் கூட்டு ஒப்பந்தம் மூலம் வேட்டு வைத்தார்கள் சில தொழிற்சங்கத் தலைவர்கள். அவர்கள் இன்று கோர்ட்டுக்குப் போக வேண்டியதாகிவிட்டது. என்னே விந்தை!. இந்தத் தலைவர்களின் அழைப்புக்கு இணங்கி வேலை நிறுத்தம் செய்த அப்பாவித் தொழிலாளர்கள் பல கோடி ரூபா வருமானத்தை இழந்துவிட்டார்கள். அது தான் துன்பம்.

"பிரதமர் இரண்டு தினங்களுக்குள் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பார். ஓய்வுபெற்ற தொழில் கமிஷனர் தலைமையில் குழு அமைக் கப்பட்டுள்ளது. எனினும் 400 ரூபா கிடைக்கும் வரை போராட்டம் ஓயாது" இப்படி அப்போது முழங்கினார்கள்.

அந்த முழக்கம் இப்போது முனகல் ஆகிவிட்டது.

"ஜனாதிபதி, விசாரணைக்குழு வை நியமித்து விட்டார். அதனால் போராட்டத்தை வாபஸ் பெற்று விட்டோம்" என்று மெல்லக் கூறுகிறார்கள்.

இவர்கள் பிரதமரையும், ஜனாதிபதியையும் நம்பிப் போராட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள், ஆயினும் தொழிலாளர்கள் இவர்களை நம்பத் தயாராக இல்லை.

போராட்டத்தின் விளைவாக இந்தத் தலைவர்களினால் தொழிலாளர்களுக்கு முகம் கொடு த்து அவர்களிடம் வாக்குக் கேட்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது.

"எங்களுடைய வாக்குகளையும், தொழிற் சங்க அங்கத்துவ பலத்தையும் பணயம் வைத்துதான் பலரும் மாகாண சபைகளுக்கும் நாடாளுமன்றத்திற்கும் செல்கிறார்கள். அங்கே தமது செல்வாக்கையும், சொல்வாக்கையும் காட்ட வேண்டாமா? அதற்கு அச்சம்.

எம்மைக் காட்டிப் பதவிக்குப் போனவர்கள்! அவர்களுடைய திறமையை, கெட்டித்தனத்தைக் காட்டி எங்களுக்கு நன்மை தேடித்தர முடி யாத இவர்கள் , எங்களுடைய அடிப்படை உரிமைகளுக்கும், அற்பசம்பள உயர்விற்கும், ஏன் கூட்டு ஒப்பந்தம் செய்வதற்கும் கூட எங்களை வேலை நிறுத்தம் செய்யச் சொல்கின்றனர்.

அவர்களின் சொல்லைக் கேட்டு நடக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாங்களே வேலை இழ ந்து, வருமானம் இழந்து, துன்பப்பட வேண்டி இருக்கிறது. இப்போதும் கூட.

11 நாட்களாக வேலைநிறுத்தம் செய்து பல கோடி ரூபா வருமானத்தை இழந்துள்ளோம். கிடைத்தது ஏமாற்றமே.

இந்தக்குழு அமைக்கவா எங்களை வேலை நிறுத்தம் செய்யச்சொன்னார்கள். ஏழைத்தொழிலாளர்கள் ஏக்கத்துடன் இப்படிக் கேட்டுக் குமுறுகிறார்கள்.

வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டு விட்டாலும் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் இவர்களைச் சும்மா விடவில்லை. கூட்டு ஒப்பந்தத்தை மீறி வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள் என உயர் நீதிமன்றத்தில் இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து தடை உத்தரவையும் பெற்று விட்டனர். இந்த வழக்கு அக்டோபர் 4ஆந் திகதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ளது.

இவர்கள் செய்த கூட்டு ஒப்பந்தம் என்ன



ஆறுமுகம் தொண்டமான்



ராஜா செனிவரத்ன



பி.வி. கந்தையா

சொல்கிறது?. "இரண்டு வருடங்களுக்குச் சம்பள உயர்வு கேட்கக்கூடாது , சம்பள உயர்வுக்காக வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தக்கூடாது" என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூட்டு ஒப்பந்தத்தில் இ.தொ.கா. பொதுச் செயலாளர் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், இ.தே.தோ.தொ. சங்கம் பொதுச் செயலாளர் ராஜா செனவிரத்ன, கூட்டுக் கமிட்டியின் செயலாளர் நாயகம் பி.வி.கந்தையா ஆகியோர் கைசாத்திட்டுள்ளனர்.

இவர்கள் இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு தான் கைச்சாத்திட்டனரா? அல்லது எவருடைய நிர்ப்பந்தமும் இன்றி சுய நன்மைக்காக ஒப்பம் இட்டனரா? இதுவே பலரும் இப்போது கேட்கும் கேள்வி.

இது தொடர்பாக இ.தே.தோ.தொ.சங்கப் பொதுச் செயலாளர் ராஜா செனவிரத்ன விடம் கேட்ட போது பின்வருமாறு அவர் சொன்னார்:–

"இப்படியான சிக்கல்கள் ஏற்படலாம் என்பதால்தான் எல்லா தொழிற்சங்கங்களையும் கூட்டி ஆராய்ந்த பின் 14 நாட்கள் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்தோம். ஆனால் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் திடீர் வேலை நிறுத்தம் என்று குட்டையைக் குழப்பிவிட்டார்" இப்படி அவர் கூறினார்.

"முழுப்பூசனிக்காயை இலைச் சோற்றில் மறைக்க முயலலாம், ஆயினும் அது முடியுமா?. எல்லாத் தொழிற் சங்கங்களையும் கலந்து பேசியதாச் சொல்லப்படுவது தவறு.

"ஆரம்பம் முதல் இந்தக் கூட்டு ஒப்பந்தத்தை எதிர்த்து வந்த மலையக மக்கள் முன்னணி, தேசிய தொழிலாளர் காங்கிரஸ் முதலான கட்சிகளுக்கு அறிவிக்கப்படவில்லை. முடிச்சைப் போட்டவர்களே அதை இரகசியமாக அவிழ்க்கப் பார்த்தனர் ஆனால் அவர்கள் அந்தச் சுருக்கில் தாங்களே சிக்கிக் கொண்டனர்" என மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் கூறினார்.

தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் ரி.ஐயாத்துரை கருத்துத் தெரிவிக்கையில் "தலைமைத்துவ முதிர்ச்சி இன்மையும், தொழிற்சங்க அனுபவமின்மையுமே இப்படுதோல்விக்கான காரணம்" என்றார்.

இ.தொ.கா. உப தலைவரும் அதிருப்தியாளர்கள் குழுவில் ஒருவருமான சதாசிவத்திடம் இது பற்றிக் கேட்ட போது "எவரையும் கலந்து ஆலோசிக்க வேண்டிய அவசியம் தமக்கு இல்லை, என்ற எதேச்சாதிகாரப் போக்கில் பின் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல் சிலர் நடந்து கொண்டதுதான் இன்றைய இக்கட்டான நிலைக்கு முக்கிய காரணம் என்றார்.

தோட்டத் தொழிலாளர்கள் என்ன பாவம் செய்தார்களோ! சில தொழிற்சங்கங்கள் எதேச்சையாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் பாதிக்கப்படுபவர்கள் தொழிலாளர்கள்தாம். யாரைக் கேட்பார்கள்? யாரிடம் சொல்லி அழுவார்கள்?

தொழிலாளர்கள் தாம் செய்யாத தவறுக்காகப் பலவழியில் நட்டப்பட்டு விட்டார்கள். தீபாவளிப் பண்டிகை நெருங்குகிறது. என்ன செய்வது என்று தெரியாமல் தொழிலாளர்கள் திக்குமுக்காடுகின்றார்கள்.

—இரா. புத்திரசிகாமணி

# விழிகொடுத்த விண்மீன் மீனா



சென்னையில் உள்ள குஷால்தாஸ் கார்டன். மலையாளப்படம் ஒன்றின் படப்பிடிப்பு, நடிகர் சுரேஷ் கோபியோடு, கொஞ்சிக் கொண்டிருந்த மீனா, என்னைக்கண்டதும் ''லஞ்ச் பிரேக்கில் பேசுவோமே'' செல்லமாய் சொல்லியவர் அவசர அவசரமாக ஷாட்டை முடித்து விட்டு வந்தார். சின்னச்சின்னக் கிண்ணங்களில் சத்தான உணவு அயிட்டங்கள் மீனாவை வரவேற்றன. (மீனாவின் அழகின் ரகசியம் அதுதான் போலிருக்கிறது.)

''சாப்பிட்டுக் கொண்டே பேசலாமே!'' சிரித்தார்.

*இவ்வளவு கொஞ்சமாய் சாப்பிடுறீங்களே... போதுமா? (சாப்பாட்டு நேரமாதலால் அதை வைத்தே பேச்சை ஆரம்பித்தேன்.)*

மீனா உடம்பைக் குறைச்சது எப்படின்னு எல்லோரும் கேட்கிறாங்களே? எப்படி! இப்படித்தான்! ஒரு தேவரகசியத்தைச் சொல்லி விட்ட சந்தோஷத்தில் கலகலவென்று சிரிக்கிறார்.

*தமிழ், தெலுங்கு என்று மட்டும்தான் நடித்துக் கொண்டிருந்தீர்கள் இப்போது மலையாளத்திலும் நடிக்கிறீர்களே! அதைப்பற்றி?*

யெஸ் ஒப்கோர்ஸ் இந்த வாய்ப்பு தற்செயலாகத்தான் வந்தது. நான் 'வானத்தைப்போல' ஷூட்டிங்கில் இருந்தப்போ வந்து கதை சொன்னாங்க. நீங்க சரின்னு சொன்னாத்தான் இந்த சப்ஜெக்ட். இல்லேன்னா வேற சப்ஜெக்ட்தான் ரெடி பண்ணணும்னு சொன்னப்போ மறுக்க முடியல்ல. ஆனால் சூப்பர் சப்ஜெக்ட் சுரேஷ்கோபி, ரகுமான், அப்பாஸ் மூணு பேரும் ஹீரோ நான் மட்டும்தான் ஹீரோயின் எப்படி?

*அதுசரி 'மீனா' தமிழில் கேரக்டர் ரோல்களில் நடித்து வரும் நீங்கள் தெலுங்கில் தாராளமாக (கவர்ச்சியில்) நடிக்கிறீர்கள் என்றொரு கருத்து உலவுகிறதே அதுபற்றி!*

அப்படிச் சொல்வதற்கில்லை. உலகம் ஜெட்வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. 'யங்ஜெனரேஷன்ஸ்' லீட் பண்ணிக் கொண்டிருக்கிறது. சினிமாவும் அப்படித்தான். தமிழ், தெலுங்கு என்ற பேதம் எனக்கில்லை. டைரக்டர்களின் விருப்பப்படிதான் நான் உடைகளைத் தெரிவு செய்கிறேனே தவிர என் சொந்த விருப்பப்படி அல்ல.

*தமிழ்ப்பட ஹீரோக்கள்ல ரொம்பப்பேரு நாற்பது வயசுக்கு மேல் இருக்காங்க. எனக்கு அப்பா மாதிரி இருக்கிற அவங்கூட எப்படி நடிக்கிறதுன்னு நடிகை மாளவிகா பேட்டி கொடுத்திருக்காங்க. நீங்க எப்படி ஃபீல் பண்றீங்க?*

அப்படியா சொன்னாங்க! (வாய்விட்டுச் சிரிக்கிறார்) ஸாரிப்பா நோ கமெண்ட்ஸ். ஆனாலும் அந்த பொண்ணுக்கு தைரியம் அதிகம்! (மறுபடியும் சிரிப்பு)

*பிரபுதேவாவுக்கும் உங்களுக்கும் கல்யாணம் என்ற ஒரு செய்தி 'டபுள்ஸ்' படத்திற்குப்பிறகு உலவுகிறதே!*

அது ஒரு 'மிஸ் அண்டஸ்டாண்டிங்' படத்திற்காக எனக்கும் அவருக்கும் திருமணம் நடந்த காட்சி படமாக்கப்பட்டது. சில பத்திரிகைகள் அதனைப் படமாகப் போட்டு இப்படி ஒரு செய்தியை வெளியிட்டன. அதுதான் உண்மை.

*சரி கல்யாணம் எப்போ?*

நானே அதைப்பற்றி யோசிக்கவில்லை. நீங்க ஏன் அவசரப்படுறீங்க அதை என்னோட அப்பா, அம்மாதான் தீர்மானிக்கனும் நானா எந்த முடிவும் எடுக்க முடியாது. அதுக்கு இப்போ அவசரமில்லை. நிறைய நடிக்கணும். அப்புறம்தான் கல்யாணமெல்லாம்.

*(பேச்சை மாற்ற விரும்பி) ரசிகர்களிடம் மாட்டிக்கொண்ட அனுபவம் உண்டா?*

சமீபத்தில் ஆந்திரா போயிருந்தப்போ நான் நடிச்ச படம் ஒன்று அங்க ஓடிட்டு இருந்திச்சு. சரி தியேட்டர்ல போய் பார்க்கலாம்னு போனா. அங்க நான் வந்திருக்கிற விஷயம் ஆடியன்ஸுக்குத் தெரிஞ்சு போச்சு. எல்லோரும் கூடிட்டாங்க. படம் முடிஞ்சும் என்னால வெளியில வரமுடியல்ல. எங்கே வெளியே வந்தா என்னை தனித்தனியா பிச்சு எடுத்துடுவாங்களோன்னு பயம் வந்திருச்சு. அப்புறம் தியேட்டர் ஆட்கள் தடி எடுத்து கூட்டத்தை விரட்டினாங்க. வீடு வந்து சேர்வதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. மறுநாள் தியேட்டர் ஓனர் போன் பண்ணி உங்களைப் பார்க்கணும்னு சீட்டையெல்லாம் கிழிச்சிட்டாங்கம்மா என்றார். வித்தியாசமான அனுபவம்.



ரிதம் படத்தில் மீனா, அர்ஜுன்

*அண்மையில் கண்தானம் செய்திருக்கிறீர்கள். அது பற்றி!*

பிறந்த நாளின் போது (கடந்த 16 ஆம் திகதி) நான் லண்டனில் நடந்த பின்னணிப்பாடகர் ஹரிஹரனின் இசை நிகழ்ச்சியில் இருந்தேன். அதே மேடையில் தான் பிறந்த தினத்தையும் கொண்டாடினேன். மறுநாள் சென்னை வந்தே எனது கண்களை சங்கர நேத்ராலயா கண் மருத்துவ மனைக்கு தானம் செய்தேன். அப்பாவும் தனது கண்களைத் தானம் செய்திருக்கிறார்

இரண்டு வருடங்களுக்கு முன்பே கண்தானம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் இருந்தது. கண்தானம் செய்வதை வெளியில் சொல்லக்கூடாது என்றுதான் இருந்தேன். ஆனால் நான் கண்தானம் செய்தது வெளியில் தெரிந்தால் வேறு யாராவது இதுபோல் கண்தானம் செய்வார்கள் என்பதற்காகவே இதை வெளியில் சொன்னேன்.

தன் அழகிய கண்கள் தன்னோடு மட்டும் போகாது அந்தக்கண்கள் மூலம் வேறுயாராவது பார்வை பெறட்டும் என்ற மீனாவின் உயர்ந்த கொள்கையை வாழ்த்தி விடைபெற்றேன்.

வெல்டன் மீனா!

– ஷாம்

## கை கூடாத கால்ஷீட்

சும்மா இருந்த பிரபுவை மறுபடியும் சதை போட வைத்தவர் இராமநாராயணன். படம்....திருப்பதி ஏழுமலை வெங்கடேசா! நாரா யண மகிமையால் பட்ஜெட்பத்மநாபனாகி விட் டார். இந்த நிலையில் பிரபுவிடம் கால் ஷீட் கேட்டுப் போனார் சேது தயாரிப்பாளர் கந்தசாமி. இருபது இலட்சம் போதும்! காரணம் நீங்க ஒரு நல்ல படம் பண்ணிய தயாரிப்பாளர்... அதனால்...... என்றார் பிரபு. பதினைந்து தருகிறேன் என்றார் கந்தசாமி. நியாயத்திற்கு மரியாதை கிடை. யாதப்பா என எண்ணிய பிரபு நோ! சொல்லி விட் டார் கால்ஷீட் காரியம் காசால் கைகூடவில்லை.

## முத்தம் யாருக்கு?

[illegible] நிறுவனம் [illegible] [illegible] கமல் [illegible] முதல் [illegible] ஜோடி [illegible] [illegible] வேலைகள் மெல்ல மெல்ல [illegible] ஆரம்பித்துள்ளன [illegible] ஆனாலும் [illegible] ஆம் ஆண்டு [illegible] [illegible] [illegible] ஆண்டு முத்தம் [illegible]



## நினைத்தபடி நடந்தால்!

*'இந்தியன்' 'முதல்வன்' என்று பெரியளவில் வெற்றிப்படங்களைத் தந்த ஷங்கர் வழமையாக ஒரு படத்தை முடிக்க இரண்டாண்டுகள் பிடிக்கும். அதற்கிடையில் தயாரிப்பாளர் தலை உருண்டு விடும் என்பது வேறு விடயம்.*

*ஆனால் ஷங்கர் புதிதாக இயக்க உள்ள 'நாயக்' படத்தை 6 மாதத்தில் முடித்துவிடத் திட்டமிட்டுள்ளார். இப்போது மூன்றாவது ஷெட்யூல் மும்பையில் நடந்து கொண்டிருக்கின்றது.*

*(எல்லாம் நினைத்தபடி முடிந்தால் சரிதான்!)*

## ஒற்றுமை

'பெண்ணின் மனதைத் தொட்டு' படத்தில் நடித்த ஜெயாசீல் ஏற்கனவே காபி விளம்பரப் படங்கள் மூலம் பிரபலமானவர். இவரது சொந்த ஊர் கல்கத்தா. பிறந்து வளர்ந்தது அஸாமில்!

இவர் ஏற்கனவே இரண்டு ஹிந்தி படங்களிலும் ஒரு பெங்காலி படத்திலும் நடித்திருக்கிறார். ஆனாலும் அவை இன்னும் ரிலீசாகவில்லை.

சிம்ரனுக்கும் இவருக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. சிம்ரனை அறிமுகம் செய்த முனுசாமி என்பவர்தான் இவரையும் அறிமுகம் செய்திருக்கிறார்.





# ரஹ்மானுக்கு ரூ.300 கோடி

உலகப் புகழ் பெற்ற ஷேக்ஸ்பியரின் வாழ்க்கை வரலாறு நாடகமாக உருவாகின்றது. அந்த நாடகத்துக்கு இசை அமைக்கும் பொறுப்பை ஷேக்ஸ்பியர் பெயரில் இயங்கும் அறக்கட்டளை நிறுவனம் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு வழங்கி இருக்கிறது. இசையில் உண்மைத்துவம் இருக்க வேண்டும் என்பதற்காக லண்டனில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் சென்று முற்கால இசை பற்றிய தகவல்களை ரஹ்மான் சேகரித்து வருகின்றார்.

இதனாலேயே சமீபகாலமாக ரஹ்மான் லண்டன் சென்று வருவது வாடிக்கை ஆகிவிட்டது. இதற்கு இசை அமைக்க ரூ.300 கோடி சம்பளம் பேசப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் ஏ.ஆர்.ரஹ்மான் அமெரிக்காவில் இசை நிகழ்ச்சியும் நடத்த ஒப்புக்கொண்டிருக்கிறார். அதற்கான ஒத்திகையும் நடைபெற்று வருகின்றது. ரஹ்மானா! கொக்கா!!

# காதல் மட்டும் தானா?

'உயிரிலே கலந்தது' என்றால் அது காதல் மட்டும்தான் என்று பலரும் நினைக்கிறார்கள். பாசம், ஆசை, நட்பு, பண்பாடு போன்ற பல விஷயங்கள் உயிரிலே கலந்துள்ளது— அதைத்தான் இந்தப் படத்திலே சொல்லி இருக்கின்றோம் என்கிறார் டாக்டர் விஜயா.

இந்தப்படத்தில் நடிக்க ஒப்பந்தமான போது ஜோதிகாவின் சம்பளம் ரொம்பக் குறைவு. ஆனால் இப்போது அதைப் போல் இரண்டு மடங்கு அவருக்கு சம்பளம். இருந்தாலும் பேசிய சம்பளத்துக்கு நயா பைசா கூட்டித் தரும்படி அவர் கேட்கவில்லை என்கிறார் தயாரிப்பாளர் சிவகுமார்.

ஜோதிகா சம்பளத்தை உயர்த்தாமல் இருப்பதற்கு இன்னொரு காரணம் உண்டு என்கின்றன கோடம்பாக்கம் வட்டாரங்கள். படத்தின் கதாநாயகன் சூர்யா என்பதுதான் அது.






## பிடிச்ச பொண்ணு!

பொள்ளாச்சி வேட்டைக்காரன் புதூர் சக்திவேலின் ஒரே தம்பி செல்வத்துக்கு திருமணம் செய்ய பெண் பார்த்துக் கொண்டிருந்தனர். லட்சுமி ஒரு போட்டோவைக் காண்பித்து, இந்தப் பொண்ணு பேரு மகாலட்சுமி. காலை நாலு மணிக்கு எழுந்து குளிச்சு முடிச்சு, குடும்பப் பொறுப்பை ஏற்கிற பொண்ணு என்றாள். உடனே சக்திவேல், இந்தப் பொண்ணு வேணாம். செல்வம் பதினொரு மணிவரைக்கும் தூங்கறவன். அவ நாலு மணிக்கு எழுப்பி விட்டுட்டாள்னா, பாவம் செல்வம் என்றார்.

இந்தப் பொண்ணு பேரு மதா. டாக்டருக்கு படிக்கிறா. குடும்பமே டாக்டர் குடும்பம் என்று லட்சுமி சொன்னதும், இந்தப் பொண்ணும் வேணாம். சுத்தம், சுகாதாரம்னு தம்பியை வாய்க்கு ருசியா சாப்பிட விடமாட்டாள் என்றார் சக்திவேல். உடனே அவள், இவ பேரு ப்ரீத்தி. காலை பதினொரு மணி வரை தூங்குவாளாம். வாரத்துல ஒரு நாள்தான் குளிப்பாளாம். அழுக்கு ஜீன்ஸ் [illegible] என்று சொல்லி முகம் சுளித்தாள். அதைக் கேட்ட சக்திவேல், இந்தப் பொண்ணுதான் தம்பிக்கேத்த பொண்ணு என்றபடி செல்வத்திடம் விஷயத்தைச் சொல்ல அவனோ திடுக்கிட்டான்.

அண்ணே, நீங்க காட்டின எந்த பொண்ணையுமே எனக்குப் பிடிக்கல. கனவுல ஒரு பொண்ணைப் பார்த்தேன். அவளையே கட்டி வையுங்க போதும் என்று செல்வம் சொல்ல, சொல்லுடா... உன் கனவுல வந்த பொண்ணு யாருன்னு சொல்லு என்று அவனைத் தொந்தரவு செய்தார் சக்திவேல்.

சூப்பர் குட் பிலிம்ஸ் சார்பில் ஆர்.பி.சௌத்ரி தயாரிக்கும் 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' படத்துக்கான இந்தக் காட்சி படமானது. சக்திவேலாக சரத்குமார், செல்வமாக விக்ரம், லட்சுமியாக குஷ்பூ, கனவில் வந்த பெண்ணாக தேவயானி நடித்தனர்.

# திரை மறைவில்...

- மகளிரின் பெயர் கொண்ட படத்தில் நடித்து வரும் நாயகி 'ஸ்ரீ' தான் சினிமாவில் சின்ன வயசு கதாநாயகியாம். தகவல் பரவ ஆரம்பித்த நாளிலிருந்து 'என்றும் 16' என்று அப்டேட்மென்ட் கொடுத்த நடிகைகள் பாடுதிண்டாட்டமாய் போய் விட்டது.
- கார்கில் பகுதியில் தொடர்ந்து பதற்றமிருப்பதை உணர்ந்த சின்னத்திரையில் 'அரட்டை அரங்கம்' நடத்தும் மூத்த இயக்குனர் தன் புதிய படத்திற்கு 'கார்கில் வீடு' என்று பெயரிட்டாராம். ஆனாலும் கார்கிலுக்கு நிதி திரட்டியது போலவே உங்கள் படத்தை வெளியிடவும் நிதி திரட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுமா? என்று சில வம்பர்கள் கேட்டு வைக்க எதுவும் சொல்லாத இயக்குனர் படத்தின் பெயரை ரமா, சிஹா என்ற 'பெல்' களை வைத்து மாற்றி விட்டாராம்.
- 'ரன்' நடிகை என்றால் ரசமானவருக்கு அப்படியொரு டச்சிங்காம். இதுவரை அவருடைய கையில் நடிகை சிக்கவில்லையாம்.. ஆனால் இப்போது 'பூ' நடிகையின் கணவர் இயக்கும் படத்தின் மூலமாக ஒருவழியாக நடிகையைக் கைப்பற்றி விட்டாராம் நடிகர், 'ரன்' னின் சம்பளம் ஏறுமுகமாக இருக்கவே டைரக்டர் தயங்கினாலும் நடிகரின் தொந்தரவு தாங்க முடியாமல் 'ரன்' நடிகையை 'புக்' பண்ணியிருக்கிறார்.

## லேஸஸ் அண்ட் ஜெண்டில்மேன்

ரூபாவதி பிலிம்ஸ் சார்பில் டி.ஜானி தயாரிக்கும் படம் 'லேஸஸ் அண்ட் ஜெண்டில்மேன்'. இதில் கதாநாயகன் லிவிங்ஸ்டன், கதாநாயகி ராதிகா சௌத்ரி. கதை, திரைக்கதை வசனம் எழுதி இயக்குகிறார் [illegible] எஸ். சரவணன். இசை—தேவா, ஒளிப்பதிவு—அப்துல் ரகுமான்



## மனங்கவர்ந்தவர் இவர்தான்

கண்ணால் பேசவா, மாயி படங்களைத்தொடர்ந்து கண்ணா உனை தேடுகிறேன், பொட்டு அம்மன், ஆண்டான் அடிமை மற்றும் கார்த்திக்குடன் ஒரு படம், சேது பட கம்பெனியின் படம் ஒன்று என்று பல படங்களில் நடித்து வருகிறார் சுவலட்சுமி. அவரிடத்தில் உங்களுடன் இணைந்து நடித்த நடிகர்களில் நடிப்பால் உங்களை கவர்ந்த நடிகர் யார் என்றால், கார்த்திக், விஜய் இருவரையும் சொல்கிறார். மேலும் லவ்டுடே, கோகுலத்தில் சீதை, தினந்தோறும் போன்ற படங்களை நடித்த படங்களில் நல்ல படங்களாக குறிப்பிடுகிறார்.

## யார் தெரியுமா?

பாக்யராஜின் நண்பரான பழனிச்சாமியின் மகன் தயாரிக்கும் 'தீனா' படத்தில் கதாநாயகன் அஜித்குமார். கதாநாயகி யார் தெரியுமா லைலாவாம்.



# பார்த்தி Fun பதில்கள்



நடிகர்களிலேயே இயல்பாகப் பேசக் கூடியவர் நடிகர் பார்த்திபன் இங்கே சில கேள்விகளுக்கு அவர் அளித்த 'ஜாலி' பதில்கள்

கே. அன்னை மடியில் உறங்குவது, மனைவி மடியில் உறங்குவது இதில் எது சுகம்?

ப. என் மனைவியின் மடியில் மட்டுமல்ல... இன்னொருவர் மனைவியின் மடியில் உறங்குவதிலும் சுகம் அதிகம் அந்த இன்னொருவர் என் அப்பா...

கே. குண்டக்க... மண்டக்க என்றால் என்ன?

ப. கன்னா பின்னா கலெக்ஷன்னு அர்த்தம். பின்னான்னா என்னன்னு எனது அடுத்த படத்தைப் பார்த்து தெரிஞ்சுக்குங்க.

கே. காதலி அழகானதா? இல்லை சுமையானதா?

ப. காதலி அழகானா... தேதி தள்ளிப்போக சுமையாகும். காதலி சுமையானால்... விரைவிலேயே அழகான கவிதை பிறக்கும். 'குவா.. குவா'

கே. சிம்ரன், ரம்பா, ஜோதிகா உங்கள் முதுகைத் தேய்த்துவிட ரெடி என்றால், யாருக்கு முதல் அதிர்ஷ்டம்?

ப. முப்பது விரல்களுமே சடுகுடு ஆடும் அளவுக்கு என் முதுகு பரந்து விரிந்த ஒரு மைதானம், ஸோ....!

கே. 'சேது' படம் பார்த்தீர்களா? விக்ரமின் நடிப்பு எப்படி?

ப. 'சேது' பார்ப்பதற்கு முன்பே என் 'ஹவுஸ்புல்லில்' விக்ரமைப்பார்த்து விட்டதால் நோ கமெண்ட்ஸ்.

# குழந்தைகள் தொல்லை! சீனாவுக்கு ரெக்கோட்!

உலகில் எத்தனையோ தம்பதியர் குழந்தைகள் இன்றித் தவிக்கின்றனர். குழந்தை வரம் கேட்டு கோயில் குளம் என்று வழிபட்டு வருகின்றனர். பணத்தைப் பாராது வைத்தியர்களை நாடிப் பரிசோதனைகளையும் செய்து வருகின்றனர்.

அதே வேளை ஒரு குழந்தைக்கு மேல் பெற்றுக் கொண்டால் இரண்டாவது குழந்தையை ஊசியாலோ, நெல் கொடுத்தோ, தலையை தரையில் அடித்தோ கொலை செய்யும் கொடுமைகள் நடந்து வருகின்றன.

குழந்தைகளைக் கொடுமைப்படுத்திக் கொல்ல விரும்பாத பெற்றோர்கள், அனாதைகள் போல் குழந்தைகளை எங்கேயாவது ஓரிடத்தில் போட்டு விட்டு வருகின்றனர்.



புதரில் வீசியெறியப்பட்ட குழந்தை

சனத்தொகை வளர்ச்சியில் மூச்சு விட முடியாமல் திண்டாடுகிறது சீனா! உலகில் சனத்தொகை கூடிய நாடு சீனா. இங்கு 130 கோடி பேர் இருக்கின்றனர். உலகில் மிகவும் சனத்தொகை கூடிய நாடு என்ற பெருமையைச் சீனா பெற்றபோதிலும் இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுகிறது.

சனத்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் விதத்தில், குடும்பத்திற்கு ஒரு குழந்தை.

திருமணத்தை ஒத்திப் போட்டால் வெகுமதி, உடனே குழந்தை பெறாமல் இருந்தால் பரிசு எனப் பல்வேறு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகிறது சீனா.

கடந்த 20 ஆண்டு காலத்தில் 3000 கோடி குழந்தைகள் பிறப்பதைச் சீனா தடுத்து நிறுத்தி விட்டது. எனினும் வருடாந்தம் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

ஆரம்ப காலத்தில் இருந்தே இப்படியான மனிதாபிமானமற்ற செயல்கள் நடைபெறுகின்றன. சீனாவின் தலைவர் மாசேதுங், ரஷ்யாவைப் போன்று நான்கு குழந்தைகளுக்கு மேல் பெறுகிற தாய்மார்களுக்கு 'வீரத் தாய்' என்ற பட்டமும் பணமும் வழங்கி கௌரவப்படுத்தினார்.

ஆனால் இன்று சீனாவில் குழந்தைகளைப் பெறுவதற்குத் தாய்மார் பயப்படுகின்றனர். உயிர் காக்கும் டாக்டர்கள் அஞ்சுகின்றனர். இவற்றையெல்லாம் விட குழந்தைகளின் எதிர்காலம் என்னவாகும் என்று தெரியாமல் பெற்றோர்கள் பரிதவிப்பதைப் பார்க்கும் போது மனம் வருந்தத்தான் செய்யும்.



கேள்விக் குறியுடன் சீன அநாதைக் குழந்தைகள்

சனத்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் விதத்தில் குழந்தைகளைக் கர்ப்பத்தில் கலைப்பதும், பிறந்த குழந்தைகளை அழிப்பதும் சட்ட பூர்வமாக்கப்பட்டுள்ளன. அளவுக்கு அதிகமாக உள்ள குழந்தைகளைச் சீனா தற்போது கொன்று குவித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

அயோடின், அல்லது பார்மலிடிஹைட் போன்ற கொடிய மருந்துகளை ஊசி மூலம் செலுத்தி பிறந்த குழந்தைகளைக் கொன்று வருவதாகவும் கூறப்படுகிறது. இது மிகவும் பரிதாபகரமானது.

# பழசுக்கு மவுசு அதிகம் பாருங்கோ!

உங்கள் வீட்டில் பழைய பொருட்கள் எவையாவது இருக்கின்றனவா?

பழைய காலத்து ஓவியங்களோ, இசைக் கருவிகளோ அல்லது அவற்றைப் போன்றவை தான் விலை மதிப்புள்ளவை என்று நினைக்க வேண்டாம்.

கல்லில் செதுக்கிய அம்மி, ஆட்டுக்கல், விளக்கு, மரத்தில் செய்த வெற்றிலைப் பெட்டி, திருநீற்றுப் பெட்டி, மர அகப்பை, தாத்தா பாட்டி ஓய்வு எடுத்த நாற்காலி, அலுமாரி, வேலைப்பாடு அமைந்த கட்டில், மேசை- இப்படிப்பட்ட வரிசையில் எத்தனையோ பொருட்கள். இவை உங்கள் வீட்டில் மாடியில் அல்லது பின்புறங்களில் கவனிப்பாரற்றுக் கிடந்தால் அவற்றைத் தூசு தட்டி எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். யாராவது அவற்றை விலைபேசி வாங்க வருவார்கள்.

இதை எல்லாம் விளையாட்டுக்குச் சொல்வதாக நினைத்து விடாதீர்கள். இந்தியாவில் கேரளாவில் இந்த வியாபாரம் பரவலாக நடைபெறுகிறது.

அங்கு பழைய காலப் பொருட்களை விற்பனை செய்ய 30-க்கும் மேற்பட்ட கடைகள் இருக்கின்றன. இவைகளை வெளிநாட்டில் உள்ளவர்களும் உள்நாட்டில் உள்ளவர்களும் வாங்குகிறார்கள். சிலர் மிக அரிதான பொருட்களை அப்படியே மாதிரி எடுத்தும் விற்பனை செய்கிறார்கள்.

இந்தியாவின் பழங்காலப் பொருட்களை வாங்குபவர்களில் ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளே முதலிடத்தில் இருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் வீடுகளில் இப்பொருட்களை அலங்காரப் பொருட்களாகவும், வேறு தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றார்கள்.

இந்தியாவில் பெரு நகரங்களில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் உரிமையாளர்களும் இந்தப் பொருட்களை வாங்குகிறார்கள். அவற்றை வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் பார்த்து வியக்கும் அளவுக்கு அழகாகத் தமது வரவேற்பு அறைகளில் வைத்து விடுகின்றார்கள். அந்த வரிசையில் பழைய அண்டா, குண்டா கூடப் பயன்படுத்தப்படுகின்றன.

இவற்றை வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வியாபாரிகளும் இருக்கிறார்கள்.



# பிணி தீர்ப்பதா பிணக்காடு ஆவதா? யாழ் மருத்துவமனையின் அவலம்!

பெரும் பகுதி போரால் சிதைவுண்ட நிலையிலும் எஞ்சியுள்ள யாழ். நகரத்தின் இதயத்துடிப்பாக இன்னமும் இயங்கிக் கொண்டிருப்பது யாழ். போதனா மருத்து வமனை.

இரு தசாப்தங்களுக்கும் கூடிய காலமாக நீடித்துவரும் கொடிய யுத்தத்தின் - யாழ்ப்பாணத் தமிழர்களின் துன்பியல் வரலாற்றின் - சாட்சியாய் நிமிர்ந்து நிற்கும் இந்த மருத்துவமனைக்குத் தனியான வரலாறு உண்டு.

தமிழ் மகன் ஒருவன் சந்தித்த எல்லா ஆபத்துக்களையும், அக்கிரமங்களையும் இந்த மருத்துவமனையும் சந்தித்து இருக்கின்றது.

போர் தீவிரமடைந்து யாழ். நகரம் குண்டுகளுக்கு இரையாகிக் கொண்டிருந்த தருணங்களில் இடம்மாறி நகர நேர்ந்த போதும் தன் மூச்சை நிறுத்திக் கொள்ளாமல் நின்று பிடித்த பெருமை அதற்குண்டு.

ஆயிரம் படுக்கை வசதிகளைக் கொண்ட இந்த மருத்துவமனை அந்த எண்ணிக்கையைப் போன்று நான்கு, ஐந்து மடங்கு நோயாளர்களை ஒரே சமயத்தில் சமாளிக்க வேண்டி இருக்கிறது.

தேவையான மருந்து வகைகள், மருத்துவ வசதிகள் ஒருபோதும் அங்கு இருந்ததில்லை.

பத்தாயிரம் ''டிஸ்போசபிள் சிறிஞ்சுகளை'' (ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் ஊசி) மருத்துவமனை நிர்வாகம் கேட்டால் அந்தத் தொகையில் 10 சதவீதமானவை மட்டுமே கொழும்பில் இருந்து கிடைக்கும். அவ்வளவுக்குக் கட்டுப்பாடுகள்! தடைகள்!!

அடையாளம் தெரியாத சடலங்கள் அதிக எண்ணிக்கையில் எடுத்துவரப்படும் ஆஸ்பத்திரி என்றால் அதுவும் யாழ். மருத்துவமனையாகத்தான் இருக்க முடியும்.

குடாநாட்டில் எப்போது துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கினவோ அன்று முதல் இன்று வரை அடையாளம் தெரியாத சடலங்களைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது யாழ். மருத்துவமனை.

குடாநாட்டின் எந்தப் பகுதியில் இருந்தாவது சராசரி நாளாந்தம் ஒரு சடலமாவது அடையாளம் காண்பதற்காக இங்கு எடுத்துவரப்படுகிறது.

குடாநாடு அரசப் படைகள் வசமானபின்பு 1987 முதல் இது நாளாந்த நிகழ்வாகிவிட்டது என்று சொல்லலாம்.

குச்சொழுங்கைகளுக்குள்ளும் சந்துபொந்துகளுக்குள்ளும் திடீரென நடக்கும் மோதல்களில் பலியாவோர் - அவற்றின் இடையில் சிக்கும் பொது மக்கள்-

இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்படும் அரசியல் பிரமுகர்கள்-

தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்கள்-

மர்மமாகக் கொன்று புதைக்கப்படுவோர்-

பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொல்லப்படும் பெண்கள்-

சித்திரவதை முகாம்களில் விசாரணைகளின் போது இறப்போர்-

கடலில் தொழிலுக்குச் சென்று பிணமாவோர் .. என்று இப்படிச் சடலங்களின் பட்டியல் நீளும்.

இவை அனைத்தையும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி முறைப்படி சட்ட மருத்துவ ரீதியாக விசாரணைகளைப் பூர்த்தி செய்வதாயின் ஒரு யுகம் கூடப் பிடிக்கலாம். ஏதோ சம்பிரதாயச் சடங்கு போன்று மரண விசாரணை, பிரேத பரிசோதனை நடத்தப்பட்டபின் விசாரணை அறிக்கைகள் கிடப்பில் போடப்படுகின்றன.

குடாநாட்டுக்குள் கொல்லப்படும் விடுதலைப் புலிகளின் சடலங்கள் மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டபின் பெரும்பாலும் அரச செலவிலேயே அவை அடக்கம் செய்யப்படுகின்றன.

அவர்கள் யார் என்பது தெரியவந்தாலும் கூட ''இனந்தெரியாதோர் சடலங்கள்'' என்று பேர் சூட்டப்பட்டு அவை மண்ணுள் புதைக்கப்படுகின்றன.

இறந்தவர்களின் உறவினர்கள், உரித்துடையோர் அங்கு வசித்தாலும் சடலங்களை அடையாளங் காட்டிப் பொறுப்பேற்க அவர்கள் தயங்குகிறார்கள். அவர்களின் மௌனத்திற்குப் பின்னால் தெரிவது பெரும் சோகம்.

அண்மைக்காலமாக மோதல்களில் இறப்போரின் சடலங்களைப் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதில் படையினரும் புலிகளும் அதிக அக்கறை செலுத்தி வருவது தெரிகிறது.

## 20 பேர் சுட்டு சாய்க்கப்பட்ட சோகம்!

*யாழ். மருத்துவமனையின் ஆன்மாவில் ஆழமான வடுவை ஏற்படுத்திய கறை படிந்த சம்பவம் 1987 அக்டோபரில் நடந்தது.*

*அது இந்தியப் படையினர் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த காலம். இந்தியப் படையினருடன் புலிகள் மோத ஆரம்பித்த நாட்களில் 1987 அக்டோபர் 21, 22 ஆம் திகதிகளில் நாகரிக சமூகத்தைத் தலைகுனியவைக்கும் மனிதப் படுகொலைகள் யாழ். மருத்துமனைக்குள் நடந்தன. இதைப் புரிந்தவர்கள் இந்திய ஜவான்கள்.*

*சண்டையில் கொல்லப்பட்ட இந்தியத் துருப்புகளின் உடல்கள் யாழ். மருத்துமனைக்குக் கொண்டுவரப்பட்டவேளை அவைகளை எடுத்து வந்த ஜவான்கள், ஒரு மழைக்கால நள்ளிரவில் (21 ஆம் திகதி) இந்தப் படுபாதகத்தைப் புரிந்தனர்.*

*மருத்துவர்கள், தாதியர், பணியாளர்கள் என 20 க்கும் மேற்பட்டோர் சுட்டுச் சாய்க்கப்பட்டனர்.*

*அவலக் குரல் எழுப்பியவாறு ஓடிய பலரும், கரங்களை உயர்த்தி வெள்ளைக் கொடி காட்டிய பலரும் கூடச் சுட்டுப் பொசுக்கப்பட்டனர்.*

*இரு தினங்கள் மருத்துவமனை கொலைக்களமாக காட்சியளித்தது. மருத்துமனை ஒன்றுக்குள் நிகழ்ந்த பெரும் மனிதப் படுகொலை இது.*

*இந்த அநியாயத்தில் பலியானோருக்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லை.*

*இதைவிட யாழ். மருத்துமனை பல தடவைகள் ஸ்ரீலங்காப் படையினரின் ஷெல் வீச்சுக்கும், குண்டுத் தாக்குதலுக்கும் இலக்காகி வந்துள்ளது.*

*எதையுமே மௌனமாகச் சகித்துக் கொள்கிற யாழ். மக்களைப் போன்று இந்த அட்டூழியங்களையும் தனது வரலாற்றின் அத்தியாயங்களாக ஏற்றுக்கொண்டு தளராது நிமிர்ந்து நிற்கிறது யாழ். மருத்துவமனை.*

கடந்த ஏப்ரலில் குடாநாட்டு எல்லையில் கடும் யுத்தம் வெடித்ததை அடுத்து யாழ். மருத்துவமனை புதிய நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது.

சண்டைகளில் கொல்லப்படுவோரின் சடலங்கள் பெரும் எண்ணிக்கையில் இந்த மருத்துவமனைக்குக் கொண்டு வரப்படுவதும், அவை கையாளப்படும் விதமுமே நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன. (படையினரின் சடலங்கள் பெரும்பாலும் இந்த மருத்துவமனைக்கு எடுத்துவரப்படுவதில்லை.)

மோதலில் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகளுடையவை என்று தெரிவித்து அண்மையில் சுமார் 40 சடலங்களை வாகனங்களில் ஏற்றி வந்து படையினர் அவற்றை மருத்துமனைக்குள் பறித்தனர். கொல்லப்பட்டு சில தினங்களுக்குப் பின்னரே போர்முனைப் பிரதேசத்தில் இருந்து மீட்கப்பட்டதாலும்-

அகோர சண்டைகளில் சிக்கி மடிவதாலும் சடலங்கள் பெரிதும் உருக்குலைந்தும் சதைத் துண்டங்களாகவுமே வருகின்றன, பொலித்தீன் பொதிகளில் கட்டி முடிச்சுகளாகக் கொண்டுவரப்பட்ட சடலங்களில் இருந்து இரத்தமும் ஊனும் வடிந்து கொண்டிருக்க....!

அவற்றில் இருந்து சகிக்க முடியாத துர்நாற்றம் எழ, யாழ். மருத்துவமனை பிணக்காடாகியது.

போர்முனையில் இருந்து அள்ளிவரப்பட்டதால் சடலங்களுடன் சேர்ந்து கிரனேற்றுக்கள் போன்ற சிறிய வெடிப் பொருள்களும் மருத்துவமனைக்குள் வந்துசேர பணியாளர்கள் கிலி கொண்டு சிதறி ஓடினர்.

இனந்தெரியாத சடலங்கள் என்ற பெயருடன் ஒப்படைக்கப்பட்டதால் சட்ட மருத்துவ முறைப்படி அச்சடலங்கள் அடையாளங் காண்பதற்காக மருத்துவமனைப் பிரேத அறையில் வைக்கப்பட்டன.

யாழ். மருத்துமனையில் உள்ள பிரேத அறை ஆக ஒரு டசின் பிரேதங்களையே வைத்துப் பேணக்கூடிய குளிரூட்டி வசதி கொண்டது.

மருத்துவமனையில் இறப்போரின் சடலங்களையே அங்கு பேண முடியாது திண்டாடுகிறது நிர்வாகம். அப்படி இருக்க ஒரே சமயத்தில் பெரும் எண்ணிக்கையிலான சடலங்களை என்னசெய்வது?

சடலங்கள் பிரேத அறையின் தரையில் மலைபோலக் குவிக்கப்பட்டன. அந்தப் பிரதேசம் முழுவதுமே பிணவாடை! பிரேத அறைக்கு அருகே இருந்த இரத்த வங்கி, ஆய்வுகூடம், சமையல் பிரிவு உட்பட இதர பல பிரிவுகளும் இதனால் ஸ்தம்பித்தன. ஊழியர்கள் மூக்கைப் பொத்தியபடி தம் கடமைகளைக் கைவிட்டு வெளியேறினர்.

ஆய்வுகூடப் பணிகள் ஸ்தம்பித்ததால் மருத்துவமனையில் நாளாந்தப் பணிகள் குழம்பின. இதற்கிடையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் இரு தரப்பாருடனும் காணப்பட்ட இணக்கத்தின்படி 40 சடலங்களையும் புலிகள் வசம் ஒப்படைக்க ஏற்பாடாகியது.

நீர்வேலிக்குக் கிழக்கே தரவை என்று அழைக்கப்படும் ஒரு பகுதி உண்டு.

படையினர் மற்றும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களின் எல்லைப் பகுதியான அவ்விடத்தில் வைத்து சடலங்களைப் புலிகளிடம் ஒப்படைக்க முடிவாகியது.

மருத்துவமனையில் இருந்து மீண்டும் இரத்தமும் ஊனும் சொட்டச் சொட்டப் பிரேதங்கள் இராணுவ வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டன. நீர்வேலியில் சடலங்களைக் கையளிக்க ஆயத்தமான போது, இரு தரப்பினருமே சுட்டுக்கொள்ளாத பகுதியென்று இணக்கம் காணப்பட்ட அப்பிரதேசத்தில், படையினர் ஏவிய பல்குழல் பீரங்கிக் குண்டு ஒன்று வந்து வீழ்ந்து வெடித்தது. அதனால் சடலம் கையளிக்கும் நிகழ்வு குழம்பிப்போனது.

அங்கிருந்து மீண்டும் பிரேதங்கள், வழிநெடுகிலும் துர்நாற்றம் வீச மருத்துவ மனைக்குத் திரும்பக் கொண்டுவரப்பட்டன.

பிணவாடை சகிக்க முடியாதபடி பரவியது. சடலங்களை வாகனத்தில் ஏற்றி இறக்கிய பகுதிக்கு அருகே பிரசவ விடுதி. அங்கிருந்த கர்ப்பிணிகள் நாற்றம் சகிக்காமல் வாந்தி எடுத்தனர். மருத்துவமனை வட்டாரமே பிணக்கிடங்காக நாறியது.

மூன்று நான்கு தினங்களுக்குப் பின்னர் அச்சடலங்களை அரச செலவில் அடக்கம் செய்ய உத்தரவிடப்பட்டது.

மீண்டும் இராணுவ வாகனத்தில் ஏற்றப்பட்ட சடலங்கள் யாழ். நகர் அருகே பண்ணைப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு புதைக்கப்பட்டன.

அத்துடன் இந்த விவகாரம் முடிந்தது என்று சற்று ஆறுதல் அடைந்த போது, சடலங்களை ஏற்றி இறக்கிய வாகனம் மீண்டும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு மருத்துவமனைக்குள் வைத்து கழுவிச் சுத்தம் செய்யப்பட்டது. இதனால் அவ்விடத்தில் இரத்தக் கழிவுகள் தேங்கி மேலும் துர்நாற்றத்தைப் பரப்பின.

ஒரு வாரத்துக்கும் கூடிய காலம் இந்தச் சடலங்கள் மருத்துவமனைக்குள் போடப்பட்டிருந்ததும் அவை கையாளப்பட்ட விதமும் மருத்துவமனை நிர்வாகத்தினர், டாக்டர்கள், பணியாளர்கள் மற்றும் மதத்தலைவர்கள் அனைவரையும் பெரிதும் புண்படுத்தி விட்டன.

''இப்படி ஒரு நிகழ்ச்சியை மருத்துவமனைவரலாற்றில் நான் கண்டதேஇல்லை'' என்றார் ஒரு மூத்த தாதி உத்தியோகத்தர்.


''இது பெரும் மனித அவலம், மனிதாபிமான மீறல், சுகாதாரச்சீர்கேடு, இதனைப் பகிரங்கப் படுத்துங்கள்'' என்றார் மருத்துவமனையில் உள்ள தேவாலய மதகுரு.

''இத்தனை சடலங்களைப் பிரேத அறையில் பேண முடியாது; இதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்யுங்கள்'' என்று மருத்துவமனைப் பணிப்பாளர் செல்வி நவமயூர் கணசரத்தினம் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்து நீண்டகாலமாகிவிட்டது.

யாழ்.அரச அதிபர், படை அதிகாரிகள், சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், சுகாதார அமைச்சினர் எனப் பலரிடமும் முறையிட்டும் பலனேதும் இல்லை என்கிறது நிர்வாகம்.

''போரில் கொல்லப்படுவோர் விடயத்தில் பேணப்படவேண்டிய மனிதாபிமான விதிகள், சர்வதேச சட்டங்கள், அப்பட்டமாக மீறப்படுவது இலங்கையில் ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல'' என்கிறார் வெளிநாட்டுத் தொண்டு நிறுவனமொன்றின் பிரதிநிதி.

-நல்லூர் தாஸ்



# எங்கள் கீழா நெல்லிக்கு ஐரோப்பாவிலும் மேலான இடம்

முகப்பருவுக்குக் காலங்காலமாக மஞ்சள் சந்தன வகைகளுடன் சில ரசாயனங்களைச் சேர்த்து கிரீம்கள் தயாரித்துப் பயன்படுத்தி வந்தார்கள். இதற்கு மாற்று இல்லாமலேயே இன்று வரை இருப்பதால் இக் கலவை க்ரீம் பலருக்கு வேலை செய்யாமல் 'இம்யூன்' ஆகிவிட்டது.

அதாவது முகப்பருவை குறைக்க முடியாமல் செயல்திறன் குறைந்து விட்டது. இது மருந்தின் குறை அல்ல. மனித உடலில் இருக்கும் ஹார்மோன் கூட்டமைப்பின் எதிர் விளைவு. இந்தச் சமயத்தில்தான் மாற்று மூலிகையின் அவசியம் தேவைப்படுகிறது.

மஞ்சள் சந்தன வகைகளுடன் புளியாரை (Oxalis Corniculata) நீரையும் சேர்த்து அரைத்து முகப்பருக்களின் மேல் தடவலாம். மூன்றே நாளில் முகப்பரு மறைந்து போகும்.

ஐரோப்பாவில் மஞ்சள்காமாலை நோய்க்கு (கல்லீரலின் நார்த்திசுக்கள் அதிகரிப்பதால் வரும் நோய் – Cirrohosis of Liver) அவர்கள் நாட்டில் கிடைக்கும் Liverleaf எனும் (Hepatica Amercana) ஒரு குத்துச் செடியை நெடுங்காலமாகப் பயன்படுத்தி வந்தார்கள்.

பின்னர் ரசாயன மருந்துகள் வந்தன. அவையும் பயனற்றதால் வேறு வகை மூலிகைகளை தேடிக் கொண்டிருந்த போது கீழாநெல்லி அவர்களுக்குத் தேவையாக இருந்தது. அதிலும் Phyclanthus Amarus வகைக்குத்தான் நல்ல மதிப்பு. ஒரு கிலோ சுத்தப்படுத்திய கீழாநெல்லித் தழையின் இன்றைய விலை 1.40 டாலர்.

கீழாநெல்லியில் பல ரகங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒரு சிலவே மஞ்சள் காமாலைக்குப் பயன்செய்யும். மற்றவை சிரங்காற்றிகள்.

ஜீரண குறைபாடுகளுக்காகத் தயாரிக்கப்படும் மருந்துகளில் கீழாநெல்லி, புளியாரையின் மூலக் கூறுகள் சேர்க்கப்படுவது இம் மூலிகைகளுக்கு நல்ல எதிர்காலமும் விற்பனை வாய்ப்பும் நிறையப் பெருகி வருவதையே உணர்த்துகின்றன.

இந்நிலைமையில் புதிய சிந்தனை களையும் மாற்று யுக்திகளையும் பயன் படுத்தி மூலிகை மூலக்கூறுத் தொழில்களை மேம்படுத்தினால் கணிச மான லாபம் பெறலாம்.

முப்பதாண்டுகளுக்கு முன்பு, 'குழந்தை களுக்கு ஜீரணத்துக்காக' என்ற பெயரில் ஒரு தண்ணீர் பானத்தை ஒரு பிரபல நிறுவனம் சந்தைப்படுத்தியது.

விற்பனை மந்தமாக இருக்கவே, 'மூலிகை மருந்தின் மகிமை.... உங்கள் குழந்தையின் தூக்கக் கனவு' என்றெல்லாம் கவர்ச்சி விளம்பரத்தில் இறங்கியது.

இதற்குப் பலன் இருந்தது. இந்தியா எங்கும் இளம் தாய்மார்கள் இந்தத் தண்ணீர்ப் பானத்தை வாங்கித் தள்ளினார்கள். மலிவான விலை வேறு வியாபாரத்தைப் பெருக்கியது.

கடைசியில் அது 'சதகுப்பை' விதையை ஊறவைத்துச் செய்யப்பட்ட சர்க்கரை நீர் என்று மக்களுக்குப் புரிந்தது. சில்லறைக் காசுக்குச் சதகுப்பை வாங்கிக் கொதிக்க விட்டு ருசிக்கு சிறிது சர்க்கரை போட்டு குழந்தைகளுக்கு புகட்டும் ஒரு விஷயம் விளம்பரத்தினாலும் அதிலும் மூலிகையை பிரபலப்படுத்தியதாலும் இப்படி ஒரு வெற்றியைப் பெற்றது.

இப்போது மூலிகைகளின் மூலக்கூறுகளைப் பயனாக்கிப் பெறப்படும் மருந்துகளுக்கு மேல்தட்டு மக்களிடையே கூட நல்ல வரவேற்பு இருக்கிறது. தற்போது சுமார் நூறு கோடி ரூபா இந்த மூலிகை மருந்து வியாபாரத்தில் கைமாறுகிறது என்பதிலிருந்து மக்களின் மூலிகை பற்றிய விழிப்புணர்வை தெரிந்து கொள்ளலாம்.

# உலகைத் திருத்திய உத்தமர் உரை கேளீர்



◆

கவிஞர் கண்ணதாசன் பாடாத கவிதைகளும் இல்லை; சொல்லாத கருத்துக்களும் இல்லை. எல்லாமே இனிமை, புதுமை, அருமை. இங்கே உலகைத் திருத்திய உத்தமர்களின் போதனை களை எத்தனை கச்சித மாகத் தருகிறார், பாருங்கள்.

◆

எத்தனை மேதைகள் கண்டோம் – நாம்
எவர்தான் அவர் வழி நின்றோம்
சத்திய தெய்வத்தை கொன்றோம் – நாம்
தனித்தனி வழிகளில் சென்றோம்.

**புத்தர்**

தயிரில் உறைவது வெண்ணெய் –
மனம்
தனக்குள் உறைவது உண்மை
உயிர்களில் வைப்பது அன்பு – தினம்
உண்மை சதமென நம்பு

**காந்தி**

எல்லா மதமும் ஒன்றே – அதன்
எல்லா வழிகளும் நன்றே
வல்லமை என்பது பெருமை – அதில்
வன்முறை என்பது சிறுமை

**நேரு**

அறிவுக்குப் படிப்பது பாடம் – அதில்
அரசியல் கலப்பது பாவம்
கட்சிகள் புரிவது குழப்பம் – இளங்
காளையின் தேவை ஒழுக்கம்

**வள்ளுவர்**

உறக்கத்தை மறந்தவன் தலைவன் –
நல்ல
ஒழுக்கத்தில் வளர்ந்தவன் தலைவன்
கடந்ததை மறப்பவன் தலைவன் – தன்
கடமையை நினைப்பவன் தலைவன்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

**மூளைக்கு வேலை**

விடை

"உனக்கு விருப்பமான தொகையைத்தானே இவன் தந்தை கொடு என்றார். ஆனால் நீயோ அவனுக்குக் கொடுக்க விரும்பிய தொகையான பத்தாயிரம் ரூபாவைக் கொடுத்திருக்கிறாய். ஆனால் உனக்கு விருப்பமானதோ ஒன்பது லட்சத்து தொண்ணூறாயிரம் ரூபா. எனவே உனது நண்பன் கூறியபடி உனக்கு விருப்பமான தொகையான ஒன்பது லட்சத்து தொண்ணூறாயிரம் ரூபாவை இளைஞனுக்கு கொடுத்து விட வேண்டும்" எனத் தீர்ப்பளித்தார் நீதிபதி.

ஜெ. பிறேம்குமார்

# வாகன விபத்துக்கு இனி இடம் இல்லை

பாதையில், கண் மூடித் தனமான வேகத்தில் வாகனங்களை ஓட்டிச் செல்லும் சாரதிகளைப் பற்றி இனிமேல் பொலிஸார் அவ்வளவாகக் கண்டு கொள்ள மாட்டார்கள்!

அதுமட்டுமல்லாமல் "எவ்வளவு வேகமாக வும் வாகனங்களை ஓட்டலாம்" என்று போக்குவரத்து விதிகளைத் தளர்த்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எவ்வளவு வேகமாக வாகனங்களை ஓட்டிச் சென்றாலும் எதிலும் மோதி விடாமல் தானாகவே பிரேக் போட்டுப், பாதுகாப்பாக நிற்கும் கார்கள் இப்போது உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் கார் உற்பத்திக் கம்பனிகள் கடும் போட்டி போடுகின்றன.

வாகன விபத்துக்களைத் தடுப்பது குறித்து நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் பயன் அளித்துள்ளன.

டைம்ளர் – கிரிஸ்லர் எனும் இந்திய ஆராய்ச்சித் தாபனம், வாகனப் பாதுகாப்புச் சம்பந்தமாகக் கண்டுபிடித்துள்ள புதிய கருவியும், தொழில்நுட்பமும் வாகனத் தொழில் நுட்பத்திலே மிகவும் நவீன மயமானது.

இந்தக் கருவி ஒரு மனித மூளையைப் போன்று செயற்படும் கம்பியூட்டர் தொழில் நுட்பத்தை உள்ளடக்கியிருக்கிறது. இக் கருவியே எதிலும் மோதி விடாமல் தானாகவே பிரேக் போட்டுக் காரை நிறுத்துகிறது.

பியட் கார் கம்பனியும் இதே போன்ற ஒரு தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துகிறது.

ஸ்கோடா கார் கம்பனியும் கம்பியூட்டர் பிரேக் முறையை புகுத்தத் திட்டமிட்டிருக்கிறது.

புகழ் பெற்ற போர்ட் கார் கம்பனி தனது சர்வதேச வாகனப் பாதுகாப்புத் தொழில்நுட்ப ஆய்வு விடயங்களுக்கு இந்தியாவின் புதிய கண்டுபிடிப்பைப் பயன்படுத்த முடிவு செய்திருக்கிறது.

இந்திய வாகனத் தொழில் நுட்ப ஆராய்ச்சி அமைப்பின் புதிய கண்டுபிடிப்பு, வாகன விபத்துக்களைக் குறைக்கப்பெரிதும் உதவும் என்ற நம்பிக்கையை உலகின் பல வாகன உற்பத்திக் கம்பனிகளுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

—பாத்திமா ஷாகிரா

# கலையமுதம்

கே.விஜயன்

# சபாஷ் சாகித்திய விழா: சுகமான அறிவிப்பு!

இன்று எங்கும் எதிலும் அரசியல் என்ற நிலை. அரச சாகித்திய விழா அதற்கு விதிவிலக்காக முடியுமா? அமைச்சர் பிரதி அமைச்சர் ஆகியோர் கலந்து கொண்ட விழா ஆச்சே! அதிலும் தேர்தல் காலத்தில் நடத்தப்பட்ட விழா. இனிதான நினைவூட்டல்கள் மற்றும் சுவையான தின்பண்டங்களின் நறுமணம் ஆகியவற்றின் ஊடாக விழாவில் அரசியல் பிரசார வாடையும் வீசியது.

விழா 21.09.2000 அன்று பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கலாரசிகர்களும் விருதுகள் பெறவிருந்த எழுத்தாளர்களின் உறவினர்களுமாக மண்டபம் நிரம்பி வழிந்தது.

13 - தமிழ் நூல்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகின்ற போது இது பாராட்டுக்குரியது. 1998 - 99 ஆண்டுகளில் எட்டும், ஒன்பதுமாக வழங்கப்பட்ட பரிசுகள், புதிய மில்லேனியம் ஆண்டில் பதின்மூன்று என அதிகரிக்கப்பட்டது மகிழ்ச்சிக் குரியது.

இதுவொரு 'எலெக்ஷன் சம்திங்' என்றார், அரசியல் கசமுச எழுதும் பத்திரிகையாளர் ஒருவர்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க விழாவில் கலந்து பரிசுகளை வழங்குவார் என கலாசார அமைச்சு செய்திகளை வெளியிட்டு தடபுடல் செய்திருந்தது. ஆனால் வழக்கப் படியே அவர் நடந்து கொண்டார். விழாவுக்கு சமுகம் அளிக்கவில்லை. கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி பரிசுகளைவழங்கினார்.

நிகழ்வுகள் கண்கவர் நடன, இசை நிகழ்ச்சிகளுடன் ஆரம்பித்தன.

மும்மொழிகளிலும் கணீரென ஒலித்த அறிவிப்பாளர்களின் குரல்கள் வழக்கத்திற்கு மாறாக விளக்கத்துடன் அமைந்திருந்தன. ஒவ்வொரு எழுத்தாளரும் பரிசு பெறுவதற்காக மேடைக்கு வந்தபோது அவர்கள் குறித்து வழங்கப்பட்ட குறிப்புகள் விஷயச் செறிவுடன் தெளிவாக விளங்கின.

ஆனாலுமென்ன, பரிசு பெற்ற வர்கள் குறித்து படங்களுடன் வழங்கப்பட்ட குறிப்பு அட்டையில் கோட்டை விட்டு விட்டார்களே!

'நோயில் இருத்தல்,' 'சிவாவின் சிறுகதைகள்' ஆகிய இரண்டிலும் எழுத்தாளர்களின் பெயர்கள் மாறி அச்சிடப்பட்டுள்ளன. சிவாவின் இடத்தைப் பொன்னம்பலமும், பொன்னம்பலத்தின் இடத்தைச் சிவாவும் பிடித்துக் கொண்டார்கள்.



அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியுடன் (முதலாவதாக) பிரதி அமைச்சர் பேராசிரியர் சுரவீர

அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி 'அமைச்சர் என்ற வகையில் ஒரு வேளை இது எனது கடைசிப் பேச்சாக விருக்குமோ தெரியவில்லை'' என்று ஆரம்பித்தார்.

இப்படி அவர் சிரித்துக் கொண்டே பேசியபோதும், உள்ளார்ந்த சோகம் அதனுள் இழையோடியதை அவதானிக்க முடிந்தது.

'காலவோட்டத்தில் சகலதும் மாற்றமடைகின்றன. இந்த உண்மையை உணர்வுகளில் பதிக்கும் ஆற்றல் இலக்கியத்திற்கு மட்டுமே இருக்கிறது.

இலக்கியம் பாடசலைகளில் முதன்மை பெறவேண்டும் நாம் வரலாற்றைக் குறிப்புகளாகப் பயில் கிறோம். இது சரியானது அல்ல, பிறேசில் போன்ற நாடுகளில் தேசத்தின் வரலாறு இலக்கிய வடிவில் போதிக்கப்படுகின்றது.

பின்தங்கிய நாடு என நாம் கூறுகின்ற அந்நாட்டில் இலக்கியம் கட்டாய பாடமாகத் திகழ்கிறது.

நமது நாட்டில் விஷயங்கள் விஸ்வரூபம் எடுத்துள்ளதற்கு மொழியே அடிப்படைக் காரணியாக அமைந்துள்ளது என்று அமைச்சர் கவலையோடு குறிப்பிட்டார்.

இவை அமைச்சரின் இலக்கியத்தின் மேன்மை குறித்த கருத்துகள். உரை சிறப்பாக அமைந்தது.

பிரதியமைச்சர் பேராசிரியர் சுரவீரவும் பேசினார்.

பொ. ஐ. முன்னணி அரசாங்கம் வந்ததன் பின்னரே மும்மொழிகளிலும் வரும் நூல்களுக்கு ஒரே மேடையில் வைத்து பரிசு வழங்கப்படுவதாகவும் - பணத்தொகை வழங்குவதில் முன்னர் இருந்த ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட்டு இப்போது சகல மொழி எழுத்தாளர்களுக்கும் வேறுபாடின்றிச் சமனான தொகை வழங்கப்படுவதாகவும் பிரதியமைச்சர் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டினார்.

சபையோரைப் பார்த்து' உங்கள் வாக்குகள் எங்களுக்கே' என்பதைப் போல் அந்த பேச்சு அழுத்தமாக இருந்தது.

மண்டபத்தில் நிறைந்து இருந்தவர்கள் அனைவருக்கும் 'தாராளமாகச் சாப்பிடுங்கள் என்பது போல் நீண்ட நீண்ட மேசைகளில் பல இடங்களிலும் சுவையான கேக் வகைகள் குவித்து வைக்கப் பட்டிருந்தன. தேனீர், நெஸ்கபே போன்ற அய்ட்டங்களும் நிறையவே இருந்தன. தேர்தல் நினைவை இவை மறைய விடவில்லை. தேர்தல்கால விழாக்களின் சிறப்பே சிறப்பு என்று பலரும் பேசிக் கொண்டது காதில் விழுந்தது. அது பாராட்டா, பரிகாசமா?

# பலே, பலே, புரோபஸர்!





கவிஞர் இக்பாலின் 'புதுமை' கவிதை நூலின் வெளியீட்டு விழா பேருவளை தர்கா நகரில் நடைபெற்றது.

சிக்கனமான கூட்டம் என்றாலும் கொழும்பிலிருந்தும் கொஞ்சம் பேர் கலந்து கொண்டார்கள். இவர்களில் ஒருவர் கவிதை எழுதும் பேராசிரியர், இன்னொருவர் விமர்சகர்.

விழாவில் பலர் பேசினார்கள். சொற்பொழிவுகளின் போது கொழும்பிலிருந்து சென்றவர்கள் வெளுத்து வாங்கினார்கள். இதனால் கூட்டம் கலகலத்தது.

விமர்சகர் மென்மையானவர். தன்னை ஒரு பத்தி எழுத்தாளர் என அடக்கமாகச் சொல்லி இலக்கியப் படைப்பாளிகள் எவரையும் புண்படுத்தாமல் பேசுவார்.

புத்தக விமர்சனங்களின் போது புகழோ புகழென்று பாராட்டித் தள்ளுவார்.

ஆனால் அன்று வழக்கத்திற்கு மாறாக 'இக்பாலின்' கவிதைகளில் சந்தம், ஓசை நயம், உணர்வு - இவை பாராட்டும் படியாக இல்லை என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்!

அனைவருக்கும் அதிர்ச்சிதான்! ஆனால் புரோபஸர் அதனை வெட்டி முறித்தார்.

'கவிதைகள் சந்தம், ஓசை நயம், உணர்வு என்பனவற்றுடன் தான் பிறக்கின்றன. இக்பாலின் கவிதைகளில் அவை எப்படி இல்லாமல் போகும்? இது புரோபஸரின் கேள்வி.

அதைத் தொடர்ந்து இலக்கியச் சமர் சூடுபிடித்தது.

பத்திரிகையாளருக்குக் கொண்டாட்டம். கொழும்பிலிருந்து சொந்தச் செலவில் பஸ் பயணம் செய்து கூட்டத்தில் கலந்து கொண்டவர் அல்லவா?

அடடா, பேராசிரியர் வாதம் அற்புதமாக விருக்கின்றதே எனப் பிரமித்து விட்டார் பத்திரிகையாளர். அந்த உற்சாகத்தில் ஒரு கட்டுரை எழுதி சுடச்சுடப் பத்திரிகையில் பிரசுரித்து விட்டார்.

'புதுமை வெளியீட்டில் கவிதைச் சமர்' இது கட்டுரையின் தலைப்பு.

பேராசிரியர் கட்டுரையைப் படிப்பார். 'எந்த நேரத்திலும் பாராட்டுக் 'கோல்' வரும். இப்படி நினைத்துப் படபடப்புடன் காத்திருந்தார். இரண்டு நாட்களாக.

'கோல்' வரவில்லை, ஆசியரிட மிருந்து அழைப்பு மட்டும் வந்தது.

'என்னவோ ஏதோ' வென பதறியடித்துக் கொண்டு அறைக்குள் போனால், ஆசிரியர் விஷமப் புன்னகையுடன் கடிதம் ஒன்றை நீட்டுகிறார்.

ஆமாம், பேராசிரியர்தான் எழுதியிருக்கிறார்.

பத்திரிகையாளருக்கு தலைகால் புரியவில்லை. சில கணங்கள் கனவு உலகிற்குப் போய்விட்டார்.

புரோபஸரின் நவீன சிந்தனைகள், தொழிலாளர் வர்க்கப் போராட்டக் கதைகள் எல்லாம் பத்திரிகையாளர் மனத்தில் அலைகள் போல் உருண்டன.

'சா,' எப்படிப்பட்ட மனுசன் இவர் ஒரு சிறு கட்டுரைக்காக தன்னைப் புகழ்ந்து பாராட்டி ஆசிரியருக்கே கடிதம் போட்டிருக்கிறாரே. பூரிப்புடன் மனவுணர்வுகள் கசிந்துருக கடித்தின் மீது கண்களை ஓடவிடுகிறார்.

இரண்டு பந்திகள் பரபரப்புடன் முடிவடைந்து மூன்றாவது பந்தி பதற்றத்துடன் தொடர்கிறது.

அரசியல் பற்றியும், கவிதை அழகியல் பற்றியும் விமர்சகருடன் எனக்கு கருத்து வேறுபாடுகள் இருப்பது என்னவோ உண்மைதான். அதற்காக அதனைப் பெரியதொரு சண்டையாக வர்ணிப்பதுபோல் 'இலக்கியச் சமர்' என்று தலைப்புப் போடலாமா? சின்ன விஷயங்களையெல்லாம் பரபரப்பாக எழுதுவோரால் பத்திரிகை உலகம் சீரழிந்து விட்டது. இப்படிப்பட்ட ஆசாமிகளை உங்கள் பத்திரிகையில் செய்தியாளர்களாக வைத்திருக்கலாமா?... இப்படிக் கேள்வி எறிகணைகளை விட்டிருந்தார் புரோபஸர்.

பத்திரிகையாளர் கண்முன்னே மல்ரிபரல் வெடித்தது. மனுஷன் நிலைகுலைந்து போனார்.

# பெண்

பிரதீபா - பசீனா

## உங்கள் படுக்கை அறை எப்படி?



* படுக்கையறையை உறங்குவதற்கு ஏற்ற இடமாக வைத்துக் கொள்ளுங்கள்.
* தொலைக்காட்சிப் பெட்டி, கணனி என்பவை படுக்கையறையில் இருந்தால் அது உங்கள் நித்திரையைக் கெடுத்துவிடும்.
* தடிப்பான, மெல்லிய நிறமுடைய திரைச்சேலைகள் படுக்கையறையைக் குளுமையாகவும், சற்று இருட்டாகவும் வைக்க உதவும்.
* படுக்கையறையில் உள்ள தொலைபேசியை அகற்றி விட்டுப், பதிலளிக்கும் கருவி (Answering Machine) ஒன்றைப் பொருத்துங்கள்.
* எப்போதும் நல்ல நிலையில் உள்ள கட்டில் மெத்தையைப் பயன்படுத்துங்கள்.
* படுக்கையறையை அழகாக வைத்து அமைதியாக உறங்குங்கள்.

## ஹலோ டாக்டர்



''எனக்கு உடம்புக்குக் கஷ்டமாக இருக்கிறது''. ''ஏன் இன்றைக்கு உனக்கு அந்த நாளா''? இப்படியான உரையாடல்கள் நண்பிகளுக்கிடையே அடிக்கடி நடைபெறும்.

மாதவிடாய் ஏற்படுவது பெண்களின் உடலில் ஏற்படும் ஒரு சாதாரண செயற்பாடு. ஆனால் சிலருக்கு மிகக் கஷ்டமாக இருக்கும். இச்சக்கர செயற்பாடு ஐம்பது, ஐம்பத்தைந்து வயதுக்கிடையில் நின்று விடும். இது மாதவிடாய் நிறுத்தம் எனப்படும். இந்நிகழ் விற்கு முன், அதிகமான குருதி வெளியேற்றம், இரவில் வியர்ப்பது, பெண் உறுப்பில் உலர்த்தன்மை போன்ற உடலியல் வருத்தங்கள் ஏற்படும். மனச்சோர்வு, சுறுசுறுப்பின்மை, பாலியல் உறவில் நாட்டமின்மை ஆகியன ஏற்பட்டு பெண்கள் உள ரீதியாகப் பாதிக்கப்படுவர். ஆனாலும் இவை ஏற்படுவதைப் போன்றே இயற்கையாக நின்றுவிடுகின்றன.

எலும்புகள் பலவீனமடைதல், மாரடைப்பு, இரத்த அழுத்தம் என்பன ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன. மாதவிடாய் நிற்கும் காலத்தில், பெண்களின் உடம்பில் பெண்களுக்குரிய ஓமோன் சுரப்பது குறையும். எனவே உடலிலும், மனதிலும் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன.

இவற்றைத் தவிர்த்துக் கொள்ள 'ஹோர் மோன் ரிப்லேஸ்மண்ட் தெரபி' *(Hormone Replacement Therapy) HPT* எனும் சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உங்கள் குடும்ப வைத்தியரிடம் அல்லது பெண்கள் நோய் நிபுணர் ஒருவரிடம் ஆலோசனை பெற்ற பின் *HPT* செய்து கொள்ள வேண்டும்.

இனி என்ன அசௌகரியங்கள் இன்றி நிம்மதியாக இருக்கலாம்.

## சாபக்கேடா...?



இன்றைய பெண்களின் வாழ்க்கைமுறை முன்பிருந்ததைப் போல இல்லை. நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பெண்களைப் புத்திஜீவிகளாக மாற்றிவிட்டன. அதனால் பெண்கள் இன்று பல்வேறு துறைகளிலும் கால் பதித்துச் சாதனை படைத்து வருகின்றனர்.

எனினும் பெண்கள் முற்று முழுதான சுதந்திரத்தை அடைந்து விட்டார்கள் எனக் கூறமுடியாது.

வளர்ச்சியடைந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள பெண்களின் நிலையை, மூன்றாம் உலக நாடுகளில் உள்ள பெண்களின் நிலையோடு நாம் ஒப்பிட முடியாது.

மூன்றாம் உலக நாடுகளில் உள்ள பெண்கள் கலாசாரம், மதவாதம், தேசியவாதம் போன்றவற்றால் இறுகப் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அத்துடன் கணவன் குழந்தைகளோடு வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கும் உட்பட்டிருக்கிறார்கள். இவற்றிலிருந்து விலகி வாழ்வது பெண்களால் முடியாத ஒன்று.

பெண், வீட்டிற்கு அடங்கியவளாய், ஆண்களுக்குச் சுகம் தருபவளாய், பிள்ளை பெறும் இயந்திரமாய் மட்டுமே கருதப்படுகின்றாள்.

மூன்றாம் உலக நாடுகளில் காணப்படும் கொடிய வறுமை, கடுமையான குடும்பச்சுமை போன்றவை பெண்களைப் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன.

மேலும் இங்கு பெண்கள் விபசாரத்திலும் ஈடுபடுத்தப்படுகின்றனர். உல்லாசத்துறையாலும் பெண்களுக்குப் பெரும் கேடுகள் விளைவிக்கப்படுகின்றன. பெண்கள் எயிட்ஸ் போன்ற கொடிய ஆட்கொல்லி நோய்களுக்கும் உள்ளாகின்றார்கள்.

இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் பெண்கள் இயக்கங்கள், பெண்ணுரிமைக் கழகங்கள் முதலானவை தோன்றிப் பெண்களுக்கான பல செயல் திட்டங்களை உருவாக்கியுள்ளன. அவற்றின் மூலம் பெண்களுக்கு அதிகளவு வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்துள்ளன.

பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளிலும், சுதந்திர வர்த்தக வலயங்களிலும், சுற்றுலாத்துறையிலும் தொழில் புரிவதைக் காணமுடிகின்றது.

எனினும் சுதந்திர வர்த்தக வலயங்களிலும், சுற்றுலாத்துறையிலும் தொழிலில் ஈடுபட்டுள்ள பல பெண்கள் உரிய சுகாதார வசதி, உழைப்புக்கேற்ற ஊதியம், தங்குமிடவசதி போன்ற அடிப்படை நலன்கள் இல்லாது கஷ்டப்படுகின்றனர்.

மத்திய கிழக்கில் பணிபுரியும் பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப் படுகின்றனர்.

எமது நாட்டில் பெண்கள் பிரச்சினைகளில் இன்று வேண்டியளவு கவனம் செலுத்தப்படவில்லை. சமூக அபிவிருத்தித் திட்டங்கள் கூடப் பெண்களின் நலன் பேண உருப்படியாக எதையும் செய்ததாகக் குறிப்பிட முடியாது இது எமது நாட்டிற்கு ஏற்பட்ட ஒரு சாபக் கேடா...? இந்நிலையில் மாற்றம் ஏற்படாதா...?

இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இறுக்கமாகவும் சுருக்கமாகவும் எழுதி அனுப்புங்கள்.

**பெண், சுடர் ஒளி,** 36/2பிரட்றிக்கா வீதி, கொழும்பு 6

## நம்பலாமா?



* இளம் பெண்கள் நன்றாக அவித்த முட்டையின் மஞ்சட்கருவை அகற்றி அவ்விடத்தில் உப்பை நிரப்பி இரவில் சாப்பிட்டால் தமது வருங்காலக் கணவரைக் கனவில் காணலாமாம்!
* வெள்ளைப் பூண்டிற்கு அசுத்த ஆவிகளை விரட்டும் சக்தி உண்டாம். இதனால் சிலர் அதனைக் கழுத்தில் அணிகின்றார்கள்.
* சமையலறையில் கத்தி கீழே விழுந்தால் ஆணிடமிருந்து தொலைபேசி அழைப்பு வருமாம். முள்ளுக் கரண்டி விழுந்தால் பெண்ணிடமிருந்து அழைப்பு வருமாம்.

இவை ஐரோப்பிய நாடுகளில் நிலவும் சில நம்பிக்கைகள்.

## மலர் அலங்காரம்

* வீடுகளை அலங்கரிக்கும் பொருட்களில் பூக்களுக்கு எப்போதும் தனி இடம்தான். பூ அலங்காரம் செய்யும் போது இவற்றை மனதிற் கொள்க.
* துணியால் செய்யப்பட்ட பூக்களை மாதம் ஒரு முறை சவர்க்கார நீரில் கழுவி நிழலில் உலர்த்துங்கள்.
* கடும் நிறப்பூக்களையும் பெரிய பூக்களையும் நடுவில் வைத்துச் சுற்றி வரச் சிறிய பல நிறப்பூக்களை வையுங்கள்.
* மண் நிரப்பப்பட்ட சாடியில் பூக்களைச் சரிவாக வைத்தால் அவை விழாமல் இருக்கும்.
* செயற்கையான பூக்களுடன் இயற்கையான இலைகளைச் செருகி வைத்தால் அழகாக இருக்கும்.
* கொத்தாக வாங்கும் பூக்களைக் காம்பில் சற்று வளைத்து ஒழுங்கு படுத்தவும்.



# தாதி திலகம்



புதியதோர் உலகம் அது! எத்தனையோ உயிர்கள் விடைபெறுவதும், எத்தனையோ உயிர்கள் உலகைப் பார்ப்பதும் அங்குதான்! மரண ஓலங்கள் ஒரு புறம், மழலைச் செல்வங்களின் பிறப்பு ஓலங்கள் மறுபுறம்!

நோயின் வேதனையால் கதறும் உயிர்கள் எத்தனை!

வேதனை குறைந்து சிரித்த முகத்துடன் வெளியேறும் உயிர்கள் எத்தனை!

அது அந்தப் பகுதிக்கே பெரிய வைத்தியசாலை, வண்ணத்துப்பூச்சி போல் பறந்து, பறந்து கடமை புரியும் தாதிமார்கள். கருணை கொண்ட முகத்துடன் நோயாளிகளுடன் அளவளாவும் டாக்டர்கள்.

சிகிச்சை ஒரு புறமாக, எத்தனையோ உயிர்களைப் பிரியவைத்தும், பிறக்க வைத்தும் வேடிக்கை பார்க்கும் தனி உலகம் அது! ஆம், உண்மையில் அது ஒரு புதிய உலகம்தான்!

இரண்டாம் இலக்கம் இடப்பட்டிருந்த அந்த வார்ட்டில், காச நோயால் பீடிக்கப்பட்டு இறப்பின் மணியோசையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் நான்- என்னைப் போல் இன்னும் எத்தனையோ பேர்.

அந்த வார்ட்டில் இரண்டொரு கட்டில்களைத் தவிர, மற்றவற்றில் நோயினால் அவஸ்தைப்படும் உயிர்கள் உறங்கியும், உறங்காமலும் கிடக்கின்றன.

அந்த வார்ட்டிற்கு இரவு வேலையில் ஈடுபட்டுள்ள நர்ஸ்- இளமை செழித்துவிட்ட அவளது பருவ உடல், கனிவான பேச்சு, சாந்தம் தவழும் முகம், எங்கோ இல்லத்தரசியாக விளங்கவேண்டியவள், எங்களுக்காகப் பணி புரிய வந்து விட்டாள்.

அவள் நெற்றியில் இட்டிருக்கும் திலகம், நிரந்தரத் திலகமாக இருக்க இறைவன் ஆசீர்வதிக்க வேண்டும். அவளது பெயரும் அந்த நான்கெழுத்தில் அடங்கியிருப்பது பொருத்தமே.

அவள் அந்த வார்ட்டின் நோயாளிகளுக்கு ஒரு தாய். குழந்தைகளைப் பாசத்துடன் கவனிக்கும் தாயைப்போல், நோயாளிகளிடம் அவள் பழகும் விதமே தனி.

அந்த நிசப்தமான இரவில் கூட எங்கோ நரியின் ஊளைகள்.. நோயினால் அவஸ்தைப்படும் வேதனைக்குரல்கள்...!

எனக்கு அடுத்த கட்டிலில் உள்ளவர் வேதனையுடன் முனகிக் கொண்டு இருக்கிறார். பாவம், அவரது வேதனை அவருக்கு.

நர்ஸின் கவனம் அவர் பக்கம் திரும்புகிறது. அவளது கரங்கள் அவரைத் தொட்டுப் பார்க்கின்றன. உடனே அவளது வேலை சுறுசுறுப்படைகின்றது. ஊசியின் மூலம் மருந்தேற்றுவதும், அவருக்குத் தேவையானவைகளைச் செய்வதும், அடிக்கொருதடவை அவரைப் பார்ப்பதுமாயிருந்த அவளது கடமையின் கனிவைவிடத் தாய்மையின் கனிவு அதிகம் காணப்படுகின்றது.

''என்ன நீங்க இன்னும் தூங்கவில்லையா? '' என்ற கேள்வி அவளது வாயிலிருந்து வந்ததும், நான் சிறிய புன்முறுவலுடன் திரும்பிப் படுத்துக் கொள்கிறேன்.

காலைக்குளிர் மேனியைச் சிலிர்க்க வைக்கிறது. அந்த விடியற்காலையிலேயே உறவினர்களைப் பார்க்க வருபவர்களின் இரைச்சல், வைத்தியசாலை எங்கும் ஒலிக்கிறது.

வைத்தியசாலையின் மணி ஓசையின் பின்பு, நிசப்தத்தின் அறிகுறியாக எங்கோ நோயாளர்களின் வேதனைக்குரல்கள், இவை யாவும் கடந்த சில மாதங்களாகக் கேட்டுப் புளித்து விட்டவைதானே!

அடுத்த கட்டிலைத் திரும்பிப் பார்க்கிறேன், இரவு முழுவதும் வேதனையில் முனகிக் கொண்டு இருந்த அந்த மனிதர் என்னைப் பார்த்துப் புன்னகைக்கிறார்.

''நேற்று இரவு எனக்குத் தாங்க முடியாத வேதனை, இருந்தாலும் அந்த நர்ஸ் நல்லா பார்த்தா இல்லையா? '' என்று என்னைக் கேட்கிறார். நானும் தலையை அசைக்கிறேன்.

அவர் தாழ்ந்த குரலில் கூறுகின்றார், ''அந்த நர்ஸுக்கு என் மீது ஏதோ ஒருவித பிரியம்தான். அடிக்கொரு தடவை வந்து பார்த்தாள். எத்தனை பிரியம் என்மீது? அவள் என்னிடம் குழைந்து, குழைந்து பேசும்போது நீங்க கண்டிருக்கீங்களா? இந்தக் காலத்தில வயதுவந்த பெண்கள் வாலிபர்களைவிட வயது போனவர்களைத்தான் விரும்புகிறார்கள்!''

என்னைக் கேலி செய்கிறாரா? அல்லது இந்த வயதிலும் தன் இளமையின் துடிப்பைக் காட்டுகிறாரா? எனக்கு ஏதோ ஒருவித அருவருப்பு அவரது பேச்சில். முன்தலை நரை தட்டிவிட்டிருக்கும் அவருக்கு, இப்படி ஒரு எண்ணமா?

''காடு வா வா என்குதாம், வீடு போ போ என்குதாம்'' என்ற முதுமொழி இவருக்குப் பொருந்தும். அவர் அப்பகுதியிலுள்ள பிரபல கடையின் சொந்தக்காரர். நாள் தோறும் அவரைப் பார்ப்பதற்கு வரும் அவரது உறவினர்களும் நண்பர்களும் ஏராளம்.

என் வயதில் அவருக்கு ஒரு மகன் கூட இருப்பதாகக் கூறினார். தன் இளமைத் துடிப்பைக் காட்டிக் கொள்ள ஆள் கிடைத்தது என்று கூறுகிறாரா?

என் சிந்தனை தடைப்படுகின்றது. பகல் வேலைக்காக வந்திருக்கும் நர்ஸ் ஏதோ குளிகை ஒன்றைத் தருகிறாள். வாங்கிச் சாப்பிட்டு விட்டுப் புத்தகம் ஒன்றை எடுத்து வாசிக்கத் தொடங்குகிறேன்.

இரவு வேலைக்கு மீண்டும் வருகிறாள் திலகம் நர்ஸ். வந்ததும் முதலில் அவரிடம் வந்து, ''எப்படி இருக்கிறது'' என்று விசாரித்துவிட்டுக் கடமையில் ஈடுபடுகிறாள்.

திரும்பி அவரைப் பார்க்கின்றேன். ''பாத்தீங்களா? பாத்தீங்களா? என்னை மட்டும் எப்படி விசாரிக்கிறா என்று?'' அத்துடன் அவருக்குத் துணையாக இருமல் ஒலி.

நான் திரும்பிப் படுத்துக் கொள்கிறேன்.

முன் இரவைத் தாண்டிவிட்ட அந்த இரவில், எங்கள் வார்ட் மட்டும் உறங்காமல் விழித்திருக்கின்றது. அடுத்த கட்டில் நோயாளியின் வேதனைக் கதறல்கள் அந்த வைத்தியசாலையையே நித்திரை விட்டு எழச் செய்திருக்க வேண்டும்!

டாக்டர் வந்து அவருக்குச் சிகிச்சை அளிக்கிறார். அவரது வேதனைக் கதறல்கள், அத்துடன் இருமல் ஒலிகள். எனக்கு அவரைப் பார்க்கும்போது, அவரின் மீது ஏதோ ஒருவிதப் பரிவு. அவர் என்னைப் பார்க்கிறார், பெரிதாகக் கேட்ட அவரது வேதனைக் குரல் குறைந்து, அவருக்கு மட்டும் கேட்கின்றதுபோலும், தலை சரிகிறது....


நர்ஸ் திலகம் வேதனையுடன் அவர் அருகில் நிற்கிறாள். உலகை விட்டுப் பிரிந்து விட்ட அவரது உடம்பிற்காக அவளது கண்களில் இருந்து நீர்த்துளிகள் வடிகின்றன.

அவள் என்னைப் பார்க்கிறாள். நீங்களும் ஒரு நாள் இந்த வேதனைக் குரல்களோடுதான் இவ்வுலகை விட்டுச் செல்ல வேண்டுமா? அதை நான் பார்க்க வேண்டுமா? என்று அவளது விழிகளினூடே என்மீது கேள்விக் கணை தொடுக்கிறாள்.

எனது நெஞ்சமும் விம்முகிறது. திரும்பி அவரது கட்டிலைப் பார்க்கிறேன், அது வெறிச்சோடிக் கிடக்கிறது.

''பாவம் அவர் ஓர் உண்மையைத் தெரிந்து கொள்ளாமலேயே இந்த உலகைவிட்டுச் சென்றுவிட்டார்.

நர்ஸ் திலகம்தான் எனது மனைவி என்று தெரிந்திருந்தால் அப்படிப் பட்ட வார்த்தைகளைக் கடைசி காலத்தில் கூறியிருக்கவே மாட்டார்...!



—எஸ். தர்மசீலன்

# ராசி பலன்

(1.10.2000 முதல் 7.10.2000வரை)

பொ.சந்திரன் ஜோதிடர்.



## மேடம்:

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1**


இராசி நாதன் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருப்பதும் சுக்கிரனின் நட்சத்திரமான பூரத்தில் இருப்பதும் யோகமான காலமே. பொருளா தாரம் பலம் பெறும். குடும்ப சுகம் உண்டு. தடைப்பட்ட திருமணம் நிறைவேறும். கடன் காரனும் நோய்காரனுமான புதன் ராசியை நோக்குவது நல்லதல்ல. இருப்பினும் சுக்கிர பார்வை சகல சம்பத்தையும் கொடுக்கும். புதிய காதல் உருவாகும். பழைய காதல் கனியும். மட்டுப்படுத்தப்பட்ட சகோதர உதவி கிடைக்கும். குழந்தைகள் சிறு நோய்வாய்ப் படலாம். தொழில் துறை திருப்திகரமாக இருக்கும். நண்பர்களின் உதவி பெறுமதி யானதாக இருக்கும். 4ஆம் வீட்டை சனி நோக்குவதால் வீடு, வாகனம், உயர் கல்விக்கு சிறுதடை ஏற்படும்.



## இடபம்:

**கார்த்திகை 2, 3, 4. ரோகினி, மிருகசீரிடம்1, 2.**

இராசிநாதனும் 6ஆம் அதிபதியும் ஒருவ ராய் இருப்பதால் 6ஆம் பாவ பலனை விடுத்து இராசியின் பலனையே செய்வதாக இருந்தும் தலையில் சனி இருப்பதால் காரியத் தடை இருக்கும். சனி வழிபாடு, கிருஷ்ணர் வழிபாடு என் எண்ணெய் எரிப்பதால் தோசம் விலகி நற்பலனை எதிர்பார்ககலாம். பணத்தட்டுப் பாடு இருக்கும். 7ஆம், 12ஆம் அதிபன் சுகஸ்தானத்தில் இருப்பதால் களஸ்திர சுகம் உண்டு. வாலிப வயதினர்க்கு வாய்ப்பான காலம். வீரியஸ்தானாதிபன் இராசியை நோக்குவதால் தேக சுகம் நன்றாக இருக்கும். சகோதரர்களின் சிந்தனை உங்கள் மேல் இருககும். தொழிலைப் பற்றியும் வருவாயைப் பற்றியும் கவலை இருக்கும்.



## மிதுனம்:

**மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை, புணர்பூசம்1, 2, 3.**

இராசிநாதனும் சுகஸ்தானாதிபதியும் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருப்பது நல்லது. அதிர்ஷ்டம் உண்டு. எண்ணிய கருமம் இலகுவில் முடியும். இரண்டாம் அதிபன் இராசியை நோக்குவதால் பணத்தைப் பற்றியும் குடும்பத்தைப் பற்றியும் கவலை இருக்கும். இராசியில் ராகு இருப்பதால் பிரயத்தனப் பட்டே ஆக வேண்டும். 10ஆம் அதிபன் கீர்த்தி ஸ்தானத்தில் இருப்பதால் தொழிலில் யோகம் உண்டு. பதவி உயர்வு உண்டு. மதிப்பு உண்டு. தகுந்த நேரத்தில் நண்பர்களின் உதவியுண்டு. வீடு வாகன சுகம் உண்டு. மாணவர்களின் கல்வி முன்னேற்றம் உண்டு. உற்றாரின் உதவி உறுதியாக இருக்கும். கூட்டு வியாபாரம் அல்லது பங்கு வியாபாரம் நஷ்டமடையக்கூடும்.



## கடகம்:

**புணர்பூசம் 4. பூசம், ஆயிலியம்.**

இராசி நாதன் 4ஆம் வீடு முதல் 7ஆம் வீடு வரை சஞ்சரிப்பதால் பொதுவாக சுகமான காலம் இருந்தாலும் சனியின் பார்வை இராசியில் படுவதால் மனத்தாங்கல் சஞ்சலம், தடுமாற்றம் ஏற்பட இடமுண்டு. 5ஆம், 10ஆம் அதிபன் இரண்டில் இருப்பதால் குழந்தை களாலும் செய் கருமத்தாலும் செலவு ஏற்படும். கைப்பொருள் கரைய வாய்ப்புண்டு. 3ஆம் அதிபன் 4இல் வலுவுள்ள சுக்கிரனோடு கூடி இருப்பதால் உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும், சகோதர உதவி கிடைக்கும், நான்காம் பாவம் பலம் பெறுவதால் தாய் நலம், வீடு வாகன சுகம் இருக்கும் 9ஆம் அதிபன் 11இல் இருப்பதால் பிதா உடல் நலக் குன்றவு அடையக்கூடும்.



## சிங்கம்:

**மகம். பூரம். உத்தரம் 1.**

இராசி நாதன் சந்திரனின் நட்சத்திர சாரமான அட்டமத்தில் இருப்பதால் செலவு கட்டுக் கடங்காது. 4ஆம் 9ஆம் அதிபன் இராசியில் இருப்பதால் மாதா, பிதா இருவரின் கருணையும் ஆசிர்வாதமும் கிடைக்கும். இராசிநாதனுக்கு குருவின் பார்வை கிடைப்பதால் குரு அருளும் தெய்வீக கடாட்சமும் கிடைக்கும். மூன்றாம் வீடு வலுப் பெறுவதால் விளையாட்டில் பேர் புகழ் சகோதரர்களிடம் இருந்து நற் செய்தி எதிர் பார்க்கலாம். ஐந்தாம் இடத்தில் கேது இருப்பதால் தொலைந்த பொருள் கிடைக்கும் பின்னர் நடப்பதை முன்னர் அறியும் ஆற்றல் கிடைக்கும். குழந்தைகள் நோய்வாய்ப் படையலாம். 10இல் குரு இருப்பதால் எல்லாம் நன்மையில் முடியும்.



## கன்னி:

**உத்தரம் 2,3,4. அத்தம். சித்திரை 1,2**

இராசிநாதன் வக்கிரம் அடைவது நல்ல தல்ல. இருப்பினும் குருவின் பார்வை இராசிக்கு கிடைப்பதால் சகல தோசங்களையும் நிவர்த்தி யாக்கும், இரண்டாம் 9ஆம் அதிபன் சொந்த வீட்டில் இருப்பதால் பணப்புழக்கம் தாராள மாக இருக்கும் உங்கள் சொல் எங்கும் செல்லும் பிதா பூரண சுகமாக இருப்பார். தலயாத்திரை அமையும். குருவிடம் அல்லது பெரியவர்களிடம் இருந்து பெறுமதியான வார்த்தை கிடைக்கும். 3ஆம் 8ஆம் அதிபன் 12இல் இருப்பதால் உடல் நலம் பாதிக்கும் மனப்பயம் இருக்கும். 4ஆம் 7ஆம் அதிபன் 9இல் இருபபதால் மாதா நலம், வீடு, வாகன சுகம் உண்டு 4இல் கேது இருப்பதால் வாகன ஓட்டிகளுக்கு கவனம் வேண்டும். தொழிலில் போட்டி நிலவும்.



## துலாம்:

**சித்திரை 3,4.சுவாதி.விசாகம் 1,2,3.**

இராசிநாதன் அட்டமாதிபன் ராகுவின் நட்சத்திரமான சுவாதியில் சஞ்சரிப்பதால் பொதுவாக நன்மை. நினைத்த காரியம் தாமதமானாலும் சாதகமாக முடியும். இரண்டாம் ஏழாம் அதிபன் 11இல் இருப்பது சிறப்பல்ல இவ்விராசிக்கு 11ஆம் வீடு பாதகத் தன்மையைக் கொடுக்கும். கைப்பொருள் விரயமாகும் குடும்பத்தவர்கள் எதிர்ப்புக் காட்டக் கூடும். சில சமயம் நண்பர்கள் தூர விலகக் கூடும். சகோதர உதவி இருக்காது. தேக சுகம் பாதிப்படையலாம். வீடு, வாகனங்களால் செலவு ஏற்பட இடம் உண்டு. தொழில் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும். குறுந்தூரப் பிரயாணம் அமையும்.



## விருச்சிகம்:

**விசாகம் 4. அனுசம்.**

கேட்டை இராசி நாதன் தசம கேந்திரத்தில் இருப்பதால் இராசிக்கு முறையே சனி, குரு, செவ்வாய், சூரியன் ஆகிய கிரகங்களின் பார்வை கிடைக்கும். முக்கியமான பல காரியங்கள் செய்து முடிப்பீர்கள். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். அலைச்சல் இருக்கும் பண விரயம் இருக்கும். எதிரிகளின் தாக்குதலுக்கு இலக்காகக் கூடும். இருந்தாலும் எல்லாக் காரியமும் உங்களுக்கு சாதகமாக அமையும் நீண்ட நாள் கனவு நனவாகும் மாதா, பிதாவுக்கு சேவை செய்யக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும். தொழில் உங்கள் வசப்படும். நன்மை செய்தாலும் நல்ல பெயர் கேட்க மாட்டீர்கள்.



## தனு:

**மூலம், பூராடம், உத்தராடம் 1.**

இராசி நாதன் நான்காம் அதிபன் சந்திரனின் நட்சத்திரமான ரோகினியில் வக்கிரகதியில் சஞ்சரிப்பது நல்லதல்ல செய்யும் செயல் தடைப்படலாம். பணக்கஷ்டம் இருக்கும். இராசியில் கேது, இருப்பதால் உண்மை விளங்கும். தெய்வீக நாட்டம் இருக்கும். 7இல் ராகு இருப்பதால் குடும்ப உறவு பாதிப்படையும். பொதுமக்கள் மத்தியில் எதிர்ப்பு இருக்கும். கூட்டு வியாபாரம் நஷ்டமடையும். சகோதரர்களிடத்திலோ உறவினரிடத்திலோ கடன்பட நேரிடும். கணபதியின் அருளால் வெற்றி நடைபோடு வீர்கள். மாதா, பிதா உடல் நலம் பாதிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும்.



## மகரம்:

**உத்தராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1, 2.**

இராசி நாதன் சூரியனின் நட்சத்திரமான கார்த்திகையில் வக்கிரகதியில் சஞ்சரிப்பதால் சில பின்னடைவை எதிர்பார்த்தாலும் புண்ணிய ஸ்தானத்தில் குருவோடு இருப்பதால் எதிர் பாராத யோகம் அமையும். நீண்ட நாள் திட்டமிட்ட செயல் செய்து முடிப்பீர்கள். குருவின் பார்வை இராசிக்கு கிடைப்பதால் ஓரளவுக்கு ஆறுதல் உண்டு. 4ஆம் 11ஆம் அதிபன் 8இல் இருப்பதால் வீடு வாகன சுகம் இல்லை. மாதா உடல் ஆரோக்கியம் கெடும். உறவினர் பகை கொள்ளக்கூடும். நண்பர் களாலும் உதவி இல்லை. தொழில் துறையில் அமைதி நிலவும். பதவி உயர்வு இருக்கும். மதிப்பு உயரும்.



## கும்பம்:

**அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1, 2,3.**

இராசிநாதன் வக்கிரகதியில் சுகஸ்தானத்தில் இருப்பதும் செவ்வாயின் பார்வை இராசியில் படுவதும் நன்மையே 4ஆம் 9ஆம் அதிபன் ஆட்சியாய் இருப்பதால் தாய் நலம், தகப்பன் நலம், வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விருந்துக்கு அழைப்பர். மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டுவர். பணப் புழக்கம் தாராளமாக இருக்கும் 7ஆம் அதிபன் 8இல் இருப்பதால் குடும்ப உறவு சீராக இருக்காது. மனைவியின் கோபத்துக்கு ஆளாகக் கூடும். 5ஆம் வீட்டில் ராகு இருப்பதால் மனம் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்காது. கற்பனையில் வாழ்வீர்கள். தொழில் செய்யும் இடத்தில் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு.



## மீனம்:

**பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

இராசி நாதன் 3இல் இருப்பது பொதுவாக நன்மை இல்லை. இருப்பினும் செவ்வாய், சூரியன், சுக்கிரனின் பார்வை இராசிக்கு கிடைப் பதால் பல திக்கிலிருந்தும் உதவி கிடைக்கும். 4இல் ராகு இருப்பதால் வீடு, வாகன செலவை ஏற்படுத்தும். கல்வியில் ஆர்வம் இல்லை, உறவினர் பகை கொள்வர். காதலர் வாழ்வில் கசப்பான அனுபவம் கிடைக்கும். 10இல் கேது இருப்பதால் தொழில் துறையில் போட்டி இருக்கும். பதவி கவிழ்க்கத் தயார் நிலையில் ஆள் இருக்கும். பணத் தட்டுப்பாடு இருக்கும். அம்மன் அருள் கிட்டும். நண்பர்கள் உதவி புரிவர்.

# இப்படியும் சொன்னார்கள்

தொகுப்பு: பன்னீர்செல்வம்



பொலிஸ் மா அதிபர் சுகவீனமுற்று சிங்கப்பூர் சென்றுள்ளார் சிகிச்சைக்காக. அவர் நாட்டில் இருந்துதான் என்ன நடந்தது? நோயாளியாகவே அவர் செயற்பட்டதுதான் மிச்சம்.

- அநுரா பண்டாரநாயக்கா (ஐ. தே.க)



*நான் யாருக்கும் சவாலாகக் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடவில்லை. நிச்சயம் நாடாளுமன்றம் செல்வதற்கான வாக்குப்பலம் எனக்குக் கிடைக்கும்.*

*- கரு. ஜயசூரிய (ஐ. தே. க. தவிசாளர்)*

நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் பிரபாகரனுடன் தொடர்பு வைத்துள்ளன, ஆனால் இருதரப்பினரும் பிரபாகரனுடன் மறுதரப்பினர் தொடர்பு வைத்திருக்கின்றனர் என்று ஒருவரை யொருவர் பரஸ்பரம் குற்றஞ் சாட்டுகின்றனர் இவ்வாறு கூறுவதன் மூலம் பெரும்பான்மையினத்தவரின் ஆதரவைப் பெற்று அரசமைத்து சுகபோகங்களை அனுபவிப்பதே அவர்களின் பிரதான இலட்சியமாக இருக்கிறது.

- கங்கொடவில சோம தேரர்



*இலங்கையில் நடைபெறும் பொதுத் தேர்தலை இலங்கைக்கு உதவி வழங்கும் உலக நாடுகள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றன. நீதியான, சுதந்திரமான தேர்தல் நடந்தாலே உதவிகள் கிடைப்பது உறுதியாகும்.*

*— ஜோன் அமரதுங்க (ஐ. தே. கட்சி)*

*தமிழரின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் நான் தமிழ்ப் பிரதேசத்தில் போட்டியிடாது கொழும்பில் போட்டி யிடுவதன் காரணம் சிங்கள மக்கள் மத்தியில் உண்மையை எடுத்துக்கூறவே.*

*— விக்கிரமபாகு கருணாரத்ன (புதிய இடதுசாரி முன்னணி)*



*புலிகள் இயக்கத்திற்கும், ஈழத்திற்கும் எதிராக வடக்கு—கிழக்கில் இருக்கக் கூடிய ஒரு தலைவர் வரதராஜப் பெருமாள். எனவே அவர் பொ. ஐ. முன்னணியில் இணைந்தது பெரும் கௌரவமாகும்.*

*— அமைச்சர் மங்கள சமரவீர*



தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு ஏற்படுத்தப்படுவதற்கு முக்கிய பங்கு வகித்தேன். ஆனால் எனக்கோ மூத்த அங்கத்தினர்களுக்கோ மரியாதை கிடைக்காததோடு இதன் பயன் மக்களைச் சென்றடையவும் இல்லை. காரணம் மக்களோடு இணைந்து செயற்படாததே

- பி. பி. தேவராஜ் (முன்னாள் எம்.பி)

# கருணாநிதியின் சால்வையா? ஜெயலலிதாவின் முந்தானையா?

2001ஆம் ஆண்டு பிறந்து சில மாதங்களில், அதாவது எதிர்வரும் ஆறேழு மாதங்களுக்குள் தமிழக சட்ட சபைக்குப் பொதுத்தேர்தல் வந்துவிடும்.

தமிழக ஆட்சியைப் பிடித்துவிட அனைத்துக் கட்சிகளுமே முட்டி மோதுகின்றன. ஆயினும் அங்கு நடைபெறவுள்ள பலப்பரீட்சை கருணாநிதிக்கும் ஜெயலலிதாவுக்கும் மத்தியில்தான். - இது அரசியல் விமர்சகர்களின் கணிப்பு



முதலமைச்சர் கருணாநிதி தமது பதவியை மீண்டும் நீடிக்க முயலுகிறார். ஆனால் அவர் காலை வாரிவிட ஜெயலலிதா முனைந்து நிற்கிறார்.

இந்நிலையில் இருவரையும் முன்னிலைப்படுத்தி "எங்களுக்கு எத்தனை சீட்" என்று பேரம் பேசி இரு கூட்டணிகளை ஏற்படுத்தி பதவிகளைப் பங்குபோட்டுக் கொள்ள ஏனைய கட்சிகள் முயலுகின்றன.

"கலைஞரோடை சால்வையைப் புடிச்சிக்கிட்டு சில பேரு தொங்குவாங்க. புரட்சித் தலைவியோடை முந்தானையைப் புடிச்சுக்கிட்டு மத்தப் பசங்க தொங்குவாங்க" என்று சாதாரண மக்களே கூறத்தொடங்கிவிட்டார்கள்.

அதே நேரத்தில் கருணாநிதியோ, ஜெயலலிதாவோ மிடுக்காக "இந்த முறை கூட்டணி வேண்டாம். நாம் தனிக்கட்சியாகவே போட்டியிடப்போகிறோம் என்று வீறாப்பு பேசும் நிலையிலும் இல்லை. "எனது எதிரியின் எதிரி எனது நண்பன்" என்ற தோரணையில் கோஷ்டி சேர்ந்து கொண்டே இருப்பார்கள்.

தமிழக அரசியலில் வெற்றி ஜாதி அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஜாதிக்கும் ஒரு கட்சி இருக்கிறது.

அதிலும் வன்னியர் இனத்தின் பெரும்பான்மையினர் ஆதரவு டாக்டர் ராம்தாஸின் பாட்டாளி மக்கள் கட்சிக்கு இருக்கிறது. வாழப்பாடி ராமமூர்த்தி அதில் பங்கு போட முயலுகிறார்.

பா.ம.க.வின் வாக்கு வங்கியைத் தனது கேடயமாக வைத்துக் கொண்டு அனைவரையும் ஆட்டிப்படைக்கப் பார்க்கிறார் ராம்தாஸ்.

தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் மூப்பனாருக்கும் அதே மாதிரியான எண்ணம் உண்டு.

ஆயினும் மூப்பனாரோ, ராம்தாஸோ தனித்து நின்ற வெற்றி பெறமுடியாதவர்கள். ஆனால் தாம் கூட்டணி சேர்ந்துள்ள கட்சிகளுக்கு வெற்றியைத் தேடித்தரக் கூடியவர்கள்.

இந்தக் "கறிவேப்பிலை"த் தன்மையை இவர்கள் கொண்டிருப்பதால் தமிழக அரசியலில் இவர்களும் "கமகம"வென்று மணக்கிறார்கள்.

இந்த வரிசையில் தான் வை.கோ.வின் ம.தி.மு.க., முஸ்லிம் லீக், கம்யூனிஸ்ட் கட்சி அகியனவும் இருக்கின்றன.

பெரியாரின் சீடன் வீரமணி, ஜெயலலிதா தாஸன் ஆகிவிட்டார். இவர்கள் அனைவருமே "கும்பலிலே கோவிந்தா" போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களால் ஆட்சிப்பீடம் ஏறமுடியாது. அதனால் சால்வையையும் முந்தானையையும் மாறி மாறிப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

வன்னியர் இனத்துக்கு மாறானவர்கள் தலித் பிரிவினர். அவர்களுக்கு ஜெயலலிதா புகலிடம் கொடுத்திருக்கிறார். அந்த அணியில் பா.ம.க.வுக்கு இடம் இல்லை. எனவே கருணாநிதியுடன் எத்தகைய முரண்பாடு ஏற்பட்டாலும் அதனைச் சமாளித்துக்கொண்டிருக்கிறார் ராம்தாஸ்.

மூப்பனார் முரண்டு பிடித்ததால் அவருக்கு "நீடித்த கல்தா" கொடுத்து விட்டார் கருணாநிதி. எனவே ஜெயலலிதா அடித்தாலும் உதைத்தாலும் அவர் முந்தானையையே பற்றிக் கொண்டு இருக்க வேண்டிய நிலை மூப்பனாருக்கு.

உதிரிக் கட்சிகள் யாவுமே கருணாநிதியுடனோ, ஜெயலலிதாவுடனோ கூட்டுச் சேர்ந்து தங்களையும் காப்பாற்றி அவர்களுக்கும் வெற்றிகளைத் தேடித்தர வேண்டிய நிலையில் இருக்கின்றன.

இந்த இரு கட்சிகளும் இன்றி மூன்றாவது அணி ஒன்றை ஏற்படுத்தப்பார்த்தார்கள். கடந்த தேர்தலில் மூன்றாவது அணி கோவிந்தா. எனவே இம்முறை மூன்றாவது அணி என்ற பேச்சே எழப்போவதில்லை.

இந்தியப் பொதுத் தேர்தலில் முதல் தடவை ஜெயலலிதா அணி அமோக



வெற்றி பெற்றது. பிரதமர் வாஜ்பாயை ஜெயலலிதா வாட்டி எடுத்தார். ஆட்சி கவிழ்ந்தது.

அடுத்த தடவை கருணாநிதி அணி வெற்றி பெற்றது. மீண்டும் வாஜ்பாயே பிரதமரானார். அதன் மூலம் கருணாநிதியின் பலம் ஓங்கியது.

வாஜ்பாய் அரசு மிகக் குறைந்த பெரும்பான்மையுடன் ஆட்சி நடத்தினாலும் அதனை வீழ்த்தும் எண்ணம் யாருக்கும் இல்லை. தற்போது ஜெயலலிதாவினாலும் அது முடியாது.

கருணாநிதி ஆட்சியில் தமிழகம் சில பிரச்சினைகளை எதிர் நோக்கினாலும் அதனைத் தட்டிக்கேட்கும் நிலையில் ஜெயலலிதா இல்லை. தனக்கு எதிரான ஊழல் வழக்குகளைச் சமாளிப்பதிலேயே அவர் நேரம் போய்விடுகிறது.

எனவே கருணாநிதி மீண்டும் ஆட்சிக்கு வருவார் என்பதில் தி.மு.க. அணியினர் உறுதியாக இருக்கிறார்கள். ஆயினும் கருணாநிதி தனது சால்வையில் தொங்குவதற்கு எத்தனை பேருக்கு இடம் கொடுப்பார் என்பதில்தான் வெற்றி தங்கியிருக்கிறது.

அதே நேரத்தில் ஜெயலலிதாவின் முந்தானையும் உறுதி தளர்ந்து விடப்போவதில்லை. கூட்டணி அரசியலில் தமிழகம் திமிலோகப்படத்தான் போகிறது.

-கதாசி

## ஜெயலலிதாவின் லண்டன் ஹோட்டல்!

ஜெயலலிதாவின் ஊழல் மோசடிகளில் இறுதியாக வெளிவந்திருக்கும் தகவல் அவருடைய லண்டன் ஹோட்டல் பற்றியதாகும்!

இங்கிலாந்தில் இரண்டு ஹோட்டல்கள் வாங்குவதற்கு ஜெயலலிதா உதவினார் என்பது தான் குற்றச்சாட்டு.

வட இங்கிலாந்து பகுதியில் 1000 ஏக்கர் நோர்த்தம் பர்லாண்ட் பெருந்தோட்டத்தில் "ஸ்லேலி ஹோல்" என்னும் ஹோட்டல் அமைந்திருக்கிறது. அந்த ஹோட்டலின் படம் இங்கு பிரசுரமாகியிருக்கிறது.



இந்த ஹோட்டலில் 142 அறைகள், நீச்சல் குளம், ஜிம்னாஸ்டிக் அரங்கு கோல்ப் மைதானம் அகியன இருக்கின்றன. ஆடம்பரம் நிறைந்த சொகுசு ஹோட்டல் அது.

"ஹொப்ஸ் கிராப்ட்" என்னும் மற்றொரு ஆடம்பர ஹோட்டல் பற்றியும் குறிப்பிடப்படுகிறது. இந்த இரு ஹோட்டல்களின் உரிமையாளர், ஜெயலலிதாவின் தத்துப்புத்திரனான டி.டி.வி. தினகரன். இவர் லோகசபையில் ஒரு அ.தி.மு.க. எம்.பி.

இந்த இரு ஹோட்டல்களின் பெறுமதி இந்திய நாணயப்படி 260 கோடி ரூபா. இந்த ஹோட்டல்களைத் தினகரன் வாங்க ஜெயலலிதா பணம் உதவி செய்திருக்கிறார்.

இது தொடர்பாக தமிழக அரசின் ஊழல் தடுப்பு இயக்குநர் வழக்குத் தொடர்ந்திருக்கிறார். குற்றச் சாட்டை நிரூபிக்கப் போதிய ஆதாரம் உண்டு என்று கூறுகிறார் ஊழல் தடுப்பு உயரதிகாரி எஸ். சுனைபதி.

தம்மீது புதிதாக வழக்குப் பதிவு செய்தது சட்ட விரோதமென்று ஜெயலலிதா மனுத்தாக்கல் செய்திருக்கிறார்.

ஜெயலலிதா தமது பதவியைத் துஷ்பிரயோகம் செய்து சம்பாதித்த பணத்தில் தான் தினகரன் வெளிநாட்டில் சொத்து குவித்தார் என்று நிரூபிக்க முயலுகிறார்கள்.

அவ்விதம் அவர்கள் ஓரிரு மாதங்களில் நிரூபித்தால் அது தமிழகத் தேர்தலில் ஜெயலலிதாவைப் பாதிக்கும்.


மின்னல் வேகத்தில் நோய்களை குணமாக்கும்

**இந்திய சித்த வைத்தியம் + வர்மக்கலை**

நாள் முழுவதும் மருத்துவம் பார்க்க தேவையில்லை, மருந்து அருந்த நோய் முற்றாக நீங்கி சுகமாக வாழலாம் காரணம்,

*பரிபூரண சுகம்*

| | |
|---|---|
| லூகேமியா | (இரத்த, புற்று நோய்) |
| ஆத்தரைட்டிஸ் | (கை, கால், மூட்டு வலி) |
| பிட்ஸ் | (வலிப்பு நோய்) |
| சையனசைட்டிஸ் | (தீராத தலைவலி, தொடர்ச்சியான தும்மல்) |
| அல்சர் | (நெஞ்சு எரிச்சல், குடற்புண், வயிற்றுப்புண்) |
| ஆஸ்துமா | (இளைப்பு நோய், தீராத சளி, மூச்சுத்திணறல்) |
| பெரலைஸ் | (பக்க வாதம், பாரிசவாதம்) |
| தைரொய்டு | (ஆப்பரேசன் இல்லாமல்) |
| பய்ல்ஸ் | (மூல வியாதி, ஆப்பரேசன் இல்லாமல்) |
| ஸ்பொன்டிலோசிஸ் | (முதுகு தண்டு வடநோய், அடி முதுகுவலி) |

கசாயம், பத்தியம் கிடையாது. முற்றிலும் மூலிகைகளால் ஆன எமது முன்னோர்கள் போற்றிய மருத்துவம்

**டாக்டர். பா. சுரேஸ் S.M.P (இந்தியா)**

பார்க்கும் நேரம் காலை 10.30 முதல் மாலை 6.00 மணிவரை
41A, பஸ் ஸ்டேண்ட் (ஒக்கிட் சலூன் அருகில்) ஹட்டன்;
051-24203

# அம்பாறை தமிழ் முஸ்லிம் பிரதிநிதித்துவம் எப்படி?

-ஆர். துரைரத்தினம்

அம்பாறை மாவட்டத்தில் அமைச்சர் அஷ்ரப் மறைவையடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வாக்குகள் சிதறிப் போகலாம் என அஞ்சப்படுகிறது.

கடந்த காலங்களில் அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளுக்கு முஸ்லிம், தமிழ் மக்கள் வாக்களித்த போதும் சிங்களப் பிரதிநிதிகளே தெரிவாகினர்.

திகாமடுல்ல மாவட்டத்தில் அம்பாறைத் தொகுதி மட்டுமே சிங்கள வாக்காளர்களைக் கொண்ட தொகுதி.

ஏனைய சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் ஆகியன முஸ்லிம், தமிழ் வாக்காளர்களைக் கொண்ட தொகுதிகள்.

ஆறு நாடாளுமன்றப் பிரதி நிதிகளைக் கொண்ட அம்பாறை மாவட்டத்தில் இன விகிதாசாரப்படி பார்த்தால் நான்கு முஸ்லிம் பிரதிநிதிகளும் ஒரு சிங்களப் பிரதிநிதியும் ஒரு தமிழ்ப் பிரதிநிதியும் தெரிவாக வேண்டும். ஆனால் 1994 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து மூன்று பிரதிநிதிகளும் பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து ஒருவருமாக நான்கு சிங்களப் பிரதிநிதிகள் தெரிவாகினர்.

இக்கட்சிகளிலிருந்து தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் எவரும் தெரிவாகவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து இரு முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவாகினர்.

60 ஆயிரம் தமிழ் வாக்காளர்களைக் கொண்ட அம்பாறை மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதி ஒருவர் கூடத் தெரிவாகவில்லை.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் தெரிவாக வேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை ஏழாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்புமனு மேல் முறையீட்டு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழர் மகாசபை, ஈ. பி. டி.பி, ரெலோ இணைந்து போட்டியிடும் சுயேச்சைக் குழு ஒரு ஆசனத்தைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த சுயேச்சைக்குழுவில் போட்டியிடும் தமிழர் மகாசபையா, ஈ.பி.டி.பியா அல்லது ரெலோ சார்ந்த வேட்பாளரா வெற்றி பெறுவார்? அம்பாறைத் தமிழ் மக்கள் மத்தியில் தமிழர் விடுதலைக் கூட்டணியே அதிக செல்வாக்குள்ள கட்சியாக விளங்குகிறது. கூட்டணியை ஆதரிக்கும் வேட்பாளருக்கே வெற்றி வாய்ப்பு அதிகம்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கோ ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது பேரினவாதக் கட்சிகளுக்குத் துணைபோகும் ஈ.பி.டி.பி போன்ற கட்சிகளுக்கோ ஆதரவு வழங்கப்போவதில்லை எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபசெயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தமிழர் மகாசபைக்குக் கூட்டணி ஆதரவு வழங்குமா என்பது சந்தேகம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இப்போது ஓரளவு ஒத்துப்போவது ரெலோ. அதனால் ரெலோ வேட்பாளர்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். தமிழ், முஸ்லிம் மக்கள் தத்தமது பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்படவில்லை என்றால் கடந்த காலங்களைப் போலவே இம்முறையும் ஏமாற்றம்தான்.

# ஹக்கீமின் அமைச்சர் பதவி

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இணைத் தலைவரும் தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளருமான ரவூப் ஹக்கீமுக்கு அமைச்சர் பதவி இப்போது ஒன்றும் பெரிதாகத் தெரியவில்லை.

இது விடயத்தில் அந்த அளவுக்கு அவருடைய மனம் ஏற்கனவே நொந்து போய்விட்டது.

அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரபின் மரணத்தை அடுத்து அவருடைய அமைச்சர் பதவி ஹக்கீமுக்கு என்று உறுதி அளிக்கப்பட்டது. எனினும் அதை வழங்குவதில் சட்டப் பிரச்சினை, அது, இது என்று எத்தனையோ இழுத்தடிப்புக்கள்!

ரவூப் ஹக்கீமுக்கு அமைச்சர் பதவி என்றதும் அதற்குக் கடும் ஆட்சேபனை தெரிவித்தவர் அமைச்சர் டி.எம்.ஜயரத்ன. பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளராகக் கடமையாற்றுபவர் அவர். பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, போன்றவர்கள் அவருடன் ஒத்து ஊதினர்.

ரவூப் ஹக்கீமுக்கு அமைச்சர் பதவியை வழங்கினால் கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் டி.எம். ஜயரத்ன அங்கு தனது அரசியல் செல்வாக்குக்குப் பங்கம் ஏற்படலாம் என்று அஞ்சுகிறார்.

அமைச்சர் பதவி வழங்குவதில் உள்ள இழுபறி குறித்து முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் ஆத்திரமடைந்து இருந்தது உண்மை. பின்னர் ஆத்திரம் தணிந்து அமைதியானார்கள்.

தேர்தல் நெருங்கிவிட்டது. இனி எத்தனை நாட்களுக்கு அமைச்சர் பதவி? அது இருந்தென்ன, இல்லாவிட்டால் என்ன? என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள்.

இந்த விடயத்தில் மு.கா.இன் இணைத் தலைவியான பேரியல் அஷ்ரப் எந்த விதத்திலும் தலையிடவில்லை.

தனது காலஞ்சென்ற கணவனுக்கு, ஒரு முஸ்லிம் குடும்பத் தலைவி என்ற வகையில் நிறைவேற்ற வேண்டியிருக்கும் கடமைக்கே அவர் முதலிடமளிப்பதாக அவரைச் சூழ்ந்திருக்கும் பெண்கள் தரப்பு சுட்டிக் காட்டுகிறது.

முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைக்கப்போகும் வாக்குகள் யாவும், "காலஞ்சென்ற எனது கணவர் அமைச்சர் அஷ்ரப்புக்காகவே கிடைக்கும். மற்றபடி நான் அஷ்ரப்பின் மனைவி என்ற காரணத்தால் அல்ல'' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

## போரும் தேர்தலும்: யார் செய்த தவறு?

*(4ஆம் பக்கத் தொடர்ச்சி)*

திருப்பித் தர வேண்டும் என்று கோரியே அவர் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார்.

இரண்டாம் நாளே தமிழ் நாட்டின் அப்போதைய முதல்வர் எம்.ஜி.ஆர். ஆயுதங்களைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். பிரபாகரன் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

அவர் வழியில்தான் திலீபன் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

''திலீபா நீ முன்னே போ. நான் உன்னைப் பின் தொடர்வேன்'' என்று சொல்லித்தான் திலீபனைப் பிரபாகரன் நல்லூரில் உண்ணாவிரதம் இருக்க வழியனுப்பி வைத்தார்.

திலீபனின் மரணத்தை அடுத்து அக்டோபரில் நடந்த சம்பவம் புலிகளை மீண்டும் ஆயுதப் போராட்டத்திற்குத் திரும்ப வைத்துவிட்டது.

இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் நிலை கொண்டிருந்த காலம் அது.

இந்தியாவிலிருந்து படகில் வந்தபோது இலங்கைக் கடற் படையினரால் கைது செய்யப் பட்ட 17 புலிகளில் குமரப்பா மற்றும் புலேந்திரன் முதலான 12 பேர் பலாலி விமான நிலையத்தில் சயனைட் சப்பி உயிர் விட்டனர்.

கைதானவர்கள் எல்லோரையும் கொழும் புக்குக் கொண்டு வருமாறு அப்போதிருந்த தேசிய பந்தோபஸ்து பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி உத்தரவிட்டார்.

இந்தியப் படையினர் அதற்கு இணங்கக் கூடாது என்று புலிகள் கேட்டனர். அத்துலத் முதலி விடவில்லை. இந்தியப் படை அதிகாரிகளால் ஒன்றும் செய்யமுடியாமல் போய்விட்டது.

இந்த நிலையில்தான் 17 போராளிகளும் கொழும்பு செல்வதை விட உயிரை விடுவது மேல் என்று துணிந்தனர். எப்படியோ சயனைட் பெற்று அதைச் சப்பித் தற்கொலை செய்ய முயன்றனர் சயனைட் வேலை செய்வதற்கு முன்னர் 5 பேர் அதிகாரிகளால் காப்பற்றப்பட்டு விட்டனர். குமரப்பா, புலேந்திரன் உட்படப் 12 பேர் இறந்தனர்.

தளபதி குமரப்பாவும் தளபதி புலேந்திரனும் விவாகமாகி ஒரு மாதத்துக்குள்ளேயே தமது உயிரை இப்படி மாய்த்துக் கொண்டனர்.

யாழ்ப்பாணத்தின் முன்னாள் தளபதி கிட்டு இந்தியப் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி அளித்த போது ஒரு விஷயத்தை முக்கியமாக எடுத்துச் சொன்னார்.

''நாங்கள் ஆயுதங்களை மட்டும் நம்பிப் போராட்டத்தில் இறங்கவில்லை. எங்களுடைய மனோ பலத்தில் தான் எங்களுக்கு அதிக நம்பிக்கை'' என்று கிட்டு சொன்னார்.

அவர் சொன்னதை திலீபன், குமரப்பா புலேந்திரன் முதலானோரின் உயிர்த்தியாகம் நிரூபித்துவிட்டது.

புலிகளுக்கு இந்தியப் படை மீது ஆத்திரம் வந்தது. கையாலாகாத இந்தப் படையினரை நம்பிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தனர். ஆவேசத்துடன் இந்தியப் படையை எதிர்த்துப் போர் தொடுத்தார்கள்.

உலகின் மிகப் பெரிய படைகளில் ஒன்றான இந்தியப் படைக்கு இலங்கையில் ஏற்பட்ட இழப்புகளை அந்தப் படை என்றுமே மறக்க மாட்டாது.

இப்படித்தான் அகிம்சைப் போராட்டத் துக்குத் தம்மைத் தயார் படுத்திக் கொண்ட புலிகள் ஆயுதப் போராட்டத்துக்குத் திரும்பினர்.

இவையெல்லாம் பழைய கதைகள்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசு பதவிக்கு வந்த பின்னர் அந்த அம்மையார் சமாதான முயற்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்துப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர் அல்லவா?

இதை அவரே பெருமையாகச் சொல்லிப் புலிகள் தான் பேச்சுவார்த்தையை ஒரு தலைப் பட்சமாக முறித்துக்கொண்டு போய் மீண்டும் சண்டையில் ஈடுபட்டார்கள் என்று குற்றம் சாட்டி வருகிறார்.

இதைப் புலிகள் மறுக்கிறார்கள்.

''சில அதிகாரிகளை வைத்தே அவர் எங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். அவர்களுக்கு எந்த விஷயத்திலும் தீர்மானம் எடுக்கும் அதிகாரமோ அந்தஸ்தோ இல்லை.

வெறுமனே நாம் சொல்வதைக் கேட்டுக்கொண்டு போய் ஜனாதிபதியிடம் கூறுவார்கள்.

ஜனாதிபதி சொன்னதையெல்லாம் எங்களிடம் வந்து கக்குவார்கள். அவ்வளவுதான்.

தமிழ் மக்களின் கஷ்டங்களை நீக்குவதற்கு எத்தனையோ காரியங்களைச் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதியைக் கேட்டோம். பல கடிதங்கள் எழுதினோம். எதுவும் நடைபெறவில்லை.

கடைசியில் பேச்சுவார்த்தைகளில் காலம் கழிந்து வருவதில் பயனில்லை என்று கண்டதும் ஜனாதிபதிக்குக் கால எல்லை குறிப்பிட்டு கடிதம் எழுதிவிட்டே பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகிக் கொண்டோம்.

1995 ஏப்ரல் 18ஆம் திகதி ஜனாதிபதிக்குத் தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதத்தில் இதைத் தெரிவித்திருந்தார்.

காலக்கெடுவும் பொருட்படுத்தப்படாததாலேயே பேச்சுவார்த்தைகளை நிறுத்தி தாக்குதலை ஆரம்பிக்க வேண்டியதாயிற்று.

அதன்படி முதலில் நடந்த சம்பவம் திருமலைத் துறைமுகத்தில் ஏப்ரல் 19ஆம் திகதி கடற் படையின் இரண்டு கப்பல்களைத் தாக்கி மூழ்கடித்த சம்பவம்தான்.''

இப்படிப் புலிகள் தரப்பில் கூறப்படுகிறது.

இவற்றை அலசி ஆராய்ந்து பார்த்தால் யுத்தம் தொடர்வதற்கு யார் காரண கர்த்தர்களாக இருந்தார்கள் என்பதும் இருக்கிறார்கள் என்பதும் எவருக்கும் புரியும்.

ஒருவர் மீது ஒருவர் குற்றச் சாட்டுகளைச் சுமத்திக்கொண்டு இருப்பதில் பயனில்லை.

புண் இருக்கும் வரை சீழ் வடியத்தான் செய்யும். புண் வராமல் தடுக்கலாம். வந்த பின்னர் கஷ்டப்பட்டுத்தான் மருந்து போட்டுக் குணமாக்க வேண்டும். அதற்கு நல்ல வைத்தியர் தேவை.

போர் - தேர்தல் இரண்டுக்கும் இது பொருந்தும்.

# தெற்காசியாவின் முதல் வீராங்கனை



இந்திய வீராங்கனை கர்ணம் மல்லேஸ்வரி மகளிருக்கான பளு தூக்கும் போட்டியில் வெண்கலப் பதக்கமொன்றை வென்றுள்ளார்.

69 கிலோ எடைப்பிரிவில் 240 கிலோகிராம் பாரத்தைத் தூக்கி இப்பதக்கத்தை இவர் பெற்றார்.

சிட்னி ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு மட்டுமல்லாமல் தெற்காசிய பிராந்தியத்துக்கே கிடைத்த முதலாவது பதக்கம் இதுவாகும்.

ஒலிம்பிக்கில் தனி நபர் போட்டிகளில் பதக்கம் பெற்ற மூன்றாவது இந்தியர் மல்லேஸ்வரி. 1952இல் கே.ரி.யாதவ் மல்யுத்தத்திலும் 1996இல் லியாண்டர் பயஸ் டென்னிஸிலும் வெண்கலப் பதக்கம் வென்றிருந்தனர்.

ஒலிம்பிக்ப பதக்கம் வென்ற முதலாவது தெற்காசிய வீராங்கனையும் இவரே.

24வயதான மல்லேஸ்வரி ஆந்திர பிரதேசத்தைச் சேர்ந்தவர். தங்கப் பதக்கத்தை பெறுவதற்கும் தான் முயற்சித்ததாகவும் ஆனால் பாதுகாப்பான வகையில் போட்டியிலீடுபடுமாறு பயிற்றுநர் அறிவுரை வழங்கினார் எனவும் மல்லேஸ்வரி கூறுகிறார்.

தனக்கு ஊக்கமளித்த கணவர், குடும்பத்தினர், பயிற்றுநர் ஆகியோருக்கு தான் கடமைப்பட்டிருப்பதாக கூறும் கர்னம் மல்லேஸ்வரி சிட்னி ஒலிம்பிக் போட்டிகளோடு ஓய்வு பெறுவதாகவும் அறிவித்துள்ளார்.

## ‘உணவு போதாது’

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் பகுதியில் கடமைபுரியும் பொலிஸார் தமக்கு மிகவும் குறைந்தளவு உணவே வழங்கப்படுவதாக புகார் செய்துள்ளனர்.

உணவகங்களில் 'இன்னும் கொஞ்சம் தரமுடியுமா என கெஞ்ச வேண்டியிருக்கிறது' என்கிறார் ஒரு அதிகாரி.

பொலிஸாருக்கு உணவு வழங்குவதற்கான உரிமையைப் பெற்ற ஒரு நிறுவனத்திடமிருந்தே இப் பிரச்சினை எதிர்நோக்கப்படுகிறது.

'குறித்த நிறுவனம் குறைந்த விலையில் உணவு வழங்க முன்வந்திருந்தது. ஆனால், குறைந்த விலையில் உணவு வழங்குவதென்பது உணவின் அளவைக் குறைத்து விடுவதே என அந்த நிறுவனம் கருதுகிறது போலும்' என்று பொலிஸ் அதிகாரிகளின் சம்மேளனப் பேச்சாளர் ஒருவர் கூறியிருக்கிறார்.

இது தொடர்ந்தும் நடைபெற்றால் அந்த நிறுவனத்திற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸாரினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பெப்ஸி போட்டி வேண்டுமா?

ஒலிம்பிக் போட்டிகளைப் பார்வையிடச் செல்பவர்களின் பைகள் விளையாட்டு அரங்குகளின் வாயிலில் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

இது பாதுகாப்பு காரணங்களுக்காக மட்டுமல்ல, உத்தியோகபூர்வ அனுசரணையாளர்களின் தயாரிப்புகள் அல்லாத பொருட்கள் அரங்கிற்குள் கொண்டு செல்வதைத் தடுப்பதற்காகவும் தான்.

உதாரணமாக உத்தியோகபூர்வ மென் பானம் கொகா கோலா. இதன் போட்டித் தயாரிப்பான பெப்ஸியுடன் யாரும் உட்செல்ல முடியாது.

அவுஸ்ரேலிய உணவு விநியோக நிறுவனமொன்று 'டெம்பர்' என்ற பெயரில் ஒருவகை 'ரோல்ஸை' விற்றுக் கொண்டிருந்தது. அதிகாரிகளுக்குத் தெரிந்தவுடன் குறித்த ரோல்ஸை உணவுப் பட்டியலிலிருந்தே நீக்கச் சொல்லிவிட்டார்கள். காரணம், பிரபல மெக்டொனால்ட்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பொன்றின் சாயலில் அது இருந்ததே. (மெக்டொனால்ட்ஸும் உலகளாவிய ஒலிம்பிக் அனுசரணையாளர்களில் ஒன்றாகும்).

பல மில்லியன் டொலர்களை செலவு செய்து பல நிறுவனங்கள் தமது தயாரிப்புகளை உத்தி யோகபூர்வ பொருட்களாக பதிவு செய்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் மாற்றுப் பொருட்களை அனுமதிப்பது முறையல்ல என்கின்றனர் சிட்னி ஒலிம்பிக் கமிட்டி அதிகாரிகள்.

# விளையாட்டுச் செய்திகள்!

—ஆர். சேதுராமன்

## ஒலிம்பிக்கில் ஒரு தவறு



ஸ்வெட்லானா

பல மில்லியன் டொலர் செலவில், நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி போட்டிகளை நடத்தினாலும் சில தவறுகளும் ஏற்படாமலில்லை.

மகளிர் ஜிம்னாஸ்டிக் போட்டியில் ஜிம்னாஸ்டிக் உபகரணம் குறைவான உயரத்தில் பொருத்தப் பட்டிருந்தமை இதில் ஒன்று.

உயரமான வீராங்கனைகள் பலர் இதனால் பாதிக்கப்பட்டனர். பதக்கம் பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட ரஷ்ய வீராங்கனை ஸ்வெட்லானா கோர்கினா முழங்காலில் அடிபட்டுக் காயமடைந்தார்.

இதன் பின்னரே 5 செ.மீ.உயரம் குறைவாக இருப்பது கண்டு பிடிக்கப் பட்டுத் திருத்தப்பட்டது.

ஆனாலும் அமெரிக்கா, கனடா நாடுகளின் அதிகாரிகள் தமது அதிருப்தியை வெளிப்படுத்த தவறவில்லை.

இப்போட்டியில் ருமேனியாவின் அன்றியா றடுகன் தங்கப்பதக்கம் பெற்றார். சிட்னி ஒலிம்பிக் போட்டிகளின் போதே அவர் 17வது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

தனது பிறந்தநாள் பரிசாக தங்கப்பதக்கம் கிடைத்துள்ளதாகக் கூறும் அன்றியா இதுபோல் எதிர்காலத்திலும் பல பிறந்தநாள் பரிசுகள் கிடைக்கும் என நம்புவதாகக் கூறுகிறார்.

## ஆடை களைந்தும் பயனில்லை!

முன்னணி போட்டியாளர்கள் பலர் காயங்கள், ஊக்க மருந்து பாவனை ஆகியவற்றின் காரணமாக ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து ஒதுங்கியிருக்கின்றனர்.

பிரிட்டனைச் சேர்ந்த டெபி அலென் உடல் எடை அதிகரித்த காரணத்திற்காக தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஜூடோ போட்டியில் 52 கிலோ பிரிவில் போட்டியிடும் வீராங்கனை இவர். போட்டிக்கு முன் எடை பரிசோதிக்கப்பட்ட போது 400 கிராம் அதிகமாகக் காணப்பட்டது.

பதறிப்போன அலென் உடனடியாக தனது நீண்ட தலைமயிரை கத்தரித்தார். ஆனாலும் பெறுபேறு திருப்தியில்லை. பின்னர் உடைகளையும் களைந்தார். அப்போதும் குறித்த அளவு எடைக்குள் வரமுடியவில்லை. இதன் காரணமாக அவர் 52 கிலோ பிரிவில் பங்குபற்ற அனுமதி மறுக்கப்பட்டார்.

கடந்த வருடம் ஐரோப்பிய சாம்பியனாகத் தெரிவான இவர், சிட்னி ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டவர்.

'எடைப் பரிசோதனையில் இலகுவாக நான் வெற்றி பெற்று விடுவேன் என நம்பியிருந்தேன். ஒலிம்பிக்கில் பதக்கம் பெறுவதற்காக இதுவரை எனக்கு உதவிய பலரையும் நான் ஏமாற்றத்திற்கு உள்ளாக்கி விட்டேன்' என்று கூறி கண்ணீருடன் வெளியேறினார் டெபி அலென்.

# மீண்டும் ஹெயார் முரளி மோதல்?



இலங்கையின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் சர்ச்சைக்குரிய அவுஸ்ரேலிய நடுவர் டெரல் ஹெயாருடன் மீண்டும் மோதும் சூழ்நிலை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

கென்யாவில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. கிண்ணப் போட்டியில் இலங்கை முதல் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியை எதிர்த்தாடவுள்ளது. இதில் வெற்றி பெறும் அணி அடுத்து பாகிஸ்தான் அணியுடன் போட்டியிட வேண்டும்.

பாகிஸ்தானுடனான போட்டிக்கு நடுவர்களில் ஒருவராக டெரல் ஹெயார் நியமிக்கப்பட்டுள்ளார். 1995இல் முரளிதரன் பந்தை எறிவதாக ஹெயார் குற்றம் சுமத்தினார். எனினும் பல சோதனைகளின் பின் முரளியின் பந்து வீச்சில் தவறில்லையென நிருபிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஹெயார் இதை ஒப்புக் கொள்வதாக இல்லை. தனது சுயசரிதை நூலிலும் முரளியைப் பற்றிக் குறிப்பிட்டு இனிமேலும் முரளி பந்தை எறிவதாக கருதினால் அதை 'நோபோல்' என அறிவிக்கத் தயங்கப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

முரளிதரன் தவிர குமார் தர்மசேனாவும் ஹெயாரின் குற்றப்பட்டியலிலுள்ள ஒருவரே. தர்மசேன 2 வருட காலத்தின்பின் கடந்த ஜூன் மாதம் தான் மீண்டும் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றார்.

கென்யா போட்டியில் டெரல் ஹெயாருடன் டேவிட் செப்பர்ட், ஸ்ரீவ் பக்னோர், வெங்கட் ராகவன், பீட்டர் வில்லி, டேவிட் ஒச்சார்ட் ஆகியோரும் நடுவர்களாகக் கடமை புரியவுள்ளனர்.

இலங்கை அணி பங்குபற்றும் போட்டிகளில் டெரல் ஹெயார் நடுவராக பங்குபற்றுவதை தடுக்க இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை முயற்சித்தால் முரளியும், தர்மசேனாவும் சங்கடத்துக்குள்ளாவதைத் தவிர்க்கலாம்.

## பதக்கம் பெற செல்கையில் கைதான வீரர்!

ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற வீரர்கள் சிலர் போட்டியின் போதும் அதன் பின்னரும் சில சங்கடங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. அவற்றுள் சுவாரஸ்யமான சம்பவங்கள் சில இங்கே:-

1920 "அன்ரிவர்ப்" ஒலிம்பிக் விழாவின் போது 4x100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில்தங்கப்பதக்கம் வென்ற அமெரிக்க அணியின் ஒரு வீரரான மொரிஸ் கர்க்ஸி பதக்கம் அணிவிக்கும் தருணத்தில் காணவில்லை. அவர் அந்நேரம் தனது அணியின் வெற்றியை ஹோட்டலறையில் கொண்டாடிக் கொண்டிருந்தார்.

பதக்கம் அணிவிக்கும் செய்தி அவருக்கு அறிவிக்கப்பட்டதும் துரிதமாக அவ்விடத்திற்கு விரைய நினைத்து மதில் சுவரொன்றிலிருந்து குதிக்க முயன்றவேளை பொலிசாரால் கைது செய்யப்பட்டார். தான் யாரென பொலிசாரிடம் கூறியபோதும் பொலிசார் அதை நம்பாது அவரைத் தடுத்து வைத்து விசாரித்த பின்பே விடுவித்தனர்.

1932 லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளின்போது ஆர்ஜன்டினா குத்துச் சண்டை வீரரான சந்தியாகோ லொவெல் அதிபாரப் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார். இதனால் மிகவும் இறுமாப்படைந்திருந்த அவர் சொந்த நகரான "புவனர்ஸ் அயர்ஸ்" திரும்புகையில் கப்பலில் தகாத செயல்களில் ஈடுபட்டார்.

தன்னை புவனர்ஸ் அயர்ஸ் நகர வாசிகள் மிகவும் கோலாகலமாக வரவேற்பார்களென எண்ணியிருந்த சந்தியாகோவுக்கு கிடைத்தது பொலிசாரின் வரவேற்பே. கப்பலிலிருந்து இறங்கியவுடன் பொலிசார் அவரை தகாத முறையில் நடந்து கொண்டதற்காக கைது செய்தனர். அவருக்குச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

நவீன "பென்டதலன்" போட்டியில் 1932ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்ஸில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஜொஹான் ஒக்சென்டிரியானோ தங்கம் வென்றார்.



இவர் மரங்கள் அடர்த்தியாக உள்ள பிரதேசத்தில் கைத்துப்பாக்கியினால் குறிபார்த்துச் சுடும் பயிற்சியிலீடுபட்டிருந்த போது பொலிசார் இவரை தீவிரவாதி எனக் கருதி கைது செய்தனர். தான் ஓர் ஒலிம்பிக் வீரரெனக் கூறியபோதும் பொலிசார் அதனை நம்பவில்லை பின்னர் போட்டியின் போது ஜொஹனை கண்டிருந்த பொலிஸ் அதிகாரி யொருவர் அங்கு வந்ததால் அவர் விடுவிக்கப்பட்டார்.

தொகுப்பு : த.அருள்

## ஆசிய, உலக அணிகள் ஓமானில் போட்டி




ஆசிய அணிக்கும் உலக அணிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டியொன்று ஓமானில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் ஆசிய அணிக்கு சச்சின் டெண்டுல்கரும் உலக அணிக்கு பிரையன் லாராவும் தலைமை தாங்கவுள்ளனர்.

நவம்பர் 3ஆம் திகதி ஓமான் தலைநகர் மஸ்கட்டிலுள்ள ரோயல் ஓமான் பொலிஸ் அரங்கில் நடைபெறும் இப்போட்டியில் வஸீம் அக்ரம், இன்ஸமாம் உல்ஹக், சஹீட் அப்ரிடி, சௌரவ் கங்குலி, அனில் கும்ளே, சனத் ஜயசூரிய, முத்தையா முரளீதரன், கொட்னி வோல்ஸ், ரிக்கார்டோ பொவெல், கிரிஸ் கெயின்ஸ், அடம் ஹோலியொக், மார்க் ராம்பிரகாஷ், டெரன் லெஹ்மன் ஆகியோரும் பங்குபற்றுகின்றனர்.

இப்போட்டி ஓமானில் 30வது தேசிய தினத்தையொட்டி ஓமான் கிரிக்கட் கவுன்ஸிலினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதலில் இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியே நடைபெறவிருந்தது. இந்தியா பாகிஸ்தானுடன் போட்டியிட விரும்பாததால் ஆசிய உலக அணிகளுக்கிடையிலான போட்டியாக இது மாற்றப்பட்டுள்ளது.

# பென்னம் பெரிய யானை: அடக்குகிறாள் 12 வயது சிறுமி



சிறுமி விஜயலட்சுமிக்கு 12 வயது. 7ஆம் வகுப்புப் படிக்கிறாள். இவளது கட்டுப்பாட்டில் இருக்கும் யானையின் உயரமோ 10 அடி அதன் தோற்றம் எல்லோரையும் பயமுறுத்தும். அதன் வயது 31.

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த இந்த மிகப் பெரிய யானையை விஜயலட்சுமி வழிநடத்திச் செல்லும்போது அதன் தந்தம் ஒன்றைப் பிடித்திருப்பாள். அருகில் சென்று பார்த்தால் தந்தத்தின் உயரம் தான் விஜயலட்சுமி.

யானை எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அது சிறுமியின் சொல்லையும், சைகையையும் அப்படியே ஏற்றுக் கொள்கிறது. ஒரு குழந்தையைப் போல அவள் அழைக்கும் இடத்திற்கெல்லாம் ஆடி அசைந்து செல்கிறது. யானையையும் சிறுமியையும் ஒன்றாகத் தெருக்களில் பார்ப்பவர்கள் பயந்து போகிறார்கள்.

இந்த யானையின் பெயர் கிருஷ்ணன். உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தது. பீகார் மாநிலத்தில் நடந்த யானைத் திருவிழாவில் இதனைப் பார்த்த கேரள யானைப் புரோக்கர் ஷாஜி, இதனை விலைக்கு வாங்கி வந்து விட்டார். அவரிடமிருந்து விஜயலட்சுமியின் அப்பா அசோக்குமார் அதனை வாங்கினார்.

விஜயலட்சுமி எப்படி யானைப்பாகன் ஆனாள்?

யானையைப் பீகாரில் இருந்து அசோக்குமார் வீட்டில் கொண்டு வந்து இறக்கிவிட்டு யானைப்பாகன்கள் சென்றுவிட்டார்கள்.

அதுவரை யானையின் காதுகளில் கேட்டது இந்தி மொழிதான். இந்திக்கார பாகன்களின் கட்டுப்பாட்டில்தான் அது இயங்கிக்கொண்டிருந்தது. பாகன்கள் திரும்பிப் போனதும் அசோக்குமார் குழம்பினார்.

ஒரு சிறிய கம்பைக் கையில் வைத்துக்கொண்டு பாகனைப்போல யானையை வழிநடத்த முயன்றார். அவருக்கு யானையை வழி நடத்தும் முறைப்படியான படிப்பு எதுவும் தெரியாது.

அசோக்குமாரின் மனைவியான வசந்தகுமாரியின் தம்பிக்கு யானையைப் பழக்கப்படுத்தத் தெரியும். அவர் அந்த முறையை அசோக்குமாருக்குச் சொல்லிக் கொடுத்தார்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுமி விஜயலட்சுமிக்கும் தைரியம் வந்துவிட்டது. அவளும் யானையை நெருங்கினாள்.

யானையை அவளும், அவளை யானையும் புரிந்து கொண்டு விடவே இப்போது தைரியமாக அதனை வழிநடத்திச் செல்கின்றாள்.

"எனக்குப் படிப்பு மிக முக்கியம். பாடசாலை நாட்களில் பாடசாலைக்குச் சென்று விடுவேன். விடுமுறை நாட்களில் யானையோடு செல்வேன். யானையைக் குளிக்க வார்க்க எனக்குத் தெரியும். அடிக்கடி கோவிலுக்கு அழைத்துச் செல்வேன். என் யானைக்கு மஞ்சள், சிறுபயறு சேர்ந்த அரிசிச் சோறு மிகவும் பிடிக்கும்" என்கிறாள் விஜயலட்சுமி.

"பொதுவாக சிறுமிகள் யானையைப் பார்த்தாலே அதிகதூரம் ஓடுவார்களே, உனக்குப் பயமே இல்லையா?" என்று கேட்டால்—

"யானையைப் பார்த்தால் ஓடுகிறார்கள். யானையைப் புரிந்து கொண்டால் அதனோடு நெருக்கமாகி விடுவார்கள். தூரத்தில் இருந்து பார்ப்பவர்களுக்குப் பயமே தோன்றும். எனக்கோ பாசமே தோன்றுகிறது." என்கிறாள் சிறுமி.

விஜயலட்சுமியின் உருவம் தான் சிறியது. தைரியமோ யானையை விடப் பெரியது.

# பட்...பட்! சுட்டுத்தள்ளும் பயங்கர இயந்திர மனிதன்!

உலகில் இன்று எங்கு பார்த்தாலும், ஏதாவது ஒரு கொலை, துப்பாக்கிச் சூடு, யுத்தம் நடந்து கொண்டேயிருக்கிறது. இதற்கு ஈடுகொடுப்பது போல ஒரு புதிய கண்டுபிடிப்பு விரைவில் உலகச் சந்தையில் பாவனைக்கு வந்து விடலாம்.

ஆள் தன் இஷ்டத்துக்குச் சுட்டுத்தள்ளும் இயந்திரம் ஒன்றைத் தாய்லாந்து விஞ்ஞானி ஒருவர் உருவாக்கியிருக்கிறார்.

பிரபல அறிவியல் புனைகதை எழுத்தாளர் ஐசாக் அசிமோவ் மனிதர்களால் உருவாக்கப்படும் இயந்திரங்கள் தொடர்பாக மூன்று விதிகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இயந்திரங்கள் மனிதர்களுக்குத் தீங்கு செய்யக் கூடாது. அதுபோல மனிதர்களும் இயந்திரங்களுக்குத் தீங்கு செய்யக்கூடாது என்பது முதலாவது விதியாகும்.

இரண்டாவது விதி, இயந்திரங்கள் மனிதர்கள் இடும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று கூறுகிறது. அதாவது முதலாவது விதியை மீறும் கட்டளைகளைத் தவிர மற்றவைக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

மூன்றாவது விதியின்படி, இயந்திரங்கள் முதலாவது விதிக்கோ, இரண்டாவது விதிக்கோ ஊறு விளைவிக்காத பட்சத்தில் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

தாய்லாந்து விஞ்ஞானி உருவாக்கியுள்ள இயந்திர மனிதன் இம் மூன்று விதிகளையும் மீறி விடுவான் போலிருக்கிறது.

இந்த இயந்திர மனிதனுக்கு ரோபோ கார்ட் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். துப்பாக்கி தாங்கிய இந்த இயந்திர மனிதன் மிகவும் மலிவானவன். சம்பளம் கொடுத்துச் சாப்பாடு போட்டு, தங்க இடமும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

யாரை எப்போது சுட வேண்டும் என்று நீயே முடிவு செய்துகொள் என்று அந்த இயந்திர மனிதனிடம் ஆணையிட்டால் போதும், சுட்டுத் தள்ளிவிடும்.

சுடுவதற்கு முன் ஒரு பாதுகாப்பான 'இன்டர்நெட்' இணைப்பு மூலம், தன் எஜமானிடம் "இவனை ஆமாவைச் சுடலாமா?" என்று கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ளும் "அறிவு வசதியும்" இந்த இயந்திர மனிதனுக்கு இணைக்கப்பட்டிருக்கிறது.

தாய்லாந்து, பாங்கொக்கில் இருக்கும், கிங் மொங்குட்ஸ் தொழில் நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த 'பிடிகாடே குரக்சா' என்பவரே இந்த இயந்திர மனிதனின் தந்தை.

இந்த 'ரோபோ கார்ட்' இயந்திர மனிதனிடம் ஒரு துப்பாக்கியும் ஒரு குட்டி வீடியோ கமெராவும் இருக்கிறது.

"இவன் இரண்டு விதமாகச் சுடுவான். நாமே அவனைச் சுட வைக்கலாம். அல்லது அவனாகவே சுடுவான்" என்கிறார் குரக்சா.

நாமே சுட வைக்கலாம் என்றால் உலகின் எந்தப் பகுதியில் இருந்து வேண்டுமானாலும் இன்டர்நெட் மூலம் ஆணையிட்டு சுட வைக்கலாம். துப்பாக்கியுடன் இருக்கும் ஒரு சிறிய லேசர் கற்றைக் கருவி மூலமே குறி பார்க்கப்படுகிறது.

அவனைப் புகுந்து விளையாட அனுமதித்து விட்டால் தன்னிடமுள்ள தன் "அகச் சிவப்பு உணர்விகள்" (Infra Red Sensors) மூலம் மக்கள் நடமாட்டத்தைக் கண்காணிப்பான். யாராவது போகக் கூடாத இடத்துக்குப் போக முயற்சித்தால் டுமீல்... டுமீல் தான்.

"யாரைச் சுடுவது, எப்போது சுடுவது என்பதையெல்லாம், மனிதர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். இல்லையென்றால் ரோபோ கார்ட் சகட்டு மேனிக்குச் சுட்டுக் கொன்று விடும்" என்கிறார் குரக்சா.

"அசிமோவ் கூறியது போன்ற விதிகளை உடனடியாக நாம் அமுலுக்கு கொண்டுவரவேண்டும். என்றாலும் கூட இயந்திர மனிதர்கள் அவற்றைச் சமாளிக்க வழி கண்டு பிடித்துவிடுவார்கள்" என்று பிரிட்டனின் ரெடிங் பல்கலைக்கழக விஞ்ஞானி கெவின் வார்விக் இதனைப் பற்றி எச்சரித்திருக்கிறார்.

"நினைத்தாலே பயங்கரமாக இருக்கிறது" என்கிறார் டி மோன் போர்ட் பல்கலைக்கழக ஆய்வாளர் கிறீஸ்.

இன்டர் நெட்டில் தாமதம் ஏற்பட்டால் என்ன செய்வது? தவறுதலாக யாரை வேண்டுமானாலும் சுட்டுவிட வாய்ப்பு இருக்கிறதே? அகச் சிவப்பு கதிர் விளைவை இயந்திர மனிதன் உபயோகிக்கும்போது சூரிய ஒளி வந்தால் அகச் சிவப்பு கதிர் பெருகி விடுமே? என்ற கேள்விகளும் இருக்கத்தான் செய்கின்றன.

இந்த இயந்திர மனிதனை வாங்கிப் பயன்படுத்தப் பல நிறுவனங்கள் இப்போதே தயாராக இருக்கின்றனவாம். ஆனால் குரக்சாதான் தயாரில்லை.

இராணுவத்துக்குத்தான் இதனை விற்பனை செய்வோம். இந்த ஆயுதம் நல்லவர்கள் கையில் தான் இருக்க வேண்டும் என்று கூறும் குரக்சா, இந்த இயந்திர மனிதனை நடமாடிச் செயற்பட்டுக்கொண்டே சுடக் கூடியவனாகவும் மாற்ற முடியும் என்றும் கூறுகிறார்.

ஏன்? துரத்தித் துரத்திக் கொல்வதற்கா?

